இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 189 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 20 சனிக்கிழமை 03.06.2017

## அநுரவுக்கு பிணை

கொழும்பு, ஜூன் 3
றக்பி வீரர் வசீம் தாஜுதீனின் படு கொலைச்சம்பவம்தொடர்பில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க பிணையில் செல்ல அனுமதிக் >> 25

# கொலைகள் புரிந்த இராணுவத்தினரை தண்டிக்காதது ஏன்?

## சந்திரிகா வெளியிட்டுள்ள கருத்துக் குறித்து காணாமற்போனோரின் உறவுகள் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 3
இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனவர்கள், இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று முன்னாள் அரச தலைவர் சந்திரிகா தெரிவித்துள்ளார், எனவே அதற்குரிய ஆதாரங்களையும் வெளியிடவேண்டும். இராணுவம் அவர்களைக் கொலை செய்துவிட்டது என்றால், குற்றத்தை மேற்கொண்டவர்களுக்குத் தண்டனையை வழங்கவேண்டியது தானே!

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் அவர்களது உறவினர்கள் நேற்றுக் காட்டமாகத் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வடக்கு - கிழக்கில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான நிலமையில், ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கருத்துத் தெரிவித்த முன்னாள் அரச தலைவர் சந்திரிகா, "காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உண்மையிலேயே உயிருடன் இருக்கின்றார்களா அல்லது உயிரிழந்துவிட்டார்களா என்பதைத் தேடிப் பார்க்க வேண்டும். எனக்குத் தெரிந்தவரை அப்படி யாரையும் முகாம்களில் மறைத்து வைக்கவில்லை. அப்போது ராஜபக்சவின் ஆட்சியிலிருந்த இராணுவத்தின் பழக்கத்திற்கேற்ப அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கலாம். அது எனக்குத் தெரியாது. ஆனால் அப்போது அவர்களைப் பொறுப்பேற்றிருந்தால் யாரையும் கொலை செய்வார்களே அன்றி, இவ்வளவு வருடங்களாகத் >> 25

## தரம் 1 வகுப்பில் இனி 38 மாணவர் மட்டுமே

கொழும்பு, ஜூன் 3
2018ஆம் ஆண்டு தரம் 1 வகுப் பொன்றில் அனுமதிக்கப்படக் கூடிய உச்சபட்ச மாணவர்களின் எண்ணிக்கை 38 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

முதலாம் தர மாணவர்களின் அனுமதி தொடர்பான சுற்றறிக்கை கல்வியமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. அதிலேயே இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

முன்னர் வகுப்பொன்றில் 39 மாணவர்களை அனுமதிக்கலாம் எனக் கல்வி அமைச்சு அறிவித்திருந்தது. அந்த எண்ணிக்கை அடுத்த ஆண்டு 38 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு >> 25



மூதூர் சிறுமிகள் மீது பாலியல் வதை:

## திருமலையில் நேற்று பாடசாலைகள் பூட்டு

மூதூர், ஜூன் 3
திருகோணமலை மூதூர், பெரியவெளியில் பாடசாலை மாணவிகள் மூவர் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தமிழ்ப் >> 25

## வெட்டுக் காயத்துடன் வவுனியாவில் சடலம்

கொழும்பு, ஜூன் 3
வவுனியாவில் வெட்டுக் காயங்களுடன் குடும்பத் தலைவர் ஒருவரின் சடலத்தை நேற்று மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா சண்முகபுரம் கிராமத்தில் வீதியோரமாக அவர் சடலமாக மீட்கப்பட்டார். செட்டிகுளம் சின்னக்குளத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் கனகராஜா (வயது40) என்பவரின் சடலமே அது. இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு வவுனியா >> 25



## 3 சிறுமிகள் மீதான பாலியல் வதைக்கு எதிராகப் போராட்டம்

மூதூர், ஜூன் 3
திருமலை மூதூர், பெரியவெளி கிராமத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவிகள் மூவர் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை மல்லிகைத்தீவுச் சந்தியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (துய40)

## ஆட்சிக் கவிழ்ப்பு எண்ணம் எமக்கு அறவே கிடையாது

### மகிந்த அணி அடித்தது கரணம்

கொழும்பு, ஜூன் 3
கூட்டு அரசைக் கவிழ்ப்பதற்கு மகிந்த அணி ஒருபோதும் சதி செய்யவில்லை. 2020 வரை ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் எமக்கு அறவே இல்லை. அதுவரை நாம் எதிர்க்கட்சியாகவே இருப்போம். இவ்வாறு குத்துக் கரணம் அடித்துள்ளது மகிந்த அணி. மைத்திரி ரணில் அரசை விரைவில் >> 25

## சந்திரிகாவிடம் நேரில் கேட்போம்

### அதன் பின்னரே பதில் கூறலாம் என்கிறார் இராணுவப் பேச்சாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 3
இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் அவர்களால் கொல்லப்பட்டிருப்பார்கள் என்று முன்னாள் அரச தலைவர் சந்திரிகா தெரிவித்துள்ளார் என்பது தொடர்பில் அவரிடம் >> 25

# இரத்தினபுரிக்கு இன்று விரைகிறார் சம்பந்தன்

## இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்குவார்

கொழும்பு, ஜூன் 3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்துக்குச் செல்கிறார். அங்கு நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிப் பொருள்களையும் அவர் வழங்கி வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவருடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா மற்றும் தமிழ் தேசியக் >> 25




அப்ப பளையிலயும் மகிந்தவின்ர ஆக்கள்தான் சுட்டிருப்பினமோ!

## கிளிநொச்சி வழங்கிய நிவாரணத்தை காலியில் பொறுப்பேற்றார் மைத்திரி

யாழ்ப்பாணம், ஜூன் 3
தெற்கில் இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் கிளிநொச்சி மாவட்ட மக்களால் 7 பாரவூர்திகளில் அனுப்பிவைக்கப்பட்ட உதவிப் பொருள்களை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன காலிக்குச் சென்று தானே பொறுப்பேற்றார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் குறித்த பொருள்கள் கொண்டுசெல்லப்பட்டன. அவற்றைக் காலியில் பாதிக்கப்பட்ட >> 24

## 'பிசி' படிவங்களை வழங்கத் தவறிய கிராம அலுவலர்களிடம் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 3
வாக்காளர் பதிவு விண்ணப்பப் படிவங்களை (பிசி) வீடுகளுக்கு நேரடியாகச் சென்று வழங்கத் தவறியதாகப் பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்ட, கிராம அலுவலர்களிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார். 021 222 5000 என்ற இலக்கத்தின் ஊடாக தொடர்ந்தும் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். >> 24

## புலிகளை அதிகம் விரும்பும் மகிந்த

### இல்லையேல் அவரால் அரசியல் செய்ய இயலாது என்கிறது ஜே.வி.பி.



கொழும்பு, ஜூன் 3
வடக்குத் தமிழரை விடவும் மகிந்தவே புலிகள் மீண்டும் வருவதை அதிகம் விரும்புகின்றார். புலிகள் இல்லையென்றால் அவரால் அரசியல் செய்ய முடியாது. புலிகள் மீண்டும் வருவார்கள் என்ற >> 25

## சபைக்கு வருகிறது பேரிடர்

கொழும்பு, ஜூன் 3
சீரற்ற காலநிலையால் நாட்டில் ஏற்பட்ட பேரிழப்புகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறவுள்ளது.
ஜூன் >> 25

## இலங்கையிலிருந்து கடத்திய ரூபா 10 கோடி பெறுமதியான தங்கம் தமிழகத்தில் சிக்கியது

### இந்தியர்கள் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 3
இலங்கையிலிருந்து, இந்தியாவுக்குப் படகில் கடத்திச் செல்லப்பட்ட சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான தங்கத்துடன் இராமேஸ்வரத்தில் மூவரைக் கைதுசெய்துள்ளதாக இந்திய மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையிலிருந்து தனுஷ்கோடி ஊடாகத் தங்கம் கடத்திச் செல்லப்படவுள்ளதாக இந்தியச் சுங்கத்துறையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. >> 25

## ஞானசாரரின் கைதை தடுக்கிறார் விஜயதாச

### அசாத் சாலி பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 3
ஞானசார தேரரைக் கைது செய்யவிடாமல் அழுத்தம் கொடுக்கும் அந்த பிரபலம் வேறு யாரும் அல்லர் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவேதான்.
இவ்வாறு கொழும்பு மாநகர சபையின் >> 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக் குழந்தை பெறும் தாய்மாருக்கு மாதம் ரூ.5000

*ஒரு வருடத்துக்கு வழங்கத் தீர்மானம்*

யாழ்ப்பாணம், மே 2

இனிமேல் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவிக்கும் சமுர்த்திஅங்கத்தவர்கள் அல்லாத தாய்மாருக்கு மாதாந்தம் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 12 மாதங்களுக்குகொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் அனைத்துச் சமூர்த்தி முகாமையாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இரட்டைக் குழந்தைகளைப் பிரசவிக்கும் தாய்மாருக்குச் சமுர்த்தித் திணைக்களம் சமுகப் பாதுகாப்பு நிதியிலிருந்து மாதாந்தம் 5 ஆயிரம்ரூபா வீதம் வழங்கவுள்ளது.

இதேவேளை, இரண்டுக்கு மேற்பட்ட குழந்தைகளை ஒரே நேரத்தில் பிரசவிக்கும் தாய்மாருக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்குமாறும்அறிவித்துள்ளனர். சமுர்த்தி அங்கத்தவர்கள் அல்லாத பிரசவத் தாய்மாருக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேலும் சமூர்த்தித் திட்டத்தில் இணைந்துள்ள குடும்பங்களுக்குக் குழந்தைப் பிரசவத்துக்கு 7 ஆயிரத்து500 ரூபாவும் சமூர்த்தி குடும்பத்தில் அங்கத்தவர் சாவடைந்தால்15 ஆயிரம் ரூபாவும் சமூர்த்தி அங்கத்தவருக்குத் திருமணம் நடைபெற்றால் 7ஆயிரத்து 500 ரூபாவும் வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவு போன்ற சான்றிதழைச் சமர்ப்பித்து இந்தக் கொடுப்பனவைப்பெற்றுக் கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து-9)

# உயர்தரப் பரீட்சை பிற்போடப்படுமா?

*மைத்திரி தீவிர பரிசீலனை*

கொழும்பு, ஜூன் 3

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை ஒத்திவைப்பது தொடர்பில் பரிசீலிப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



இயற்கை இடரால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதால் இந்தப் பரீட்சையை ஒத்திவைப்பது குறித்துத் தான் கல்வியமைச்சினதும் பரீட்சைத்திணைக்களத்தினதும் அதிகாரிகளுடன்கலந்துரையாடி முடிவெடுக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

காலி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அந்த மாவட்டத்தின் இடர் நிலைபற்றி ஆராய்ந்தபோதே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தென் மாகாணத்தைச் சேர்ந்த மாகாண சபைகள் மற்றும் கூட்டுறவு அமைச்சர் யூ.பி.டி.ஆரியதிலக முன்வைத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட பின்னரே பரீட்சையை ஒத்திவைப்பது தொடர்பில் பரிசீலனை செய்யவிருப்பதாக அரச தலைவர் குறிப்பிட்டார். (து-4)

# அதிகாரப் பகிர்வுக்கு தடையாக உள்ளது பொது வாக்கெடுப்பு

*அமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 3

13ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு நாம் முயற்சி செய்கின்றபோது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர்மற்றும்மனோ கணேசன் போன்றவர்கள் பொது வாக்கெடுப்பைக் கோருவதால் எம்மால் அரசியல் தீர்வை வழங்க முடியாமல் உள்ளது என்று அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரப் பகிர்வைக் கோரிக் கிராம மக்களும் தோட்டப்புற மக்களும் வீதிக்கு இறங்கிப் போராடும் காலம் வெகு தூரத்தில் இல்லை. அவர்கள் வீதிகளில் அமர்ந்துகொண்டு அரச தலைவரிடமும் தலைமை அமைச்சரிடமும் அதிகாரப் பகிர்வைக் கோரப் போகிறார்கள்.

நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமென்றால் அதிகாரங்கள் கிராமங்களுக்கும் தோட்டப்புறங்களுக்கும் பகிரப்பட வேண்டும். கொழும்பில் இருந்துகொண்டு கிராமங்களின் தலையெழுத்தைஅபிவிருத்தியைத் தீர்மானிக்க முடியாது. கிராம மக்களிடம் கொடுத்தால்தான் எந்தத் துறைக்கு எவ்வளவு அதிகாரம் ஒதுக்க வேண்டும் என்று அவர்கள் முடிவெடுப்பர்.

எம்மிடம் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கின்றது. அதை வைத்துக்கொண்டு 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அதிகாரங்களைப் பகிர முடியும். அதை நாம் செய்ய முற்படுகின்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் மனோ கணேசன் போன்றவர்கள் பொது வாக்கெடுப்பைக் கோரி எமது முயற்சிக்கு இடையூறு விளைவிக்கின்றனர்.

அவர்கள் உண்மையில் மக்களின் உரிமைகளுக்காகப் பேசுபவர்களாக இருந்தால் இந்தப் பொதுவாக்கெடுப்பைக் கோரக்கூடாது. மக்களுக்கு அதிகாரப் பகிர்வைப் பெற்றுக் கொடுக்கும் எண்ணம் இவர்களுக்கு இல்லை. மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு கொழும்பில் இருந்துகொண்டு தீர்மானம்எடுக்கும்பழைய முறைமையையே இவர்கள் விரும்புகின்றனர்.

ஆனால்,நாம் அப்படி விரும்பவில்லை. இந்த நாட்டு மக்களின் பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படவேண்டும்; நாடு துரிதமாக அபிவிருத்தியடைய வேண்டும் என்றுதான் நாம் விரும்புகின்றோம். அதற்கு அதிகாரப் பகிர்வு உடனடியாக வழங்கப்பட வேண்டும் - என்கிறார். (து-3)

# வடக்குக்கு மகாவலி நீர்; ஆராய்கிறது கூட்டு அரசு

கொழும்பு, ஜூன் 3

மகாவலி கங்கை நீரை வடக்கு மாகாணத்துக்குக் கொண்டு செல்வது தொடர்பான சாத்திய ஆய்வை அரசு மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அரசு இந்தச் சாத்திய ஆய்வை மேற்கொண்டு வருவதாக, மகாவலி அபிவிருத்தி மற்றும் விவசாய அமைச்சின் செயலர் உதய செனிவிரத்ன தெரிவித்தார்.

மொரகஹகந்த அணைக்கட்டுப் பணிகள் முடிவடைந்துள்ளன. களு கங்கை நீர்த்தேக்கத்தை அமைக்கும் பணிகள் இந்த ஆண்டு நிறைவடையும்.

இந்தத் திட்டங்களின் மூலம் நீரை வடக்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்களுக்குக் கொண்டு செல்வதன் மூலம், இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியும்.

அத்துடன், 85 ஆயிரம் ஏக்கரில் அபிவிருத்தி வலயம் ஒன்றையும் அரசு உருவாக்கவுள்ளது.

களு கங்கையுடன் மொரகஹகந்த நீர்த்தேக்கம், கால்வாய் மூலம் இணைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (து-4)

# இடரால் பாதிப்புற்றோருக்கு சட்டத்தரணிகள் சங்கம் உதவி

கொழும்பு, ஜூன் 3

வெள்ளப் பெருக்காலும், மண்சரிவுகளாலும் தமது சட்டபூர்வ ஆவணங்களை இழந்த மக்களுக்கு அவற்றை மீண்டும் பெற்றுக்கொடுக்க இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் முன்வந்துள்ளது.

ஆவணங்களை இழந்தவர்கள் இயன்றவரை விரைவில் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அதன் தலைவரும், சட்டத்தரணியுமான யூ.ஆர்.டி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மீதொட்டமுல்ல இடரில் தங்களது அதிமுக்கிய சட்டபூர்வ ஆவணங்களை இழந்தவர்களுக்கு அவற்றை மீண்டும் பெற்றுக்கொடுக்கத் தாங்கள் உதவியிருப்பதாகவும், அவ்வாறே இயற்கை இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவி செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (து-4)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்கு அரசுக்குத் தொடர்ச்சியான அழுத்தம்

*கூட்டமைப்பிடம் வலியுறுத்தல்*

கொழும்பு, ஜூன் 3

"தமிழ் அரசியல் கைதிகளை எந்த வித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்யுமாறு எதிர்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசுக்கு தொடர் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்"

இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்தனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் தமிழ் கைதிகளை, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று அவர்களைப் பார்வையிட்டு, குறைநிறைகளைக் கேட்டறிந்தனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்ததாவது:

"இலங்கையில் தமிழ் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை என்று அரச தலைவர், தலைமை அமைச்சர், நீதி அமைச்சர் ஆகியோர் கூறியுள்ளனர். இந்த நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளை மறுவாழ்வளித்து பிணையில் விடுதலைசெய்யுமாறு அமைச்சர் மனோ கணேசன் கோரியுள்ளார். மேற்படி மூவரினது கருத்தும், தமிழ் அமைச்சரின் கருத்துக்குமிடையில் எவ்வித வேறுபாடும் இல்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது" என்று தமிழ் அரசியல் கைதிகள் எம்மிடம் தெரிவித்தனர்.

அதேவேளை, நாட்டில் தமிழ் அரசியல் கைதிகள் இருக்கின்றனர் என்பதை நிரூபிக்கவேண்டியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ள பொறுப்பு. அதனை நிரூபிக்கத் தவறினால் அது கூட்டமைப்புக்கு ஏற்படும் அரசியல் தோல்வியாகும். இது அரசியல் தீர்வு விடயத்திலும் தாக்கத்தைச் செலுத்தும்.

எனவே, தமிழ் அரசியல் கைதிகளை கைவிடுவதானது தமிழ் மக்களின் அரசியலை கைவிடுவதற்கு ஒப்பான செயல் என்பதே அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் கருத்தாக இருக்கின்றது.

தமிழ் அரசியல் கைதிகளை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்கவேண்டும். முதன்மை எதிர்க்கட்சியாக இருந்து இதைச் செய்யமுடியாவிட்டால் அது அரசியல் தோல்வியாகவே அமையும். அரசியல் கைதிகளின் கருத்தும் இதுவாகத்தான் இருக்கின்றது என்றார் (வ-4)

# வெடிபொருள்களைக் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் மறியலில்

*முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவிப்பு*

திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தில் வெடிபொருள்களைக் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த புதன் கிழமை இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றின் உத்தரவில் 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

"தனியார் பேருந்தில் வெடிபொருள்கள் கடத்தப்படுகின்றது என்று பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கிடைத்தது. முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் குறித்த பேருந்து பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டது. அதனைச் சோதனைக்குட்படுத்திய போது, அதில் 8 அங்குல நீளமான 8 டைனமெட், வெடி குண்டுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய [illegible] கள், 5 டைனமெட் குச்சிகள் போன்றவை மீட்கப்பட்டன.

அவற்றைக் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் புல்மோட்டை பகுதியைச் சேர்ந்த அப்துல் அசீப் ஹசன், மகுமான்ஹதுல்லா க்ரிஸ்வி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் முல்லைத்தீவு நீதிவான்மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 14 நாள்கள் விளக்க மறி[illegible] என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-21-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 லொறிகளில் உதவிப் பொருள்கள்

## யாழ்ப்பாணத்திலிருந்து தெற்குக்கு



யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் அடங்கிய பாரவூர்தி, மாத்தறை நோக்கி நேற்று மதியம் புறப்பட்டது. சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள், யாழ்ப்பாண மக்களால் தென்பகுதி மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தென்பகுதியில் கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட பேரிடர் காரணமாக பலர், உயிர்களையும் உடைமைகளையும் இழந்துள்ளனர். பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக நிவாரணம் சேகரிக்கும் நடவடிக்கைகள், பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகம் ஊடாக முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அரிசி, மா போன்ற உணவுப் பொருள்கள், குடிதண்ணீர்ப் போத்தல்கள், சுகாதாரம் சம்பந்தப்பட்ட பொருள்கள் என்று சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பொருள்களை ஏற்றிய பாரவூர்தி, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலிருந்து மாத்தறை நோக்கி நேற்று மதியம் 12.15 மணியளவில் புறப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர்கள் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், எஸ்.முரளிதரன், மற்றும் மாவட்டச் செயலக கணக்காளர், மாவட்டச் செயலக வாழ்வின் எழுச்சித் திணைக்கள உதவிப் பணிப்பாளர், இடர்முகாமைத்துவத் திணைக்கள அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் பாரவூர்தியை, மருதங்கேணிப் பிரதேச செயலாளர் கனகேஸ்வரன் இன்றைய தினம் மாத்தறை மாவட்டத்தில் ஒப்படைப்பார். நிவாரணப் பணிகளுக்காக யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 61 அலுவலர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இன்று புறப்படவுள்ளனர். இவர்கள் இரத்தினபுரி மாவட்டத்திற்குச் செல்லவுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் அடங்கிய 5 பாரவூர்திகள் களுத்துறை மாவட்டத்தை நோக்கி நேற்று மதியம் புறப்பட்டன. (த-5)

## புதிய அரசமைப்புக்கான

# பொது வாக்கெடுப்பு இவ்வருடம் நடக்கும்

## மகிந்தானந்த அழுத்கமகே தகவல்

கொழும்பு, ஜூன் 3
இந்த வருடம் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலோ அல்லது மாகாண சபைத் தேர்தலோ இடம்பெறாது. புதிய அரசமைப்புக்கான பொது வாக்கெடுப்பு மாத்திரம்தான் இடம்பெறும் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அழுத்கமகே தெரிவித்தார்.

இந்த வருடம் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் நிச்சயம் இடம்பெறும் என்று அரசு கூறி வருகின்றமை தொடர்பில் கருத்துக் கூறும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசு இப்போது உள்ள நிலையில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை இந்த வருடம் நிச்சயம் நடத்தாது. ஒருவேளை இந்த வருடம் நடத்துவதற்கு மே தினத்துக்கு முன் அரசு தீர்மானித்திருந்தால் எமது மே தினக் கூட்டத்துக்கு வந்த மக்கள் வெள்ளத்தைப் பார்த்துவிட்டு தீர்மானத்தை மாற்றி இருக்கும்.

அரசுக்கு இருந்த தோல்விப் பயம் மே தினக் கூட்டத்தின் பின் மேலும் அதிகரித்துள்ளது. தோல்வி உறுதியாகியுள்ளது. இதனால் தேர்தல்கள் இந்த வருடம் இடம்பெறாது என்று உறுதியாகக் கூற முடியும். ஆனால், அடித்துக் கூறுகிறேன். புதிய அரசமைப்புக்கான பொது வாக்கெடுப்புதான் இந்த வருடம் இடம்பெறும்.

நாட்டை இரண்டாகப் பிரிக்கும் புதிய அரசமைப்புத் தயாரிப்புப் பணி தொடர்கின்றது. வெகுவிரைவில் அதன் பணி நிறைவடைந்து விடும். அதற்கான பொது வாக்கெடுப்பை நடத்தி நாட்டைப் பிரித்துக் கொடுப்பதில் தான் அரசு அக்கறை காட்டுகின்றது-என்றார். (த-3)

# அமைச்சுச் செயலர்களும் மாற்றப்படும் அறிகுறிகள்

கொழும்பு, ஜூன் 3
அமைச்சர்கள், இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர்கள் மாற்றப்பட்டதைத் தொடர்ந்து பல அமைச்சுக்களின் செயலாளர்களும் மாற்றப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாற்றத்தில் நிதியமைச்சு, அயலுறவு அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்கள் மாற்றப்படமாட்டார்கள் எனவும், மஹிந்த அமரவீரவுக்கு வழங்கப்பட்டுள்ள மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்குப் புதிய செயலாளர் ஒருவர் நியமிக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது. (த-4)

### தவறான முடிவால் மாணவன் சாவு;

# கைதாகிய ஆசிரியர் பிணையில் விடுதலை

வவுனியா, ஜூன் 3
வவுனியா, கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் பயிலும் உயர்தர வகுப்பு மாணவன் ஒருவன் தவறான முடிவு எடுத்து உயிர் துறந்த சம்பவத்தின் பின்னணியில், ஆசிரியர் ஒருவர் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பாடசாலையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியின்போது தரம் 10 மாணவர்களுக்கும், உயர்தர மாணவர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து ஆசிரியர் ஒருவர் உயர்தர மாணவன் ஒருவனைக் கன்னத்தில் தாக்கியதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது.

அதன் பின்னர் குறித்த மாணவன் தனது வீட்டுக்குச் சென்று தவறான முடிவு எடுத்து நஞ்சு உட்கொண்டு உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதால் அவர் பொலிஸாரால் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரைப் பிணையில் விடுவித்த நீதிமன்று விசாரணையை ஒத்திவைத்தது.

வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் கற்கும் மாணவன் தர்மராசா ஜனார்த்தனனின் இறுதி அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்நிலையில் குழப்பங்கள் வராதிருக்கப் பொலிஸார் அங்கு கடமையில் ஈடுபட்டுள்ளனர். (த-4-101)

# இடர் உதவிக்கு நிதி திரட்ட யாரையும் நியமிக்கவில்லை

## இடர் முகாமைத்துவ அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 3
இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிதி சேரிப்பதற்கு தனிப்பட்டவர்களையோ குழுக்களையோ அரசு நியமிக்கவில்லை. அவ்வாறானவர்களிடம் பணத்தையோ அல்லது ஏனைய நன்கொடைகளையோ வழங்க வேண்டாம்.

இவ்வாறு இடர்முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா அறிவித்துள்ளார்.

வெள்ளத்தாலும் மண் சரிவாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக இடர்முகாமைத்துவ அமைச்சின் ஊடாக நிதி சேகரிக்கப்படுவதாகப் பல முறைப்பாடுகள் தனக்குக் கிடைத்திருப்பதாகவும், அவ்வாறு நிதியையோ ஏனைய பொருள்களையோ சேகரிக்க எவருக்கும் தனது அமைச்சு அனுமதி வழங்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான சகல உதவிகளும் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலர்கள் மூலமாக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய மக்கள் விரும்பினால் தனது அமைச்சுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளலாம் எனவும், அதை விடுத்து எக் காரணம் கொண்டும் தனிப்பட்ட நபர்களிடமோ குழுக்களிடமோ பணத்தையோ ஏனைய அன்பளிப்புகளையோ வழங்கவேண்டாமெனவும் அவர் கூறியுள்ளார். (த-4)

# விமானத்தில் இலங்கையர் ஏற்படுத்திய குண்டுப் புரளி தீவிரவாதச் செயல் அல்ல

## ஆஸ்திரேலியப் பொலிஸார் தெரிவிப்பு

மெல்போர்ண், ஜூன் 3
மெல்போர்ணில் இருந்து புறப்பட்ட மலேசியன் எயார் லைன்ஸ் விமானத்தில் இலங்கையர் ஒருவர் ஏற்படுத்திய குண்டுப் புரளி, தீவிரவாதச் செயல்களுடன் தொடர்புடையது அல்ல என்று ஆஸ்திரேலியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன் இரவு 11.11 மணியளவில் மலேசியன் எயார் லைன்ஸ் விமானம் மெல்போர்ண் விமான நிலையத்தில் இருந்து கோலாலம்பூர் நோக்கிப் புறப்பட்ட சற்று நேரத்தில், அதில் பயணம் செய்த இலங்கையர் ஒருவர் தன்னிடம் குண்டு இருப்பதாகவும், விமானத்தை வெடிக்க வைக்கப் போவதாகவும் சத்தமிட்டார். அத்துடன் அவர் விமானியின் அறைக்குள்ளேயும் நுழைய முயன்றார்.

இதையடுத்து, புறப்பட்ட ஒரு மணி நேரத்தில் அந்த விமானம், மீண்டும் மெல்போர்ண் விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

உடனடியாக விமானத்துக்குள் நுழைந்த ஆஸ்ரேலியக் கொமாண்டோக்கள், மிரட்டல் விடுத்த இலங்கையரைக் கைது செய்தனர்.

25 வயதுடைய மனோத் மாக்ஸ் என்ற பெயருடைய இலங்கையரே கைது செய்யப்பட்டவராவார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும், இந்தச் சம்பவத்துக்கும் தீவிரவாதச் செயல்களுக்கும் தொடர்பில்லை என்றும் ஆஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் விமானப் பயணச்சீட்டைப் பெற்றுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. (த)

# இடரில் மகளை இழந்ததால் தந்தை மாரடைப்பால் சாவு

## ஹெலியகொட பிரதேசத்தில் துயரம்

கொழும்பு, ஜூன் 3
ஹெலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட போகொடகந்த பிரதேசத்தில் கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட மண் சரிவில் தனது 23 வயது மகளை இழந்த சோகத்தில் நடைப்பிணமாக இருந்து வந்த அவரது 47 வயதுத் தந்தை நேற்று முன்தினம் மகளின் சடலம் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டபோது மாரடைப்பால் மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

நிரோஷா ஷியாணி குணரத்ன எனும் இவரது மகள் கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட மண் சரிவில் உயிரிழந்தார். அவரது உடலம் மீட்புப் படையினராலும் பிரதேச வாசிகளாலும் கடுமையான பிரயத்தனத்தின் பின்னர் மீட்கப்பட்டு நேற்று முன்தினம் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டது.

சடலம் வெகுவாகச் சிதைந்துபோயிருந்ததால் சவப்பெட்டி திறக்கமுடியாத வகையில் மூடப்பட்டிருந்தது. இந்த அவலத்தைத் தாங்கிக்கொள்ளமுடியாத வேதனையில் சவப்பெட்டிக்கு அருகில் மயங்கி விழுந்த தந்தை திலக் குணரத்ன மாரடைப்பால் உயிரிழந்தார்.

உயிரிழந்த மகளுக்கு இன்னும் ஓரிரு மாதங்களில் திருமணம் செய்யவிருந்ததாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர். (த-4)

# மூன்று மாத சிசுவைக் கொன்ற தாய்க்கும் நண்பருக்கும் தூக்கு

## சிலாபம் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஜூன் 3
மூன்று மாதப் பெண் குழந்தையைக் கழுத்தை நெரித்துக் கொன்ற தாய்க்கும் அவரது காதலனுக்கும் சிலாபம் மேல்நீதிமன்ற நீதிபதி ரவீந்திர அமல் ரணராஜா சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

கொலைசெய்யப்பட்ட குழந்தையின் தாயான சீதா மேனிட் (வயது-35) மற்றும் அவரது காதலனான உபுல் ரஞ்சித்குமார (வயது-40) ஆகிய இருவருக்குமே சாவுத் த்ண்டனை விதிக்கப்பட்டது.

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி ஈஸ்வரலாகே கௌசல்யா எனும் மூன்றுமாதக்குழந்தையின் கழுத்தை நெரித்துக் கொன்று உடலத்தை வாழை மரமொன்றின் அடியில் புதைத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் சட்டமா அதிபரால் இருவருக்கும் எதிராகச் சிலாபம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

வழக்கின் ஆரம்பத்தில் சந்தேகநபர்கள் இருவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டபோதும் முதலாவது சந்தேகநபரான தாயைப் பிணை எடுக்க எவரும் முன்வராததால் அவர் கடந்த 12 வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இருவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கிளாய் மீனவர் பிரச்சினைக்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனை

## நீரியல் வளத் திணைக்களம் நீதிமன்றில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3
முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் உள்ளூர் மீனவர்களின் பயன்பாட்டுக்கான நிலப்பரப்புத் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. அவரின் ஆலோசனை கிடைக்கும்வரை அவகாசம் வழங்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் கோரியது.
திணைக்களத்தின் கோரிக்கையை ஏற்ற நீதிமன்று, வழக்கு விசாரணையை எதிர்வரும் 15ஆம் திகதிவரை ஒத்திவைத்தது.
"முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் உள்ளூர் மீனவர்கள் வாடி அமைப்பதற்கு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட நிலப்பரப்பு தென்னிலங்கை மீனவர்களுக்கான கரைவலைப்பாட்டுப் பகுதிக்குள் உள்ளடங்குகின்றது. அதனால் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட உள்ளூர் மீனவர்களுக்கான அனுமதியைத் தடை செய்ய வேண்டும்" என்று 3 தென்னிலங்கை மீனவர்களின் சார்பில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது.
இதனால் உள்ளூர் மீனவர்கள் அந்தப் பகுதியில் தொழில் புரிய இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. வழக்கு விசாரணைகளும் தொடர்ந்தும் இடம்பெற்றன.
கொக்கிளாயில் வாடி அமைந்துள்ள பகுதி தென்னிலங்கை மீனவர்களுக்கு வழங்கப்பட்ட பகுதியில் இருந்து 375 மீற்றருக்கும் அப்பாலேயே உள்ளது என கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரால் வரைபட ஆதாரத்துடன் மன்றில் தெரிவிக்கப்பட்டது. எனினும் பிரதேச செயலாளரால் மன்றில் முன்வைக்கப்பட்ட நில அளவை வரைபடத்தை ஏற்க மறுத்த நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், அந்தப் பகுதியை தென்னிலங்கை மீனவர்களிடமே வழங்க வேண்டும் என மன்றில் கோரியிருந்தனர்.
கொக்கிளாய் கடற்கரைப் பகுதியை சகல தரப்பினரின் பிரசன்னத்துடன் மீண்டும் அளவை செய்யுமாறு முல்லைத்தீவு நீதிமன்று கட்டளையிட்டது. அதன் பிரகாரம் நில அளவீடு இடம்பெற்ற வேளை தென்னிலங்கை மீனவர்கள் குறுக்கீடு செய்தனர். அதனால் அளவீட்டுப் பணி உரியவாறு இடம்பெறவில்லை. அந்தப் பகுதியில் தொழில் புரிவதற்கு உள்ளூர் மற்றும் தென்னிலங்கை மீனவர்களுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவிட்டிருந்தது.
இந்த வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. பிரதேச செயலாளரால் அளவீடு செய்யப்பட்டதற்கு புறம்பாக நீரியல் வளத்திணைக்களத்தினர் மீண்டும் அளவீடு செய்தனர். அதன் பிரதியை மன்றில் சமர்ப்பிக்குமாறு உள்ளூர் மீனவர் சங்கம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் கோரினர். (வ-101)

## கஞ்சா கலந்த சுருட்டை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவருக்கு மறியல்


யாழ்ப்பாணம், ஜூன் 3
கஞ்சா கலந்த சுருட்டை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.
தொண்டமனாறு பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் கஞ்சா கலந்த சுறுட்டை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் பொ.சிவகுமார் முன்னிலையில் சந்கேநபர் நேற்று முற்படுத்தப்பட்டார். விசாரணை களை மேற்கொண்ட நீதிவான், சந்தேகநபரை எதிர்வரும் 16ஆம் திகரை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-21-26)

## டி.ஐ.ஜி. பாலித பெர்னாண்டோ யாழ்ப்பாணத்துக்கு நியமனம்

### டி.ஐ.ஜி. சஞ்சீவ தர்மரட்ண பொலிஸ் கல்லூரிக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அவரது இடத்துக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாண்டோ நியமிக்கப்பட்டார் என்று பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன.
கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் கடமையாற்றிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாண்டோ, அடுத்த வாரம் யாழ்ப்பாணத்தில் கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை, வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுமித் எதிரி சிங்க கடந்த 23ஆம் திகதி ஓய்வுபெற்ற சென்ற நிலையில் வடக்கு மாகாணத்துக்கான புதிய மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபராக றொசான் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டார். அவர் நாளை ஞாயிற்றுக்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21,26)

## மரண அறிவித்தல்



### தம்பு இரத்தினம் மாணிக்கராஜா

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இரத்தினம் மாணிக்கராஜா (Military Police Sergeant Major) நேற்று (2.6.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

25, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தடுப்புக் காவல் கொலை:

## 5 பொலிஸாரின் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஜூன் 3
சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில்தடுப்புக் காவலிலிருந்த இளைஞர் இரணைமடுக் குளத்தில் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கின் 5 பொலிஸ் சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிவரும் 16ஆம் திகதிவரை கிளிநொச்சி நீதிவான் மன்று நேற்று நீடித்தது.
சந்தேகநபர்களான 5 பொலிஸாரும் கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். வழக்கைப் பரிசீலித்த நீதிவான், சந்தேகநபர்களின் விளக்கமறியலை நீடிகக உத்தரவிட்டார்.

பின்னணி
2011ஆம்ஆண்டு நவம்பர் மாதம் புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியைச் சேர்ந்த சிறீஸ்கந்தராசா சுமணன் (வயது-28) என்ற இளைஞன் இரணைமடுக் குளத்தில் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. எனினும் பொலிஸாரின் சித்திரவதையால்தான் சுமணன் இறந்தார் என்று அவருடன் தடுப்புக் காவலிலிருந்தவர்கள் மல்லாகம் நீதிவான் மன்றில் தெரிவித்தனர்.
இந்த நிலையில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் அப்போது பொறுப்பதிகாரியாக இருந்த சிந்தக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகக் கிளிநொச்சி நீதிவான் மன்றில் கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அத்துடன், அவர்கள் 5 பேர் உள்ளிட்ட 8 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகச் சித்திரவதை புரிந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நடைபெற்ற வழக்கில் சித்திரவதை நிரூபிக்கப்பட்டு பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார உள்ளிட்ட 6 பொலிஸாருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறை தண்டனை வழங்கப்பட்டது. (வ-ய)

## முகமூடி அடாவடிக் கும்பல் மந்திகையில் அட்டகாசம்

யாழ்பாணம், ஜூன் 3
துணியால் முகங்களை மறைத்தவாறு பழக் கடைக்கு முன்பாக வந்திறங்கிய சிலர் திடீர் என சரமாரியாக கற்களை வீசித் தாக்குதல் மேற்கொண்டதால் வடமராட்சி மந்திகைச் சந்தியில் நேற்றுமுன்தினம் இரவு பதற்றம் ஏற்பட்டது.
இந்தக் தாக்குதலால் மந்திகைச் சந்தியிலிருந்த பழக்கடையின் கண்ணாடிகள் உடைந்து சேதமாகின. மோட்டார் சைக்கிளில் கடைக்கு வந்த நபர் மீதும் அவர்கள் கற்களை வீசினர் என்று தெரிவிக்கப்பட்டது.
"வியாபாரத்தை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் கடையைப் பூட்டுவதற்கு உரிமையாளர் ஆயத்தமான வேளை முகங்களைத் துணியால் கட்டிக் கொண்டு சிலர் அங்கு வந்தனர். அவர்களை அடையாளங் காண முடியாத அளவு முகத்தை மறைத்திருந்தனர். வந்து இறங்கியவுடன் அவர்கள் கற்களை வீசித் தாக்குதலை மேற்கொண்டனர்.
வர்த்தக நிலையத்துக்கு வந்த ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை எடுக்க முற்பட்ட போது, அவர் மீதும் கற்கள் விழுந்தன. பதற்றமடைந்த அவர் மோட்டார் சைக்கிளை கைவிட்டு தப்பிச் சென்றார். பழக்கடைக்கு இலக்கு வைத்து அவர்கள் கற்களை வீசினர். பழக்கடையின் கண்ணாடிப் பெட்டி உடைந்து சேதமாகியது. சிறிது நேரத்தில் அவர்கள் அங்கிருந்து தப்பித்துச் சென்றனர்" என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பாக பழக்கடையின் உரிமையாளர் நேற்று நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். சம்பவம் தொடர்பில் பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
(வ-21-26)

## யாழ்ப்பாணத்திலிருந்து இறைச்சி கடத்திய இருவர் முழங்காவிலில் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 3
"யாழ்ப்பாணத்தில் இருந்து புத்தளத்துக்கு ஆயிரம் கிலோ மாட்டிறைச்சியைக் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த கூலர் வாகனம் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. அதில் 38 மாடுகளின் தலைகள் காணப்பட்டன"
இவ்வாறு முழங்காவில் பொலிஸார் தெரிவித்தனர்.
"யாழ்ப்பாணத்திலிருந்து புத்தளத்துக்கு மாட்டிறைச்சி கடத்தப்படுவதாக நேற்றுத் தகவல் கிடைத்தது. வீதிச் சோதனையின் போது கூலர் வாகனத்தில் சுமார் ஆயிரம் கிலோ இறைச்சி காணப்பட்டது. அதில் 38 மாடுகளின் தலைகளும் இருந்தன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
(வ-101)

## கிளிநொச்சிப் பாடசாலை ஆசிரியர் நேற்றுக் கைது

காரணமின்றி மாணவியை அழைத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சிப் பாடசாலை ஆசிரியர் ஒருவர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் உயர் தர வகுப்பு மாணவியை கருத்தமர்வு என்றுகூறி அந்தப் பாடசாலையின் [illegible] ஆசிரியர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அதனால் அங்கு நேற்று பரபரப்பு ஏற்பட்டது.
"குறித்த மாணவிக்கு மட்டும் செயலமர்வு உள்ளது என்று கூறியே ஆசிரியர் அழைத்துச்சென்றார். அவருக்குப் பலதடவைகள் தொடர்பை ஏற்படுத்திய போதும் மாணவி கருத்தரங்கில் இருக்கின்றார். சிறிது நேரத்தில் எடுங்கள் என்றுதான் கூறுகின்றார். தவிர மாணவியை தொடர்பு கொள்ள முடியவில்லை" என்று பொலிஸாரிடம் மாணவியின் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.
இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்று மாலை குறித்த ஆசிரியரைக் கைது செய்தனர். மாணவியும் பொலிஸாரால் மீட்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்திக் கடலில் இறந்த நிலையில் ஒதுங்கும் மீன்கள்

## கடல் நீரில் உப்பின் அளவு அதிகரித்தமையே காரணமாம்



முல்லைத்தீவு, ஜூன் 3

நந்திக்கடலில் வழமைக்கு மாறாக உப்பின் அளவு அதிகரித்துள்ளதால் பெருந்தொகையான மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குகின்றன. இதனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழக்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலையை அடுத்து நந்திக்கடலில் பெரியாறு சங்கமிக்கும் இடம் தூர்வடைந்து தற்போது திடலாகக் காணப்படுகிறது. பல தடவைகள் அங்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதும், போதுமான ஒட்சிசன் இருப்பதாக ஆய்வாளர்களால் கூறப்பட்டது. இருப்பினும் தற்போது கடல் நீரில் உப்பின் அளவு வழமையை விட அதிகரித்துக் காணப்படுகிறது. மீன்கள் இறந்து கரையொதுங்குவதற்கு இதுவே காரணம் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து மீனவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

"வளம் கொழிக்கும் நந்திக்கடலை நம்பி முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் உள்ளன. திடீரென மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குவதால் எம்மால் தொழில் மேற்கொள்ள முடியவில்லை. நந்திக் கடலை தூர்வாருமாறு பல தடவைகள் நாங்கள் கோரிக்கை விடுத்தோம். அதிகாரிகள் எவரும் கவனத்தில் எடுக்கவில்லை. ஆராய்ச்சிகள் மேற்கொண்டார்கள். எந்தப்பயனும் இல்லை. தற்போதைய வறட்சியான காலநிலையில் கடல் நீரில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. மழை பெய்தால் ஓரளவு தப்பித்துக் கொள்வோம். அதுவரைக்கும் எங்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கும்." என்றனர்.

முல்லைத்தீவு மத்தி நந்திக்கடல் முகாமைத்துவக் குழுவின் தலைவர் அ. சண்முகலிங்கம் தெரிவித்ததாவது,

நந்திக்கடல் தூர்வரப்பட வேண்டும் எனப் பல தடவைகள் எம்மால் கோரிக்கை விடுக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரம் குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக அமைந்த நந்திக்கடலில், கணக்கிட முடியாத மீன்கள் இறந்துள்ளமைக்கு அதுவே முழுக் காரணம். தற்போது எற்பட்டுள்ள காலநிலை காரணமாக நீரின் உப்பின் அளவு வழமைக்கு மாறாக அதிகரித்துள்ளது. அதனால்தான் இவ்வாறு மீன்கள் இறப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் என்பது வளம்கொழிக்கும் பிரதேசம் என்பது எல்லோருக்கும் தெரியும். இதனை நம்பி ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்கின்றன. நந்திக்கடல் தூர்வாரப்பட்டிருந் தால் இவ்வாறான நிலமைகளைத் தவிர்த்திருக்கலாம். பொதுவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அனைவருக்கும் தெரிந்ததே. அவற்றில் இருந்து மீண்டு வரமுடியாது தவித்துக் கொண்டு இருக்கும் எமக்கு, இவ்வாறான சம்பவங்களும் பெரிய இழப்பாகவே அமைகின்றன. நந்திக்கடலை நம்பியுள்ள மக்களின் வாழ்வாதாரம் செழிக்க அது தூர்வாரப்பட வேண்டியது மிக அவசியம்" என்றார்.

நந்திக்கடல் தூர்வரப்படுவது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரனிடம் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கேட்ட போது,

'நந்திக்கடலை ஆழப்படுத்துவது சுற்றா டலுக்குத் தீங்காக அமையக்கூடும் என்று சுற்றாடல் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர். இருப்பினும் நந்திக்கடல் பகுதியைத் துப்பரவு செய்யும் பணிகள் அதாவது கல்லுகள், அடைசல்கள் போன்றவற்றைச் சீர்செய்து துப்பரவு செய்வதற்கு முயற்சிகள் நடைபெற்றுள்ளன. என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நந்திக்கடலில் கரையொதுங்கிய இறந்த மீன்கள் பழுதடைந்து துர்நாற்றம் வீசுவதால் முல்லைத்தீவு மாவட்டக் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களம், கரைத்துறைப்பற்றுப் பிரதேச சபை மற்றும் பொது மக்களும் இணைந்த மீன்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ஜ-7)

## யாழ்ப்பாண நகரில் முறையற்ற விதத்தில் கழிவுகளை வீசும் செயற்பாடு கட்டுக்குள்

### மாநகர சபையினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

"யாழ்ப்பாணம் மாநகரில் கழிவுகளைப் பொது இடத்தில் வீசும் செயற்பாடு பெருமளவு குறைந்துள்ளது. யாழ்ப்பாண மாநகர சபை ஊழியர்கள் மற்றும் பொது மக்களின் ஒத்துழைப்பால் இந்த நிலை ஏற்பட்டது"

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபையின் தகவல் வழங்கும் அலுவலர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாநகரில் 6 இடங்களில் மீன் சந்தைகள் மற்றும் இறைச்சிக் கடைகள் உள்ளன. அவற்றின் கழிவுகளை சந்தையின் விற்பனை நேரம் முடிந்தவுடன் மாநகர சபை ஊழியர்கள் அகற்றிவிடுவார்கள். எனினும் அண்மைக்காலமாக இரவு நேரத்தில் வீதியோரங்களில் மூட்டைகளாகக் கட்டி கழிவுகளை வீசி விட்டுச் செல்கின்றனர். இவ்வாறான முறைப்பாடுகள் எமக்கு தொடர்ச்சியாக வந்தன. சிலரின் இவ்வாறான நட வடிக்கைகளைக் கண்காணிக்க மாநகர சபையால் இரவு மற்றும் பகல் கடமைகளுக்கு ஊழியர்கள் அமர்த்தப்பட்டனர்.

முக்கியமான சில இடங்களில் கண்காணிப்புக் கமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. குருநகர் மத்தியூஸ் குளம், காக்கை தீவு மற்றும் சங்கிலியன் வீதி ஆகிய பகுதிகளில் கழிவுகள் வீசும் செயற்பாடு அதிகம் என்பதால் அந்த இடங்களில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் தெரிவில் குப்பைகளைக் கொட்டுதல் மற்றும் விலங்குக் கழிவுகளை வீசுதல் போன்ற செயற்பாடுகள் குறைவடைந்துள்ளன.

இவ்வாறு முறையற்ற விதத்தில் குப்பைகள் மற்றும் கழிவுகளை பொது இடங்களில் வீசுவோர் மீது சட்ட நடவடிக்கைகளை மாநகர சபை எடுத்து வருகிறது. கடந்த வருடம் 129 முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப்பெற்றன. எனினும் நடப்பு வருடத்தில் இதுவரை 52 முறைப்பாடுகள் மாத்திரமே கிடைத்துள்ளன. வருட ஆரம்பத்துடன் ஒப்பிடுகையில் கடந்த மாதம் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது - என்றார். (வ-ரி)

## அடிப்படை உரிமைகள் குறித்து செயலமர்வு நேற்று ஆரம்பம்

சாவகச்சேரி, ஜூன் 3

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான அடிப்படை உரிமைகள் தொடர்பான 2 நாள்கள் வலுவூட்டல் செயலமர்வு தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் சொண்ட் நிறுவனத்தினரால் நடத்தப்படும் இந்தச் செயலமர்வில் தகவல் அறியும் உரிமை, ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியன தொடர்பில் விழிப்புணர்வுக் கருத்துரைகள் வளவாளர்களால் வழங்கப்பட்டன. செயலமர்வில் பிரதேச செயலக கிராம அலுவலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இளையோர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## இந்துப் பாரம்பரிய நடன நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 3

இந்துப் பாரம்பரிய நடன மற்றும் சைப் படைப்புக்கள் நிகழ்வு இன்று பி.ப. 3 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-12)

## விளையாட்டு விழா

மூளாய் இந்து இளைஞர் மன்ற வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மன்ற மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மன்றத் தலைவர் சி.ஜெனார்த்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனும் சிறப்புவிருந்தினர்களாக மன்றத்தின் முன்னாள் உறுப்பினர்களான சரவணமுத்து சிவரூபன், செல்வராசா சுதர்சனும் ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-12)

## சைவப் புலவர் சங்கத்தின் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 3

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் சிறப்பு நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் சங்கத்தின் எதிர்கால செயற்ப்பாடுகள் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதனால் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் உப செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் கேட்டுள்ளார். (வ)

## திருக்குடமுழுக்கு

கொக்குவில் மேற்கு மணியர்பதி சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய திருக்குடமுழுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணி முதல் 8.45மணி மணிவரையான சுப வேளையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-173)

## சைவ அறங்காவலர் சபை தென்மராட்சியில் ஆரம்பம்

சாவகச்சேரி, ஜூன் 3

தென்மராட்சிப் பிரதேசத்தில் முதன் முறையாக பிரதேச சைவ அறங்காவலர் சபை கடந்த புதன் கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆரம்ப நிகழ்வு கடந்த புதன்கிழமை சாவகச்சேரி தென்மராட்சி கலை கலாசார மத்திய மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் திருமதி கே.பாபு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச அறம் காவலர் சபையின் தலைவராக பேராசிரியர் க. கந்தசாமி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக சைவப் புலவர் கு.சுமுதலிங்கமும் செயலாளராக க.ரஜனிகாந்தனும் உதவிச் செயலாளராக கா.சிவஞானசுந்தரமும் பொருளாளராக க. [illegible] தெரிவு செய்யப்பட்டனர்.

பிரதேசத்தின் பிரிவு ரீதியாக நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கச்சாய் சி.கணபதிப்பிள்ளை, வரணி க.குணரத்தினம், விடத்தற்பளை வி.காசிநகர், சாவகச்சேரி த.மோகனராஜலிங்கம், கைதடி செ.ஆனந்தரஞ்சன், மட்டுவில் க.சிவசங்கரநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

"தென்மராட்சி பிரதேசத்தில் சைவ மரபு பேணப்பட்ட இடங்கள் ஆலயங்கள் ஆகியவற்றை இனங்கண்டு அவற்றைப் பாதுக்காத்தலும் மேம்படுத்தலும், சைவ மக்களின் பண்பாட்டைப் பின்பற்ற வழிகாட்டலும் ஊக்குவித்தலும், மாற்றுக் கருத்தினரால் சைவ சமய பண்பாட்டுக்கு ஏற்படுத்தும் தாக்கங்களைப் போக்குதலும் நெறிப்படுத்தலும் போன்றவற்றை சபை மேற்கொண்டு பிரதேசத்தில் சைவம் தளைத்தோங்கச் செய்ய வேண்டும்" என்று சபையின் செயலாளர் தெரிவித்தார். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில்

# பன்னாட்டு அழுத்தம் அவசியம்

## உறவினர்கள் வலியுறுத்து



கிளிநொச்சி, ஜூன் 3
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம் தொடர்பில், அரச தலைவருடனான சந்திப்பும் தோல்வி தருமாக இருந்தால், புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து, பன்னாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். பன்னாடுகளின் அரசுகள், கொழும்பு அரசுடன் கலந்துரையாடித் தீர்க்கமான ஒரு முடிவை எமக்குப் பெற்றுத் தர வேண்டும். இவ்வாறு கிளிநொச்சியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.
அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், வடக்கு- கிழக்கு ரீதியாகக் காணாமல் போனவர்களின் உறவினர்களை அழைத்துச் சாலை மறியல் போராட்டத்தில் கடந்த வாரம் ஈடுபட்டனர். இதனையடுத்து வடமாகாண ஆளுரின் ஊடாக அரச தலைவர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளைச் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளார். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் உறவினர்கள் சாலை மறியல் போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர்.
இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன் மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக அரச தலைவரைச் சந்தித்தும் பயன்ஏதும்கிடைக்கவில்லை.
"அரச தலைவரைச் சந்தித்துப் பேசுவதற்குத் தீர்மானித்துள்ளோம். அவரும் எம்மைச் சந்திக்க உடன்பட்டுள்ளார். எமது இந்தச் சந்திப்பிலும் தோல்வி கிட்டுமானால், எமது போராட்டத்தைப் பன்னாடு ரீதியாக விரிவுபடுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. இதற்குப் புலம்பெயர் உறவுகள் பூரண ஆதரவு வழங்க வேண்டும். அவர்கள் வசிக்கின்ற நாடுகளில் போராட்டங்களை நடத்தி, அந்த நாடுகளின் அரசு மூலம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக விரைவாக விசாரணைகள் நடத்தி, சாதகமான பதிலை வழங்க வேண்டும் என்று கொழும்பு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். " என்று உறவுகள் கோரிக்கை விடுத்தனர்.
கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை தொடர்பாகச் சாதகமான பதிலை வழங்குமாறு கோரி, 103 ஆவது நாளாகத் தொடர்போராட்டத்தில் உறவினர்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)



## இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வவுனியா வர்த்தகர்களும் உதவி

வவுனியா, ஜூன் 3
தென்பகுதியில் இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் வவுனியா வர்த்தகர் சங்கத்தால் சேகரிக்கப்பட்ட உணவு மற்றும் இதர பொருள்கள் வவுனியா மாவட்டச் செயலகத்திடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.
வவுனியா வர்த்தகர் சங்கத்தினர் இரு தினங்களாக வவுனியா நகர் வர்த்தகர்களிடம் இருந்து உணவு மற்றும் உதவிப் பொருள்களைச் சேகரித்தனர். இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருள்களை வர்த்தகர் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள் இணைந்து, வவுனியா மாவட்டச் செயலகத்தின் அதிகாரிகளிடம் கையளித்தனர். வவுனியா மாவட்டச் செயலகத்திலிருந்து தென்பகுதிக்குச் செல்லும் நிவாரணப்பணிக் குழுவினர், சேகரிக்கப்பட்ட பொருள்களை உரியவர்களிடம் கையளிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## "எங்கள் வீடு மது, புகைத்தல் அற்ற மகிழ்வான இல்லம்"

### வலி. வடக்குக் குடியிருப்புக்களில் விழிப்புணர்வுத் துண்டறிக்கைகள்

தெல்லிப்பழை, ஜூன் 3
உலக புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வலி. வடக்குப் பிரதேசத்திலுள்ள சகல குடியிருப்புக்களிலும் தெல்லிப்பழைச் சுகாதாரப் பிரிவினரால் 'எங்கள் வீடு மது, புகைத்தல் அற்ற மகிழ்வான இல்லம்' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட துண்டறிக்கைகள் ஒட்டப்பட்டு வருகின்றன.
புகைத்தலுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் மே மாதம் 31ஆம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை பிரதேச ரீதியாக சுகாதாரப் பிரிவினரால் பல வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
வலி. வடக்கு பிரதேசத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரியால் புகைத்தலுக்கு எதிரான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புகைத்தலால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் மக்களுக்கு விளக்கும் வகையில் தெல்லிப்பழை மல்லாகம் சந்திகளில் வீதி நாடகங்கள் நடத்தப்பட்டன.
வலி. வடக்கில் தெல்லிப்பழை சுகாதாரப் பிரிவிலுள்ள சுமார் 8 ஆயிரத்துக்கும் அதிகமான குடியிருப்புக்களில் 'எங்கள் வீடு மது, புகைத்தல் அற்ற மகிழ்வான இல்லம்' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட துண்டறிக்கைகள் ஒட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (வ-115)

## பொருத்தப்படாதிருந்த டெப்ளர் டேர் கருவி

கொழும்பு, ஜூன் 3
காலநிலைத் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு 200 மில்லியன் ரூபா செலவில் நாட்டுக்கு எடுத்து வரப்பட்ட டெப்ளர்ரேடர் கருவி, கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் இதுவரை பொருத்தப்படாது வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தக் கருவி பொருத்தும் போது கீழே விழுந்து பழுதடைந்துள்ளது. பின்னர் பழுது பார்க்காமலேயே வைக்கப்பட்டுள்ளது என்று வளிமண்டலவியல்திணைக்கள ஊழியர்கள் சிலர் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த கருவியை வெளிநாட்டிலிருந்து எடுத்து வரும்போது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் ஊழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

## சுற்றாடல் தின நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூன்3
யாழ்ப்பாண மாவட்ட சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் உலக சுற்றுச்சூழல் தினமும் தேசிய சுற்றுச் சூழல் வாரமும் இன்று காலை 10 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறும்என்று அறிவிக்கப்பட்டது.
சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகனும் சிறப்பு விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.ஜெயந்தனும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## தொண்டர் சபையின் ஆண்டு விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 3
அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய தொண்டர் சபையின் 60 ஆவது ஆண்டு விழாவும் மலர் வெளியீடும் நாளை மறுதினம் திங்கட்கிழமை இரவு 9 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
தொண்டர் சபைத் தலைவர் செ.சனந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனும் கலந்து கொள்வர்.
சிறப்புக் கலைநிகழ்வுகளாக கே.பி.குமரனின் நாத சங்கமும் தென்னிந்திய இசைக் கலைஞரும் இயக்குநருமான கந்தர்வ கலாரத்னம் பாலக்காடு சிறிராம் மற்றும் சக்தி சுப்பர் ஸ்ரார் கலைஞர்கள் இணைந்து வழங்கும் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## வாசிப்பு முகாம் இன்று

தும்பளை, ஜூன் 3
தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு தரம் 4இற்கான வாசிப்பு முகாம் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் க.சண்முகராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்வி பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆர்.யசோதரன், திருமதி சி.வித்தியாபதி திருமதி க. கமலதாஸ் ஆகியோரும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-422)

## சின்ன வெங்காயச் செய்கை யாழ். குடாநாட்டில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிறுபோகச் சின்ன வெங்காயச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இதுவரைக்கும் 125 வரையான ஹெக்டேயர் நிலப் பரப்பில் விவசாயிகள் சின்ன வெங்காய செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.
மேலும் விவசாயிகள் பலர் சின்ன வெங்காயச் செய்கைக்கு நிலங்களைத் தயார் படுத்தி வருகின்றனர்.
"நீர்வேலி, கோப்பாய், ஊரெழு, உரும்பிராய், நவக்கிரி, புன்னாலைக்கட்டுவன் போன்ற பகுதியில் [illegible] கள் இந்தச் செய்கையில் ஈடுபட்டும் வருகின்னர்.
விதை வெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் செய்கையாளர்கள் செய்கையை ஆரம்பிக்கவும் சிரமப்பட்டும் வருகின்றனர். அதேசமயம் உண்மை விதை வெங்காயம் ஒரு சில தனியார் விற்பனை நிலையங்களில் விற்கப்பட்டும் வருகின்றன.
இந்த உண்மை விதை வெங்காயத்தைப் பயன்படுத்தி விவசாயிகள் வெங்காயச் செய்கை ஆரம்பித்து வருகின்றனர்" என்று வடக்கு மாகாண பிரதி [illegible] தெரிவித்தார். (வ-7)

## கலாபூசணம் விருதுக்கு விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம். ஜூன் 2
கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடந்தோறும் வழங்கப்படும் கலாபூசணம் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
"நாடகம் எழுத்தாளர், ஓவியம், சிற்பம், பொம்மலாட்டம், தற்காப்புக்கலை, நடனம், தாளவாத்தியம், இசை, மர்மக்கலை, கிராமியக் கலை, கவிக் கலைஞர், திரைப்படக் கலை உள்ளிட்ட கலைத்துறைகளில் சிறந்த சேவை யாற்றிய 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும்.
தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கலைத் துறைகளில் சேவையாற்றிய கலைஞர்கள் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று முழுமை செய்து எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும்" என்று தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி தெரிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர்களை தொடர்ந்தும் ஏமாற்றுகிறது கூட்டு அரசு

## நல்லது செய்யும் எண்ணம் எதுவும் அவர்களிடம் இல்லை என்கிறார் வடக்கு மாகாணக் கல்வியமைச்சர்

வவுனியா, ஜூன் 3

இந்த அரசு எமக்கு நல்லது செய்வதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. மாறாக எம்மைத் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றது என வடக்கு மாகாணக் கல்வியமைச்சர் குருகுலராஜா தெரிவித்தார்

வவுனியா வடக்குப் பிரதேச சபையின் நிர்வாகக் கட்டடமும் கலாசார மண்டபமும் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா வடக்கில் 2009 ஆம், 2010ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து மீள்குடியேற்றம் இடம்பெற்று வருகிறது. இதற்கென ஒரு அமைச்சு அமைக்கப்பட்டும் மீள்குடியேற்றம் என்ற பொய்யான நாடகத்தை அரசு தொடர்ந்து நடத்தி வருகிறது. எமது மக்களை மீள்குடியேற்றம் செய்ய இத்தனை ஆண்டு காலம் தேவைதானா என்ற கேள்வி எழுகிறது. சரியாக மீள்குடியேற்றம் செய்தால் ஒரு ஆண்டு காலம் போதுமானது. எமது மக்கள் இடம்பெயர்ந்தபோது மெனிக்பாமில் 10 மாதங்கள் வைத்திருந்தார்கள். ஏன் எங்களை அங்கு அடைத்து வைத்திருந்தார்கள். உடனே எங்கள் இடங்களில் மீள்குடியேற்றியிருக்க வேண்டும். அவ்வாறு செய்வதே தென்னிலங்கை செய்யும் நல்லாட்சியாகும். இது உலகத்தில் எந்தவொரு நாட்டிலும் நடக்காத அநீதி.

நாங்கள் முள்ளிவாய்க்காலைக் கடந்தோம். ஓமந்தையைக் கடந்தோம். ஆனால் வவுனியாவை வந்தடைய வேண்டிய அவசியமில்லை. முள்ளிவாய்க்காலில் எவ்வளவு இடமிருந்தது. அங்கேயே எங்களை விட்டிருக்கலாம். இது ஒரு காலம் கடந்த விடயம். ஆனால் சகலரும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே சொல்கிறேன்.

எமது கடற்கரை ஓரங்களை 5 வகையான இலாகாக்கள் எல்லை பிரித்துள்ளனர். முன்னொரு காலத்தில் காட்டு மரங்களை அழித்து எமது மக்கள் சந்தோசமாக வாழ்ந்தார்கள். இப்போது நாம் காட்டுக்குள் போக முடியாது. 1950 களில் இவ்வாறான எல்லைகள் போடப்படவில்லை. இதிலிருந்து எங்களை அரசு மறைமுகமாக ஒதுக்குகிறது.

வடக்கில் ஏறத்தாழ 15 பிரிகேட்கள் இராணுவ வசம் உள்ளது. முதலமைச்சரும் நானும் அண்மையில் இராணுவத்தினரின் கூட்டம் ஒன்றுக்குப் போயிருந்தோம். அங்கு முதலமைச்சர் இராணுவத்தின் பிரசன்னம் குறித்து விவாதித்தார். ஒரு பிரிகேட்டில் 2000 இராணுவத்தினரே உள்ளனர் என்று அவர்கள் கூறினார்கள். பிரிகேட் ஒன்றில் 10,000 தொடக்கம் 15,000 இராணுவத்தினர் வரை இருப்பர் என்பதே சரி. அவ்வாறாயின் எவ்வளவு இராணும் இங்குள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்

இந்த அரசு மாகாணசபைக்குப் போதிய நிதியை ஒதுக்குவதில்லை. ஏதோ வீதியை மட்டும் போட்டிருக்கிறார்கள். இந்த அரசு எமக்கு நல்லது செய்வதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

அனுராதபுரம் சிறைச்சாலையில் பலரை அடைத்து வைத்திருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் போனாலும் அவர்களைக் காண்பிப்பதில்லை. காணாமற்போன பலர் அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ளனர் என்று அரசுக்குக் கூறினால், அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று எமக்குச் சொல்லுங்கள் என அரசு எங்களிடம் கேட்கிறது. இதை யாரிடம் சொல்வது? வேறு நாட்டு அரசாக இருந்தால் காணாமற்போன உறவுகளை கண்டுபிடித்திருப்பார்கள். நவீன காலத்தில் அவர்களின் படத்தைக் கொண்டு தேடுவது இலகுவானது. இதை அரசு செய்யவில்லை. சரியான தகவலைச் சேகரிக்கவில்லை. அரசு இந்த விடயத்தில் எங்களைப் புறந்தள்ளுகிறது என்றார். (த-402)

# நீதிமன்ற சிறைக் கூண்டுக்குள் இருந்த கைதி தப்பியோட்டம்

## சாவகச்சேரியில் வியாழனன்று சம்பவம்

சாவகச்சேரி, ஜூன் 3

நீதிமன்றச் சிறைக் கூண்டுக்குள் அடைக்கப்பட்டிருந்த நபரொருவர் வேறு சில கைதிகளுடன் வெளியே வந்து தப்பியோடிய சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது.

நீதிமன்றில் நடைபெற்ற தாபரிப்பு வழக்கொன்றின் பிரதிவாதியான வலிகாமத்தைச் சேர்ந்த குறித்த நபர் தவணைக் கட்டணம் செலுத்தாமையால் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவானால் உத்தரவிடப்பட்டது. அவர் நீதிமன்றச் சிறைக்கூண்டுக்குள் அடைக்கப்பட்டார்.

இந்தவேளையில், மற்றொரு வழக்கின் பிரதிவாதிகள் நீதிமன்றக் கூண்டிலிருந்து வெளியே அழைத்து வரப்பட்டபோது குறித்த நபரும் வெளியே வந்துள்ளார்.

இதன்போது அங்கு நின்ற சிறைச்சாலை அதிகாரிகள், வழக்கு ஒன்றை அவதானித்துக் கொண்டிருந்த வேளை, வெளியே நித்தப்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வெளியேறிய இவர் நீதிமன்றம் கலையும் வரை மீண்டும் வராததால் அவரைக் கைது செய்யும் நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# நடமாடும் சேவைகள் இடரால் இடைநிறுத்தம்

கிளிநொச்சி, ஜூன் 3

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெறவிருந்த அமைச்சர்கள் மட்டத்திலான நடமாடும் சேவைகள் அனைத்தும் தெற்கில் ஏற்பட்ட இடர் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நடமாடும் சேவையே தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

தெற்கில் ஏற்பட்ட இடரினால் சகல அமைச்சர்களும் அங்கு பணியில் இருப்பதால் வடக்குக்கு வர முடியாத நிலையில் இந்த நடமாடும் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவைகளை வேறொரு தினத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் மேலும் கூறப்பட்டது. (த-101)

# ராணுவத்தினர் அழித்த தென்னந்தோட்டத்தை மீளுருவாக்க உதவிகள்

## தோட்ட உரிமையாளரிடம் வடக்கு தென்னை பயிர்ச் செய்கைச் சபை பொறுப்பதிகாரி உறுதி

தென்மராட்சி, ஜூன் 3

படையினரால் 14 ஆண்டுகள் பயன்படுத்தப்பட்டதால் தரிசுநிலமாக மாறியுள்ள தென்னந்தோட்டத்தை மீள உருவாக்க மாகாண சபை ஊடாக உதவி பெற்றுத் தருவதாக வடக்கு மாகாணத் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை பொறுப்பதிகாரி உறுதியளித்துள்ளார் எனத் தோட்ட உரிமையாளர் ஒருவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 1998 ஆம் ஆண்டு படையினர் எனது காணியில் தங்கியிருந்தனர். அங்கு காணப்பட்ட தென்னை மரங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தை வழங்குமாறு முகாம் பொறுப்பதிகாரிக்கு முறையிட்டபோது பிரதேச செயலகத்தில் நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் கூறினார். பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டபோது நட்டஈடு வழங்க இயலாது எனத் தெரிவித்தார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு படையினரால் எனது காணி விடுவிக்கப்பட்டு அங்கு சென்றவேளை மண்மேடுகளும் பற்றைகளும் காணப்பட்டன. தென்னை மரங்கள் எதுவும் காணப்படவில்லை.

காணியைத் திருத்தி மீண்டும் தென்னைகள் பயிரிட இலங்கைத் தெங்குப் பயிர்ச் செய்கையாளர் சங்கம், தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை, தெங்கு அபிவிருத்தி தோட்ட அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றுடன் பல தடவைகள் தொடர்பு கொண்டும் பயன் கிடைக்கவில்லை. அண்மையில் யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாண தென்னை உற்பத்தியாளர் சங்கக் கூட்டம் நடைபெற்றபோது என்னால் இந்த விடயம் முன்வைக்கப்பட்டு மனுவும் கையளிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த இலங்கை தெங்குச் செய்கையாளர் சங்கத் தலைவர் லயன்ஸ் பொன்சேகா, தென்னைப் பயிர்ச் செய்கைத் தலைவர் கபில ஜெயகந்தவல மற்றும் வடக்கு மாகாணத் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை பொறுப்பதிகாரி தே.வைகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எனது கோரிக்கையைக் கவனத்தில் எடுத்த தென்னிலங்கை அதிகாரிகள், விரைவில் தீர்வு பெற்றுத் தருவதாகக் கூறினர். வடக்கு மாகாண தென்னைப் பயிர்ச் செய்கை சபை பொறுப்பதிகாரி தோட்டத்தை நேரில் பார்வையிட்டு மாகாண சபை மூலம் உதவி பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்தார் என்றார். (த-9)

# பனம்பொருள் கைப்பணியை ஊக்குவிக்க சிறப்புப் பயிற்சி

## மட்டக்களப்பில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 3

பனம் நாரில் இருந்து பல்வேறு வகையான கைப்பணிப் பொருள்களை உற்பத்தி செய்து மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதற்குப் பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பிளாஸ்ரிக் பொருள்கள் தடை செய்யப்பட்டுவரும் நிலையிலேயே பனம் நாரில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான பயிற்சிகள் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்படவுள்ளன. பனை அபிவிருத்திச் சபையின் 15 போதனாசிரியர்களுக்கும், 15 உற்பத்தியாளர்களுக்கும் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இந்தப் பயிற்சிகளைத் தொடர்ச்சியாக நடத்த பனை அபிவிருத்திச் சபை திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிளாஸ்ரிக் தடையால் பனம் கைப்பணிப் பொருள்களுக்குக் கிராக்கி ஏற்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்கும், பிற மாவட்டங்களுக்கும் இவை கூடுதலாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன எனக் கூறப்பட்டது. (த-17)

# தமிழரை தொடர்ந்தும் மூன்றாந் தரப்பாகவே கருதிவருகின்றது அரசு

## சாந்தி சிறீஸ்கந்தராசா எம்.பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூன் 3

வாழ்வாதாரரீதியாகவும் வாழ்வியல்ரீதியாகவும் தொடர்ந்தும் இந்த அரசு தமிழரைப் புறக்கணிக்கிறது. தமிழ் மக்களை மூன்றாந் தரப்பாகக் கருதிச் செயற்பட்டு வருகிறது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிவடைந்து 9 வருடங்கள் கடந்தும் வன்னி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. மக்களது காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றது. அவை இன்னமும் விடுவிக்கப்படவில்லை.



முல்லைத்தீவு மாவட்டத்தில் மீனவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது உள்ளன. தென்பகுதி மீனவர்கள் பொருத்தமற்ற மீன்பிடி முறைகளைப் பின்பற்றுவதால் முல்லைத்தீவு மீனவர்கள் பாதிப்படைந்து வருகின்றனர். அதனைத் தடுக்க அரசு முன்வரவில்லை.

இதனால் வாழ்வாதாரரீதியாகவும் வாழ்வியல்ரீதியாகவும் இந்த அரசு தமிழரைத்தொடர்ந்து புறக்கணிக்கிறது என்றார். (த-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஒரு மில்லியன் பெறுமதியான நிவாரணப் பொருள்களை அனுப்பி வைத்தது மன்னார்

## இடரினால் அதிகம் பாதிக்கப்பட்ட காலி மாவட்டத்துக்கு வழங்குவதற்கு

மன்னார், ஜூன் 3

தெற்கில் இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்களை காலி மாவட்டத்துக்கு அனுப்பி வைத்துள்ளது மன்னார் மாவட்டச் செயலகம்.

மன்னார் மாவட்டச் செயலகத்தினால் சேகரிக்கப்பட்ட இந்தப் பொருள்கள் நேற்றுக் காலை அனுப்பி வைக்கப்பட்டன.



தென் பகுதியில் இடரினால் 15 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இரத்தினபுரி, காலி, மாத்தறை,களுத்துறை,கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய 6 மாவட்டங்களே அதிகளவில் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளும் வகையில் சகல மாவட்டங்களிலும் நிவாரணப் பொருள்கள் சேகரிப்பு இடம்பெற்று வருகின்றது.

மன்னார் மாவட்டச் செயலர் எம்.வை.எஸ்.தேசப்பிரியவின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய 5 பிரதேச செயலகங்களின் ஊடாகக்கிராமங்களில் நிவாரணப் பொருள்கள் சேகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் பிரதேச செயலர் பரமதாஸ்,நானாட்டான் பிரதேச செயலர் சிறிஸ்கந்தகுமார், முசலிப் பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார், மாந்தை மேற்குப் பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரன், மடு பிரதேச செயலர் எப்.சி.சத்தியசோதி ஆகியோர் தமது பிரதேச செயலகங்களின் ஊடாகச் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்களை நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலரிடம் கையளித்தனர். இதில் மன்னார் மாவட்ட மேலதிகச் செயலர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெலும் கலந்துகொண்டார்.

சுமார் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் இவ்வாறு சேகரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிவாரணப் பொருள்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடரால் அதிகளவில் பாதிக்கப்பட்ட காலி மாவட்ட மக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த - 56)

# ஒட்டுசுட்டானில் இடரால் பாதிப்புற்றோர் அந்தரிப்பு

## உதவிகள் கிடைக்கவில்லை எனக் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூன் 3

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் கடந்தவாரம் ஏற்பட்ட இயற்கை இடரில் பாதிக்கப்பட்ட 19 குடும்பங்களுக்கு போதிய உதவிகள் வழங்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் இது குறித்துக் கூறுகையில்,

கடந்த வாரம் இலங்கையில் ஏற்பட்ட பெரும் இயற்கை இடரால் தெற்கில் 7 மாவட்டங்களில் கடும் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டன.

ஆயினும் வடக்கில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை ஒரு சிறு நிவாரணமும் வழங்கப்படவில்லை. ஒட்டுசுட்டானில் 19 வீடுகள் தேசமடைந்தன. இரண்டு கால்நடைகள் உயிரிழந்தன. 38 பேரின் வாழ்வாதாரம் பாதிப்படைந்தது. இதற்கான உதவிகள் எதுவும் இன்றுவரை கிட்டவில்லை.

இதே நிலைமைதான் வவுனியா மாவட்ட மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது. எமக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து எவரும் வெளிப்படுத்தவில்லை. ஒரு நேர உணவுகூட வழங்கப்படவில்லை. அழிவடைந்த தெற்கை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோர் எம்மையும் திரும்பி பார்க்கவேண்டும் என்றனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் அனிருத்தனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

எமது பிரிவின் கீழ் உள்ள சில வீடுகள் கடந்த வாரம் வீசிய பலத்த காற்றினால் தூக்கி வீசப்பட்டிருந்தன. இங்கு மட்டும் 19 தற்காலிகக் கொட்டகைகள் பாதிப்படைந்தன எனக் கண்டறியப்பட்டது. இவ்வாறு பாதிப்படைந்த குடும்பங்களுக்கான உதவிகள் தொடர்பில் நாம் உடனடியாகவே அறிக்கையிட்டிருந்தோம்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் இயற்கை இடரில் அகப்பட்ட 19 வீட்டு உரிமையாளர்களுக்குமான கொடுப்பனவாகத் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்குத் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனைப் பொருளாகவா அல்லது பணமாகவா வழங்குவது என்பது தொடர்பில் ஆராயப்படுகின்றது.

இவற்றை அடுத்தவார முற்பகுதியில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட 19 குடும்பங்களின் இருப்பிடங்கள் சேதமடைந்துள்ள போதிலும் அவர்கள் இடம்பெயரும் சூழல் ஏற்படாதமையால் இருப்பிடங்களைச் சீர் செய்யும் பணி மட்டுமே முன்னெடுக்கப்படுகின்றன -என்றார். (த - 101)

# ஒட்டுசுட்டானில் இடிதாங்கி அவசியம்

முல்லைத்தீவு, ஜூன் 3

ஒட்டுசுட்டான் பகுதியில் இடிதாங்கி அமைக்கப்படவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதியில் கடந்த காலங்களில் மாணவன் ஒருவனும், மாணவி ஒருவரும் இடிமின்னலால் உயிரிழந்துள்ளனர். கால்நடைகள் உயிரிழந்துள்ளன. பல பயன்தகு மரங்கள் அழிந்துள்ளன.

அத்துடன் வானொலி, தொலைக்காட்சி உபகரணங்களும் சேதத்துக்குள்ளாகின.

இந்தப் பகுதியில் இடிமின்னல் ஏற்படும்போது மக்கள் அச்சத்துடன் வாழவேண்டியுள்ளது. இதனால் இந்தப் பகுதிக்கு உடனடித் தேவையாக இடிதாங்கி அமைக்கப்படவேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

(த - 500)




# 100 விவசாயிகள் 252 ஏக்கரில் சட்டவிரோதமாக சிறுபோகம்

## அதனை உடன் அழிப்பதற்குத் தீர்மானம் 5 ஆண்டுகளுக்கு அரச மானியமும் நிறுத்தம்

கிளிநொச்சி, ஜூன் 3

கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்குட்பட்ட இரணைமடுக்குளம் தவிர்ந்த பிரதேசத்திலும் 8 கமநல சேவைகள் நிலையங்களின் கீழும் 100 விவசாயிகள் சட்டவிரோதச்சிறுபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ளனர்.

சுமார் 252 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நெற்செய்கை அழிக்கப்படவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்தார்.

அத்துடன் இனிவரும் காலங்களில் இவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கான மானிய உர விநியோகம் உட்பட இதர உதவித் திட்டங்கள் நிறுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை போதியளவு மழை வீழ்ச்சியின்மையால் குளங்களில் நீர் வற்றிப் போயுள்ளது. இதனால் 2017ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட அளவானது மிகக் குறைவாக உள்ளது.

இந்த நிலையில்,

சிறுபோக நெற்செய்கை தொடர்பில் உள்ள கட்டுப்பாடுகளை மீறிச் சிலர் சட்டவிரோதமான முறையில் குளத்து நீரைப் பயன்படுத்தியும், வயல்களில் அனுமதியின்றி திறந்தவெளிக் கிணறுகளையும் குழாய்க் கிணறுகளையும் அமைத்தும் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு 100 விவசாயிகள் 252 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொண்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் கீழ் 60 விவசாயிகள் 169 ஏக்கரிலும், இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 13 விவசாயிகள் 27 ஏக்கரிலும், புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தின் கீழ் 12 விவசாயிகள் 25 ஏக்கரிலும், உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 10 விவசாயிகள் 23 ஏக்கரிலும், பளை கமநல சேவை நிலையத்தின் கீழ் 5 விவசாயிகள் 6 ஏக்கரிலும் நெல் பயிரிட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தச் சட்டவிரோத பயிர்ச் செய்கையானது சட்ட ரீதியான முறையில் நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கும் அழிவை ஏற்படுத்தும்.

கிளிநொச்சி மாவட்ட விவசாய அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த 100 விவசாயிகளுக்குமான மானிய உதவித் திட்டங்களை எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு நிறுத்துவதற்கும், சட்டவிரோத நெற்செய்கையை அழிப்பதற்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரணைமடுக் குளத்தின் கீழ் சட்டவிரோத பயிர்செய்கையில் ஈடுபட்டவர்களுக்கும் மானிய உதவித் திட்டங்கள் நிறுத்தப்படவுள்ளன - என்றார். (த - 101)

# கிளிநொச்சி பனை தென்னை சங்கத்தின் பணி பாதிப்புறாது

## கள் அடைப்பதற்கான வரியைச் செலுத்த வங்கியில் உள்ள பணத்தைப் பெற ஏற்பாடு

கிளிநொச்சி, ஜூன் 3

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கள் அடைப்புப் பணிக்கான வரியைச் செலுத்துவதற்குரிய பணத்தை வங்கியில் இருந்து பெறுவதற்கான ஏற்பாடுகளை மாகாணக் கூட்டுறவு பதில் ஆணையாளர் சி.சிவகரன் மேற்கொண்டதால் பணிகள் பாதிப்படையாது தொடரும்நிலை காணப்படுவதாகச் சங்கத்தின் பொது முகாமையாளர் கி.துரைசிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கள் அடைப்பு வரியைச் செலுத்துவதற்கு வங்கியில் கடன் பெறுவதற்கு மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் அனுமதிக்காமையால் பணிகள் பாதிப்படையும் அபாயம் காணப்படுவதாகக் கடந்த வாரம் பொதுமுகாமையாளர் சுட்டிக்காட்டியிருந்தார்.

குறித்த சங்கமானது 650 அங்கத்தவர்களையும் 120 பணியாளர்களையும் கொண்டுள்ளது. நிதியின்மை காரணமாகப் பணிகளில் ஏற்படவுள்ள பாதிப்புத் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தற்போதுள்ள நிலை என்ன என பொது முகாமையாளரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை சங்கத்தால் 3 லட்சம் போத்தல் கள் அடைக்கப்பட்டு அதற்காக 90 லட்சம் ரூபா வரியாகச் செலுத்தப்பட்டுவிட்டது. மேலும் 30 ஆயிரம் போத்தல் கள் அடைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான வரியைச் செலுத்துவதற்காக வங்கியில் கடனை பெறவேண்டுமானால் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதி தேவை. அந்த அனுமதியை நாம் எழுத்தில் கோரியிருந்தோம். ஆயினும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

எமது சங்கத்தின் சேமிப்புப் பணமான 8 கோடி ரூபா வங்கியில் நிரந்தர வைப்பில் உள்ளது. இதனால் எமக்கு வங்கியில் கடனைப் பெறுவதில் எந்தத் தடையோ தாமதமோ இருக்காது. ஆயினும் அபிவிருத்திக்கு வழி ஏற்படுத்தவேண்டிய ஆணையாளரே அதற்குத் தடையாகவுள்ளார் என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தோம்.

குறித்த விடயத்தை மாகாண ஆணையாளரின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்திருந்தோம்.

இது தொடர்பில் பத்திரிகைச் செய்தியைப் பார்வையிட்ட மாகாண ஆணையாளர், எம்மை அழைத்து இது தொடர்பில் கலந்துரையாடியதோடு சங்கத்தின் வைப்பில் உள்ள பணத்தில் இருந்து ஒரு கோடி ரூபாவைப் பெறுவதற்கான ஆணையை மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு வழங்கியதுடன் எமக்கும் தெரியப்படுத்தியுள்ளார். இதனால் எமது சங்கம் மேலும் 30 ஆயிரம் போத்தல் கள் அடைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது - என்றார்.

(த - 101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

# வவுனியாவில் இன்று மாபெரும் கவனவீர்ப்பு

வவுனியா, ஜூன் 3
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தின் 100ஆவது நாளான இன்று மாபெரும்கவனயீர்ப்புப்போராட்டம்ஒன்றுமுன்னெடுக்கப்படவுள்ளது. இதில் சகலரையும் கலந்து கொள்ளுமாறும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளைத் தேடிக் கண்டறியும் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவி ஜெய வனிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காணாமல் போனவர்களை விடுவிக்கும் போராட்டம் வவுனியாவில் 99ஆவது நாளாக நேற்று இடம்பெற்றுள்ள நிலையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"எமது போராட்டம் காலவரையறையற்றுத் தொடரும். இராணுவத்தினர் எமது பிள்ளைகளை விடுவிக்க வேண்டும். பிள்ளைகளுக்கு நடந்தது என்ன என்பதை அரசு தெளிபடுத்த வேண்டும். தெளிவுபடுத்துவதற்கு ஜனநாயகம் இல்லாத அரசு எமது போராட்டத்தைக் கொச்சப்படுத்தி வேடிக்கை பார்த்து நிற்கிறது. பொறுப்பற்ற கருத்துக்களைத் தலைமை அமைச்சர் உட்பட பல்வேறு அரசியல் பிரமுகர்களும் கூறிவருகின்றனர். கூட்டு அரசு உண்மையானது என்றால் எங்களது பிள்ளைகளுக்கு நடந்தது என்பதை விசாரித்து உரிய பதிலை வழங்க வேண்டும் .எமது பிரச்சினை பன்னாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. நாம் கூறுவதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் பன்னாடுகள் எமது பிள்ளைகளின் நிலையை வெளிப்படுத்தக் கேட்கும். அப்போதாவது அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும். இல்லையேல் பன்னாட்டுச் சமூகம் எமக்காகப் போராட முன்வரும். இல்லேயேல் பன்னாடுகளும் எம்மை ஏமாற்றுவதாக நாம் கருதில் கொண்டு அடுத்த கட்டப் போராட்டதுக்கு நகர்வோம். அதை யாரும் தடுக்க முடியாது. எமது போராட்டத்தைக் கொச்சப்படுத்தும் சிலர் தமது பிள்ளைகளுக்கு இவ்வாறான துன்பம் நிகழ்ந்திருந்தால் எவ்வாறு கதறியழுவார்கள். எத்தனை நாள்கள் தெரிவில் நிற்கின்றோம். எமது சொந்தங்களைப் பார்க்காது இன்று தெருவைப் பார்த்து 100 நாள் ஆகிறது. நாம் இருந்து தான் என்ன இறந்து தான் என்ன. இந்தச் சின்ன நாட்டுக்குள் எமது பிள்ளைகளுக்கு நடந்ததைத் தெரியப்படுத்த தயக்கம் ஏன். 100 ஆவது (இன்று) சனிக்கிழமை எமது போராட்டத்துக்குப் பொதுமக்கள் அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், அரச அரசசார்பற்றவர்கள் எனப் பலரும் எமக்காகக் கொஞ்ச நேரம் ஒதுக்கி வவுனியா முதன்மைத் தபாலகம் முன் வருகை தந்து கவனவீர்ப்புப் போரட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் கோருகிறோம்." என்றார்.

இதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முன்னெடுத்து வரும் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.
(ஜ - 4-402)

# முத்துஜயன் குளம் வற்றியதால் நன்னீர் மீன்பிடி பெரும் பாதிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 3
"முத்துஜயன்கட்டுக் குளத்தில் நீர் வற்றியதால், நன்னீர் மீன்பிடித் தொழில் பொரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. அதை நம்பியிருந்த குடும்பங்களின் வாழ்வாதாரம் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. மீண்டும் தொழிலில் முழுமையாக ஈடுபடும் வரை எமக்கு உதவிகள் வழங்குவதற்கு முன்வர வேண்டும்." - என்று பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முத்துஜயன்கட்டுக் குளத்தின் கீழ் 55 குடும்பங்களுக்கு மேல் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டுவருகின்றனர். கடந்த வருடம் குளத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றமையாலல் எங்கள் தொழில் முழுமையாகப் பாதிக்கப்பட்டது. நிவாரண உதவிகள் கிடைத்த காரணத்தால் எங்கள் குடும்பங்கள் மூன்று நேரம் உணவு உண்ணக்கூடியதாக இருந்தது. பருவ மழை பொய்த்துப் போனமையால், தற்போது குளத்தில் நீர்மட்டம் குறைவாக உள்ளது. 35 இக்குக் குறைவான குடும்பங்களே தற்போது தொழில் ஈடுபட்டு வருகின்றோம். ஒரு நாளைக்கு 10 கிலோவுக்கும் குறைவான மீன்களையே பிடிக்கக் கூடியதாக உள்ளது. அதனால் ஆயிரம் ரூபா வருமானத்தைப் பெற்றுக்கொள்வதே பெரும் சிரமமாக உள்ளது. எங்கள் வாழ்வாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இதே நிலமை இன்னும் தொடருமானால் பட்டினி ஏற்படும் அபாய நிலை ஏற்படும். இதில் இருந்து எங்களை மீட்டெடுப்பதற்கு உரியவர்கள் தகுந்த உதவிகள் செய்வதற்கு முன்வர வேண்டும்." என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
(ஜ -7)

# கவிக்கோவின் மறைவு தமிழ் உலகுக்கு இழப்பு

*அமைச்சர் ரிசாத் அனுதாபம்*

கொழும்பு, ஜூன் 3
பெருங் கவிஞரும், தமிழ் பேராசிரியருமான கவிக்கோ அப்துல் ரகுமானின் மறைவு, தமிழ் கூறும் நல்லுலகுக்குப் பெரும் இழப்பாகும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரிசாத் பதியுதீன் கவிக்கோவின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வானம்பாடி இயக்கக் கவிஞர்களோடு இணைந்து இயங்கிய தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்தத் தமிழ் பேராசானின், எழுத்துக்களின் தாக்கம் இலங்கை எழுத்தாளர்களையும் ஆகர்ஷித்ததுடன் அவர்களை எழுதத் தூண்டியது. அதுமாத்திரமன்றி சிறந்த எழுத்தாளர்களாகவும் அவர்களை ஆக்கியது. பேராசிரியர் கவிக்கோ தமிழில் ஹைக்கூ,கஜல் ஆகிய பிறமொழி இலக்கியங்களைப் புனைந்ததிலும், அவற்றை பரப்பியதிலும் முன்னணி வைத்தவர்.

கவிக்கோ இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் தலைவராக இருந்து தனது வாழ்நாளில் ஒன்பது இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தியிருக்கின்றார். 2014ஆம் ஆண்டு கும்பகோணத்தில் நடைபெற்ற மாநாடு இசைக்கு முக்கியத்துவம் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கவிக்கோ சிறந்த தமிழ்ப் பற்றாளர். நல்ல பண்பாளர், விருந்தோம்பும் பண்பு உடையவர்.

தமிழ் வாழும் தோறும் கவிக்கோவின் எழுத்துக்கள் வாழும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

அன்னாரின் மறைவால் கவலையுறும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன். " எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
(ஜ-4)

# கீழைத்தேய ஆடல் கதை வவுனியாவில் மேடையேற்றம்



வவுனியா,ஜூன் 3
வவுனியா மாவட்ட ஆடல் அணியினரின் பங்கேற்புடன்'கரையேற மறுக்கும் ஓடங்கள்' என்னும் தலைப்பில் கீழைத்தேய ஆடல்கதை தயாரித்து மேடையேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஈழத்தின் மூத்த கலைஞர் கலாபூசணம் வேல் ஆனந்தனின் நெறியாழ்கையில் இந்த ஆடல்கதை தயாரிக்கப்பட்டுள்ளது

மேற்படி ஆடல்கதையின் ஆரம்ப விழாவும் இறை ஆசிவேண்டும் வழிபாடும் அண்மையில் வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்றது. ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாடுகளைத் தொடர்ந்து, ஆடல்கதையின் மூலப்பிரதியைக் கலைஞர் வேல் ஆனந்தன் வெளியிட்டு வைக்க, வவுனியா தெற்கு கல்வி வலய நடனபாட ஆசிரிய ஆலோசகரும் வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி அதிபருமான திருமதி சூரியயாழினி வீரசிங்கம் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத் திருமண மண்டபத்தில் கலைஞர் சந்திப்பும் கலந்துரையாடலும் இடம்பெற்றது. வவுனியா மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். வவுனியா பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன் மற்றும் கலைஞர்கள், இசை நடன ஆசிரியர்கள் மாண வர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.
(ஜ)

# இடரால் அ.அட்டைகளை தொலைத்தோருக்கு வசதி

கொழும்பு, ஜூன் 3
இடர்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்களில், அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்களுக்கு மீளப் பெற்றுக் கொடுப்பதற்கான சிறப்பு வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் என்று ஆள்பதிவுத் திணைக்களம் தெரிவித்தது.

அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னர், கிராம சேவகர், பிரதேச செயலரின் அனுமதியுடன் புதிய அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்க முடியும். அதற்கான விண்ணப்பப்படிவங்களை அவர்களிடமே பெற்றுக் கொள்ள முடியும் எனவும் திணைக்களம் மேலும் தெரிவித்தது.
(ஜ-10)

**Nedunkerny palm recourses development co-operative society**
invites eligible local and national manufacturers, authorized dears and or distributors to submit quotations for the following on an urgent basis.

| Package no | Item no | Description of goods | Quantity | Delivery location |
|---|---|---|---|---|
| Package -1 | 1 | Mini ro plant(200litre/ hour or 500 liter /hour) | 1 nos | Nedunkerny vavuniya |
| | 2 | Water bath<br>A)thermal control<br>B) 200 bottles (190 ml)/batch | 2 nos | |
| | 3 | Containers<br>A)capacity 50 liter<br>B)food grade stainless steel<br>C) with lid and handle | 2 nos | |
| | 4 | Ice box(10 liter) | 5 nos | |
| | 5 | Trolley and bottle(190 ml) stand/50 bottles | 2 nos | |
| Package -2 | 1 | Juice dispenser<br>a) Capacity-20 liter<br>b) Temprature-4-8°c | 2 nos | |
| | 2 | Bottle(190ml) | 50000 nos | |
| | 3 | Freezer<br>a) Temprature-4-8°c<br>b) Capacity -500 liters | 2 nos | |
| | 4 | Cooler for storage<br>a) Temprature-4-8°c<br>b) Capacity -1000 bottles(190ml) | 2 nos | |
| | 5 | Cooler for transport<br>a) Temprature-4-8°c<br>b) Capacity -1000 bottles(190ml) | 2 nos | |
| Package -3 | 1 | Hand held Brix meter-Digital<br>a)0-90 Brix<br>b)Full Resolution Display of concentration or Temperature<br>c) Shallow Stainless steel prism dish<br>d)Rapid temperature stabilization<br>e)Durable<br>f)Certificate of Calibration<br>g) Temperature range-(5-95°c) | 1 Nos | |
| | 2 | Hand held Brix meter-Normal<br>a)0-90 Brix<br>b)Smooth helical focusing eye piece<br>c)Rubber coated Body<br>d)Metal Prism<br>e)Rubber Hand grip<br>f) Certificate of Calibration | 1 Nos | |
| | 3 | Hand held pH Meter<br>a)Digital<br>b)Measuring range (1-14)<br>c)Accuracy- 0.1 | 1 Nos | |
| | 4 | Packing Machine powder filling and sealing Machine | 1 Nos | |

The technical specifications, price schedule, delivery locations and term /conditions can be obtained from our office located in main street nedunkerny by paying non refundable fees of rs 1,000.00. Any suppliers who submit a quotation without confirming to the bidding documents will be considered as technically non responsive and the offer will be rejected. All quotation must be clearly marked with on the top left corner of the envelope. The dead line for submission of the quotations is 22nd of June 2017 12.00 pm. All the quotations are opened thereafter immediately and all quotations must be sealed and delivered to the addressed below. All the late offers will be rejected. Nedunkerny palm recourses development co-operative society reserves the right to accept or reject the bid.

The president
Nedunkerny palm recourses development co-operative society
Main Street
Nedunkerny
Vavuniya

(0067)(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியக் கடற்படையினரின் வைபவத்தில் இலங்கைத் தளபதி பங்கேற்றதால் சர்ச்சை

கொழும்பு, ஜூன் 3
இந்தியக் கடற்படை நிகழ்வில் இலங்கைக் கடற்படை தளபதி கலந்து கொண்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
இந்தியக் கடற்படை அதிகாரிகள் பயிற்சி முடித்து வெளியேறும் நிகழ்வில், இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல்விஜேகுணவர்த்தன சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.
கேரள மாநிலம் எழிமலவில் உள்ள இந்தியக் கடற்படைக் கல்லூரியில் நடந்த நிகழ்விலேயே அவர் கலந்து கொண்டார்.
இது தொடர்பாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இந்திய இராணுவத்தைப் பொறுத்தவரை இதுபோன்ற முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்பதற்கு, வெளிநாட்டுப் படை அதிகாரிகள் இதுவரை அனுமதிக்கப்படவில்லை.
காலங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் இந்த மரபை மீறும் வகையில் எழிமல நிகழ்வில் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் விஜேகுணவர்த்தன சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்திய வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட அவர், பயிற்சி முடித்த அதிகாரிகளுக்கான சின்னங்களையும் சூட்டினார்.
இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலையின் உச்சக்கட்டமான முள்ளிவாய்க்கால் பேரவலம் தொடர்பான நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டுவரும் வேளையில் இந்திய மத்திய அரசின் செயல் பல்வேறு தரப்பினரிடமும் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது - என்றுள்ளது. (த-10)

# உள்ளூராட்சித் தேர்தல் தாமதம்; மகிந்த அணியினர் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 3
இலங்கையில்உள்ளூராட்சித்தேர்தல் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டு வருவது குறித்து மகிந்த அணியினர் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் துங்லாய் மார்க்கிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.
பொது எதிரணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் சென்ற குழுவினர், ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவருடன் சுமார் ஒரு மணி நேரம் கலந்துரையாடினர். இலங்கையில் 335 உள்ளூ ராட்சிச் சபைகளுக்கான தேர்தல் கடந்த இரண்டு வருடங்களாக ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. அதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகள் பாரதூரமாக மீறப்பட்டு வருகின்றன எனவும் முறையிட்டனர்.
அத்துடன், சுகாதாரச் சீர்கேடுகளால் டெங்கு நோய் இலங்கையில் தீவிரமாகியுள்ளது எனவும், அதனால் உயிரிழப்புக்கள் நாளாந்தம் அதிகரித்து வருவதா கவும் அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். தினேஷ் குணவர்தன வின் தலைமையில் சென்ற இந்தக் குழுவில் பிரசன்ன ரணதுங்கவும், நாமல் ராஜபக்சவும் இடம்பெற்றிருந்தனர். (ஐ)

**வேலையாள்கள் தேவை**
மிக்ஷர் கடைக்கு ஆண் பணியாளர்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
இல.07, யாழ்ப்பாண பேருந்து நிலையம்.
077 631 6273

**விற்பனைக்கு**
இசுசு ஜெமின் மோட்டார் கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
சனி, ஞாயிறு மட்டும்.
077 684 8324/ 021 222 7650
(C/S 0046624) (14)

**காணியும் வீடும் விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கச்சேரி , நல்லூர் வீதியில் முத்திரைச்சந்திக்கு அண்மித்ததாக 1½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
075 796 0594


**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**
எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.
இல.303,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468

**மணமக்கள் உள்ளனர்**
சகல கிறிஸ்தவர்களுக்கும் மணமகன், மணமகள் உள்ளனர்.
முதல் முறையாக தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்.
விளம்பர இலக்கம் 5538
C/O - உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**தவறிவிட்டது**
காந்தியழகன் சிறிசனாத் என்பவருடைய ஆவணங்கள், உடுபுடைவைகள் அடங்கிய Brown Colour பயணப்பொதி 01.06.2017 அன்று இரவு யாழ்.தனியார் பஸ்நிலையத்துக்கும் நாவற்குழிக்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்.
077 604 1063, 077 311 6602

**வீடு வாடகைக்கு**
வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு மிக அண்மையில் 789, 785 பேரூந்து மார்க்கத்தில் Carpet வீதி முகப்புடன் 6 அறை வசதியான வீடு பயன் தரு மரங்களுடனும், தளபாடங்களுடனும் உடனடியாக குடிபுகக் கூடிய முறையில் வாடகைக்கு உண்டு.
077 203 5419

# இடரால் பாதிப்புற்றோருக்கு 19 நாடுகள் நிவாரண உதவி

கொழும்பு ஜூன் 3
வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை மேற்கொள்ள இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் உள்ளிட்ட 19 நாடுகள் முன்வந்துள்ளன என்று கொழும்பு அரசு தெரிவித்தது.
2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிவாரண நிதியாக இதுவரை கிடைத்துள்ளன. மேலும் இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளது 7 போர்க் கப்பல்கள் நிவாரணப் பொருள்களுடன் கொழும்புத்துறை முகத்தை வந்தடைந்த நிலையில், ஜப்பான், மாலைதீவு ஆகிய நாடுகளது நிவாரணக் கப்பல்கள் இவ்வார இறுதியில் கொழும்பை வந்தடையும்.
வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர்களால் பாதிக்கப்பட மக்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில், பன்னாடுகள் தமது நிவாரணங்களை வழங்கி வருகின்றன. இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, அமெரிக்க உள்ளிட்ட நாடுகளின் நிவாரணங்கள் இலங்கைக்குக் கிடைத்துள்ள நிலையில் , 19 நாடுகள் இலங்கைக்கு உதவத் தயாராக உள்ளன என்றும் அரசு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-4)

ஸ்ரீ காளியம்மன் துணை
**பண்டித் - குமார் சாஸ்த்திரி**
**ஸ்ரீ காளியம்மன் ஜோதிட நிலையம்**
தொடர்புகளுக்கு
**077 251 8305 / 077 467 0325**
இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம், கைரேகை பார்த்துப்பலன் சொல்லுவார். கணவன், மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை, இதுவரை திருமணமே ஆகாதவர்கள் வேலை, தொழில், உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். கண்திருஸ்டி, செய்வினை கோளாறு (Black Magoc) போன்றவற்றுக்கும் தீர்வு கிடைக்கும்.
நாதன் இன், 394 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலின்ரன் சந்தியில் இருந்து 100 மீ. பெருமாள் கோயில் போகும் பாதையில்)

**வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம்**
**12.06.2017 திங்கட்கிழமை**
**வியாபார நிலையங்களுக்கான இடம் வழங்கல்**
வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா 12.06.2017 திங்கட்கிழமை நடைபெற இருப்பதால் வியாபார நிலையங்களுக்கான இடங்கள் 07.06.2017 புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11.06.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.00 மணிவரை வழங்கப்படும். 11.06.2017 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குப் பின்னர் வாகனங்கள் ஆலய வளாகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.
தலைவர்,
வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினர்.

# இயற்கை இடர் அபாயத்தில் இலங்கை

## அமைச்சர் டிலான் பெரேரா எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 3
இலங்கை இயற்கை இடர் அபாயம் உள்ள ஒரு பிராந்தியமாக அறியப்பட்டுள்ளது. அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பிலான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று பெருந்தெருக்கள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
"இலங்கை இயற்கை இடர் அபாயம்உள்ளஒருபிராந்தியமாகவே அறியப்பட்டுள்ளது. முன்னர் அவ்வாறு இருக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களுக்கு உதவவேண்டிய அதேவேளை, எதிர்காலத்தில் மழை நீரைச் சேகரித்தல் மற்றும் இவ்வாறான இடர்கள் ஏற்படும்போது எவ்வாறு முன்னேற்பாடுகளை மேற்கொள்வது என்பது தொடர்பில் திட்டம் ஒன்றை உருவாக்குவது குறித்து அரச தலைவர் அமைச்சரவையுடன் கலந்துரையாடியுள்ளார். எதிர்காலத்தில் இவ்வாறான இடர்கள் ஏற்படும் போது எவ்வாறு மக்களைப் பாதுகாக்க முடியும் என்பது தொடர்பிலான தயார்நிலை தொடர்பில் அவதானம் செலுத்தி, அதுகுறித்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசுக்கு இதுவொரு நல்ல சந்தர்ப்பம்" என்றார்.
இதேவேளை, கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்ததாவது,
"புயல் மற்றும் வெள்ளம் வருமாயின் அது குறித்து முன்கூட்டியே முன்னெச்சரிக்கை விடுப்பது சிறந்தது. இதன்மூலம் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்ப முடியும். அதனையே செய்ய வேண்டும். பங்களாதேஷ், வானிலை உபகரணங்கள் மூலம் புயல் குறித்து முன்னரே அறிந்து மக்களை வெளியேற்றியதால், அவர்களில் பலரைக் காப்பற்ற முடிந்தது. அதுவே தேவையாகும்.
சரியான முன்னறிவிப்புக்களை வெளியிட, இன்று ஆச்சரியம் அளிக்கும் வகையில் முன்னேற்றம் அடைந்த நாடுகளில் உபகரண அமைப்புக்கள் உள்ளன. அவ்வாறான உபகரண கட்டமைப்பு இல்லாமல் முன் அறிவிப்புக்களை எமது வளிமண்டலவியல் திணைக்களத்தினரால் வெளியிட முடியாது.
அந்த உபகரணக் கட்டமைப்புக்களைக் கொள்வனவு செய்து கொடுக்க வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் வானிலை முன்னறிவிப்புகளை வெளியிடுவதற்கான வசதிகள் இருக்க வேண்டும். மக்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக, காலதாமதம் இன்றி இடர்கள் தொடர்பில் அறிவிப்புக்களை வெளியிடுவதற்கு வளிமண்டலவியல் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் " என்றார். (ஐ-10)



# பாதுகாப்பு உறவு குறித்து இலங்கை - சீனா பேச்சு

கொழும்பு, ஜூன் 3
சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்துவது குறித்து, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருடன் சீனாவின் உயர்மட்டக் கடற்படை அதிகாரிகள் பேச்சு நடத்தியுள்ளனர்.
பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இந்தப் பேச்சு இடம் பெற்றது.
சீனக் கடற்படையின் கிழக்குப் பிராந்திய கட்டளைப் பீடத்தின், பிரதி கட்டளைத் தளபதியான றியர் அட்மிரல் சென் ஹாவோ தலைமையிலான சீன அதிகாரிகளே இந்தப் பேச்சில் பங்கேற்றனர்.
இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புறவின் வெற்றியே பன்னாடுகளின் உதவிகள்

## அரச தலைவர் மைத்திரி பெருமிதம்

கொழும்பு, ஜூன் 3

இடருக்குள்ளான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பன்னாட்டுச் சமூகம் அர்ப்பணிப்புடன் முன்வந்தமை, தற்போதைய அரசின் நட்புறவான அயலுறவுக் கொள்கையின் வெற்றியை வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



மாலைதீவு அயலுறவுத் துறை அமைச்சர் கலாநிதி மொஹமட் அஸீம் நேற்று முற்பகல் அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன் போதே அரச தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காக மாலைதீவு அரசு வழங்கிய உதவிகளுக்காக மைத்திரிபால சிறிசேன மாலைதீவு அரசுக்கும், மாலைதீவு மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த மாலைதீவு அயலுறவுத் துறை அமைச்சர், "பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கக் கூடிய அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம். இடர்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு மாலைதீவு அரசினதும், மக்களினதும் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார்.

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவிவரும் உறவுகளை நினைவூட்டிய மைத்திரிபால, இரு நாடுகளுக்குமிடையில் நிலவும் அனைத்து உறவுகளையும் பலப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகத் தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் சுற்றுலா செல்லும் சிலர் குற்றம் மற்றும் கடத்தல்களில் ஈடுபடுவது தொடர்பாக ஆராய அரசு நடவடிக்கை எடுக்குமெனவும் குறிப்பிட்டார்.

அவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மாலைதீவு அயலுவுத் துறை அமைச்சரிடம் அரச தலைவர் கோரிக்கை விடுத்தார். (ஐ-4)

# இடரால் 25 ஆயிரம் மாணவர்கள் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 3

இயற்கை இடர்களால் சுமார் 25 ஆயிரம் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் பொருத்தமற்ற பாடசாலைக் கட்டடங்கள் அகற்றப்பட்டு புதிய கட்டடங்கள் அமைக்கப்படும். இது தொடர்பாக அமைச்சரவைக்கு ஆவணம் ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். பாதிப்புக்கு உள்ளான பாடசாலைக் கட்டடத்தின் நிலமையைப் பரிசோதனை செய்வதற்காக பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் அந்தந்தப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர். பாடசாலையின் நிலமைகள் பரிசோதிக்கப்படும் - என்றார். (ஐ)

# நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரியில் இனித் தமிழ்மொழிமூலப் பாடநெறிகள்

கொழும்பு, ஜூன் 3

நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரியில் தமிழ் மொழி மூலப் பாடநெறிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுவரெலியா மாவட்ட தமிழ் முற்போக்கு கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு தொழிநுட்பக் கல்லூரியில் போதுமான இட வசதிகள் இருந்தும், சுமார் 500 மாண வர்கள் பயிலும் கல்லூரியில் வெறும் 15 தமிழ் மொழிமூல மாணவர்களே ஒரு பாடநெறியில் கல்வி கற்கின்றனர். இன்று வேலையில்லாப் பிரச்சினை நாட்டில் பெருமளவில் காணப்படு கின்றது. அரசியல்வாதிகளான எம்மை நாடிவரும் இளைஞர்களில் அதிகமானோர் தொழில் வாய்ப்புகளையே கோருகின்றனர். ஆனால் அவர்களிடம் கல்விசார் தகைமைகள் இருக்கின்ற போதும் தொழில்சார் தகைமைகள் இருப்பதில்லை. தொழில் சந்தையில் தொழில்சார் பயிற்சிகளைப் பெற்றவர்களுக்கே கூடிய வாய்ப்புள்ளது. பாடசாலைக் கல்வியை முடிக்கும் மாணவர்கள் தொழில்சார் கற்கை நெறிகளை மேற்கொள்ள முன்வர வேண்டும். கூட்டு அரசு இந்த த் தொழில் சார் கல்வியையும் தற்போது இலவசக் கல்வியாகவே அறி முகப் படுத்தியுள்ளது. இது சிறந்த வாய்ப்பாகும் - என்றார். (ஐ-10)

# ஆசிரியர்களின் தாக்குதலுக்கு இலக்காகி மாணவர்கள் மூவர் மருத்துவனையில்

கொழும்பு, ஜூன் 3

ஆசிரியர்களின் தாக்குதல்களுக்கு இலக்காகி மூன்று மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு, நுவரெலியா மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களில் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கொழும்பில், பிரபல்யமான பாடசாலையொன்றில், சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியை ஒருவர், 5 ஆம் தரத்தில் பயிலும் மாணவனைத் தாக்கியமையால், அந்த மாணவன் காயமடைந்து மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், குறித்த ஆசிரியை, அந்த மாணவனை மேலைத்தேய வாத்தியக் கருவியின் தடியால் தாக்கினார்என விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது.

நுவரெலியாவில், கந்தப்பளைப் பகுதியில் உள்ள பாடசாலையொன்றின் ஆசிரியர், தரம் ஐந்தில் கல்வி கற்கும் மாணவர்களில் நால்வர் மீது தாக்குதல் நடத்தினார். அவர்களில் மாணவன் ஒருவர் பாதிப்படைந்தார். குறித்த மாணவன் மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவிருக்கும் மேற்படி நான்கு மாணவர்களும், சம்பவ தினம் மேலதிக வகுப்புக்காகப் பாடசாலையில் நின்றுகொண்டிருந்தனர்.

இந்த நிலையில் பாடசாலை முடிந்ததும், அந்த நான்கு மாணவர்களும் வெளியில் சென்று சாப்பிட்டுவிட்டு, பாடசாலைக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது, சிறிய வகுப்பில் கற்கும் மாணவியொருவர் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார்.

அந்த மாணவியின் மீது நால்வரும் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர் எனக் குறிப்பிட்ட ஆசிரியரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அதனையடுத்தே, அந்த ஆசிரியர் மேற்படி மாணவர்கள் நால்வரையும் அடித்துக் கண்டித்துள்ளார்.

அதிலொருவரை காலால் உதைத்தமையால், அந்த மாணவன் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக கந்தப்பளைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அநுராதபுரம், வன்னிபலுகொலவெவ பாடசாலையில் தரம் 7ஐச் சேர்ந்த மாணவரொருவர், ஆசிரியரின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்

குறித்த மாணவனை ஆசிரியர் தாக்கியதால், அந்த மாணவன் பாடசாலை முடிந்து வீட்டுக்குச் செல்லும் வழியில் பலமுறை தலைசுற்றி மயங்கி விழுந்தார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. பலுகொலவெவ நீர்தாங்கிக்கு முன்பாகவுள்ள மைதானத்தில் விழுந்து கிடந்த மாணவனை, அந்த வழியாகச் சென்ற அதே பாடசாலையில் கல்வி கற்றுவரும் மாணவர்கள் இருவர் மீட்டு, அவனது வீட்டில் சேர்த்தனர்.

மாணவன் உடல்நல பாதிப்புக்குள்ளாகி இருந்ததால், உடனடியாக அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்த விடயம் தொடர்பில், மாணவனின் தந்தை அநுராதபுரம் பொலிஸின் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## மரண அறிவித்தல்



### திருமதி எலிசபேத் செபஸ்ரியாம்பிள்ளை (பொந்தா)

யாழ்ப்பாணம், கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எலிசபேத் செபஸ்ரியாம்பிள்ளை 01.06.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமு - ரோசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - மேரிபிள்ளை தம்பதிகளின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துறைசிங்கம், கனகமணி, ராசமணி, ஐயாத்துரை, துறைரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், றஜனி, றஞ்சன் (பிரான்ஸ்), ரவி(கனடா), றமணி, றாஜன், றஞ்சி (சுவிஸ்), றதி (இத்தாலி), ரூபன் (பிரான்ஸ்), பேசி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமல், கஜிதா, செல்வி, ராஜ்குமார், ராஜி, விஜயன், ஜெயக்குமார், றஞ்சினி, ஞானேஸ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ரெஜி, வேணி, றேணுகா, டில்ஷி, டனியலா, கெவின், அபிராமி, வைஷாலி, சிபி, துஸ்யந்தன், கீர்த்திகா, தர்சிகா, தரூபன், மிதுசன், நிக்சன், றொசான், றொமிலன், றொகான், டிலான், ஷெரிக்கா, நிதர்சன், நிரோசன், தினுஷா, டக்சனா, அக்சரன், பர்வின், றெமிலன், சைலி, சஞ்சுதன், டினா, டிலக்சி ஆகியோரின் நேசமிகு பேர்த்தியும், கல்வின், அக் ஷறா, ரிசிக்கா, லோறா, லூக்கா, தோமா, நொலான், அனஜா, நிவேஜா, ரைடன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 05.06.2017 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்.

0094215613018, 0094212227847

## மரண அறிவித்தல்

### சதாசிவம் நவரத்தினசாமி

(ஓய்வு நிலை நில அளவை உத்தியோகத்தர்)



நவனம் தோட்டம் அல்வாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ச. நவரத்தினசாமி 2017.06.02 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கந்தவனம் - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் விஜிதா(கனடா), ரூபன் (கனடா), சோபனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மநாதன் (ஆனந்தம் - கனடா), கிருஷ்ணசாமி (புவி - கனடா), சுசீலாதேவி (கனடா), சிவதேவன் (ஜேர்மனி), ரவீந்திரதேவன் (ஜேர்மனி), உதேனி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நா.சந்திரசேகரனின் (ஓய்வுநிலை அதிபர்) பெறாமகனும் காலஞ்சென்ற கதிர்காமதம்பி, கிருஷ்ணபிள்ளை (ஓய்வு நிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மருமகனும் அகிலாபத்மநாதன்(கனடா), இராசேந்திரம் (கனடா), பவானி (ஜேர்மனி), புரந்தரி(ஜேர்மனி), தேவராசா (அதிபர் - யா/நெல்லியடி மெ.மி. த.க பாடசாலை), திருவருட்சோதி(கனடா), சுசீலாதேவி (கனடா), சகுந்தலாதேவி, தவமணிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற பொன்னம்மா, தங்கம்மா (ஓய்வு நிலை ஆசிரியை - கனடா), காலஞ்சென்ற மீனாட்சியம்மா(ஓய்வு நிலை ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் பகீரதன்(பாபு - கனடா), காயத்திரி(கனடா), சுபாஸ்(ஆசிரியர் - யா/வதிரி திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனும் பிரியானா, டிசான், வாசினி, வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2017) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 10மணியளவில் சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவனம்தோட்டம்,
அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 120 பெண்களுக்கு நாடாளுமன்றில் வாய்ப்பு

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 3
இலங்கையின் மொத்தச் சனத் தொகையில் 52 வீதமானோர் பெண்கள். இந்தக் கணக்கின்படி பார்த்தால் நாடாளுமன்றத்தில் 120 பெண்கள் நாடளுமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும். ஆனால் பெண்களின் பங்குபற்றுதல் மிகக் குறைவாகவே உள்ளது.

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு நீர்கொழும்பு நகர மண்டபத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மக்களால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளே சட்டத்தை ஆக்குகின்றனர்.

இருப்பினும் பெண்களின் அரசியல் பங்குபற்றுதல் அதிகரிக்கப் பட வேண்டும். பெண்கள், மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விதமாகச் செயற்பட்டுக் காட்ட வேண்டும். எமது கருத்துக்கள் குறித்த செய்திகள் ஊடகங்களில் சிலது ஒரு சிலவே வெளி வருகின்றன. சரியான செய்தி மக்களுக்குப் போய்ச் சேர்வது குறைவு எனவும் மகிந்த தேசப்பிரிய மேலும் குறிப்பிட்டார். (ஐ-4)

# கோத்தா விரைவில் கைதாவார்?

## கொழும்பு ஊடகம் தகவல்



கொழும்பு, ஜூன் 3
வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படவுள்ளார் என்று ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற கொலை மற்றும் 2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற ரத்துபஸ்வெல கொலைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படவுள்ளார்.

ரத்துபஸ்வெல கொலைச் சம்பவம் தொடர்பில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்தனவிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைவாக இலங்கை இராணுவத்தின் பிரிகேடியர் ஷாந்த திஸாநாயக்கவைக் கடந்த 29ஆம் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலின் அடிப்படையில் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்தனவின் உடனடிப் பிரதானியாக பிரிகேடியர் ஷாந்த திஸாநாயக்க செயற்பட்டுள்ள நிலையில், அவருக்கு இன்னொரு முக்கியஸ்தரிடமிருந்து உத்தரவு கிடைத்துள்ளதெனத் தெரியவந்துள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலைக் கொலை தொடர்பில் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்க, ஊடாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நியோமால் ரங்கஜீவ வழங்கிய "துண்டு" ஒன்று கிடைத்துள்ளதாக குற்ற விசாரணைத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

> “ வெலிக்கடைக் கொலைச் சம்பவத்துடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச நேரடியாகத் தொடர்புபட்டுள்ளார். அது தொடர்பான உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன

இதற்கான நேரடியாக ஆலோசனை வழங்கியது யார் என்பது தொடர்பில் சாட்சியம் கிடைத்துள்ளதாகக் குற்ற விசாரணைத் திணைக்களம் கண்டுபிடித்துள்ளது.

எப்படியிருப்பினும் எதிர்வரும் நாள்களில் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படுவாராயின், கொழும்பு அரசியல் மட்டத்தில் பல சர்ச்சைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம் " என்று குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வெலிக்கடைக் கொலைச் சம்பவத்துடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச நேரடியாகத் தொடர்புபட்டுள்ளார். அது தொடர்பான உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன, என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# இடர்களால் 7,600 கர்ப்பிணிகள் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 3
வெள்ளம் மற்றும் மண்சரிவால் 7 ஆயிரத்து 600 கர்ப்பிணிகளும், ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களும், ஒரு இலட்சத்து 89 ஆயிரம் சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக, ஐக்கிய நாடுகளின் குடும்பக் கட்டுப்பாட்டு அமைப்பினால் சிறுவர்களுக்கான 10 ஆயிரம் உள்ளாடைகள் அடங்கிய பொதியும், கர்ப்பிணிகளுக்கான 2 ஆயிரம் உள்ளாடைகள் அடங்கிய அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன என்ற ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ-4)

# கொழும்பு துறைமுக நகரத்தின் 40 வீத நிர்மாணப் பணிகள் பூர்த்தி

கொழும்பு, ஜூன் 3
சீனாவால் முன்மொழியப்பட்ட பட்டுப் பாதைத் திட்டத்தின் முக்கிய மார்க்கமாக கொழும்பு துறைமுக நகரம் இருக்கும். இதன் நிர்மாணப் பணிகள் 40 வீதம் நிறைவுபெற்றுள்ளது என்று அந்தத் திட்டத்துக்கான தலைமை விற்பனை அதிகாரி லியாங் தோ தெரிவித்தார்.

இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த வர்த்தக கூட்டமைப்பு 2017 என்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“ உலகளாவிய ரீதியில் பல முதலீட்டாளர்களைக் கொழும்புத் துறைமுக நகரம் ஏற்கனவே ஈர்த்துள்ளது. திட்டம் முற்றுப்பெற்ற பின்னர் 15 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டை எதிர்பார்க்க முடியும்.

கடல்சார் பல்கலைக்கழகம், பொழுது போக்கு மையம், வதிவிட பகுதி, மற்றும் நிதி மாவட்டம் உள்ளிட்ட சிறப்பு பகுதிகள் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டுள்ளது. லண்டனிலுள்ள கனேரி வேர்ப் என்ற வர்த்தக நகரைப் போன்று கொழும்பு துறைமுக நகரம் இருக்கும்” என்றார்.

2016ஆம் ஆண்டு துறைமுக நகரத் திட்டத்தில் மேலதிக மாநகர திட்டமொன்று உள்ளடக்கப்பட்டதுடன், பன்னாட்டு நிதி மைய நிலையமாக மாற்றுவதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டம் தொடர்பான புதிய உடன்படிக்கையில் மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுடன் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சீன துறைமுக பொறியியல் நிறுவனம் ஆகியன 2016ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி கைச்சாத்திட்டிருந்தன. (ஐ-10)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**மதியாபரணம் மதிவதனன்**
(முன்னாள் சாரதி - கரைத்துறைப் பற்று பிரதேசசபை)
திதி : தசமி 03.06.2017

மண்ணில்
1974.07.31
விண்ணில்
2013.05.20

நந்தவனத்தை விட்டுச் சென்று ஆண்டுகள் நான்கு ஆனதப்பா
அன்பின் பொக்கிஷமாய் பாசத்தின் சொரூபமாய்
இல்லறத்தை நல்லறமாக நடத்தி
எம்மை சீரும் சிறப்புமாய் வாழவைத்தாய்
உங்களை நாங்கள் இழந்த துயரை
இன்றுவரை ஈடுசெய்ய முடியாமல் தவிக்கின்றோம்
உம்மைப் போல பாசம் காட்ட இனி
யாருமில்லை எம் வாழ்வில் எமையெல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டு
தனிமையில் சென்றது தான் ஏனோ
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(AJA/Cs/ 4548) (14)

37/37, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகள், அக்கா,
அத்தான், மருமக்கள்மார்.

## 33 ஆம் நாள் நினைவஞ்சலியும் பிறந்ததினமும் நன்றி நவிலலும்



பிறப்பு
03.06.1976

இறப்பு
02.05.2017

கடந்த 02.05.2017 அன்று காலமான எமது குடும்பத்தலைவி
**அருள்வதனன் டொறின்மேரி**
அவர்களின் 33 ஆம் நாள் நிகழ்வு இன்று (03.06.2017) சனிக்கிழமை காலை 7மணியளவில் மாகியம்பதி புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனை வரையும் அன்புடன் அழைப்பதுடன் அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வழங்கியவர்களுக்கும் பலவழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(AJA CS 4629) (14)

அருள்வதனன்
பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 04.05.2017 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்
**பொன்னையா வத்துமலை**
தோற்றம் 19.01.1946
மறைவு 04.05.2017
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள்
இன்று (03.06.2017) சனிக்கிழமை காலை 5.00 மணி
தொடக்கம் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்களும் கலந்து அன்னாரின் ஆத்ம
சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
**இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

"அன்னை இல்லம்"
சமரபாகு

குடும்பத்தினர்
076 802 5256


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவரம் கோத்தபாயவுக்கு மட்டுமே தெரியும்

## முன்னாள் அரச தலைவர் சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3
காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான உண்மை விவரங்களைப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவால் மட்டுமே கூற முடியும். அவருக்கு மட்டுமே உண்மை விவரம் தெரியும். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில், பன்னாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,
காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விவரங்களை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார். அவரிடம் உண்மையான விவரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் ஒன்றை அமைத்து, அவரிடம் விசாரணை செய்ய வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விவரங்களைத் தற்போதைய கூட்டு அரசால் வழங்க முடியாது. முன்னாள் பாதுகாப்புச் செயலாளரால் மட்டுமே அந்த விவரங்களை வழங்க முடியும். தமிழர் தாயகப் பகுதியில், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள், இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டுகின்ற பெற்றோர், அந்த இரகசிய இடம் தொடர்பிலான தகவலை அரச தலைவருக்கு வழங்கினால், அந்த இடத்துக்கு அவர்களைஅழைத்துச்செல்ல அரசு நடவடிக்கை எடுக்கும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள், உண்மையிலேயே உயிருடன் இருக்கின்றார்களா அல்லது உயிரிழந்து விட்டார்களா என்பது தொடர்பில், தேடிப்பார்க்க வேண்டும். எனக்குத் தெரிந்த மட்டில், அவ்வாறானவர்கள் எவரும், முகாம்களில் மறைத்து வைக்கப்பட்டிருக்கவில்லை. ராஜபக்ச ஆட்சிக்காலத்தின்போது, அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம். அதுபற்றி, எனக்குத் தெரியாது. ஆனால், அப்போது அவர்களைப் பொறுப்பேற்றிருந்தால், அப்போதே அவர்களைக் கொன்றிருப்பார்களே தவிர, இவ்வளவு வருடங்களாகத் தடுத்து வைத்திருக்க மாட்டார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளனர் என்று, பட்டியலிட்டுக் கூறுவதற்கு, இந்த அரசால் முடியாது. இராணுவமே இந்த விவரங்களை அறிவிக்க வேண்டும். அவர்களே இல்லை என்று கூறும் நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில், அரசு எங்கு போய் தேடியறிவது. ஆனால், கோத்தபாயவால் இது குறித்து உண்மைகளைத் தெரிவிக்க முடியும்" - என்றார்.

(ஐ - 10)



## இடர்கள் குறித்து 20 வருடங்களாக அரசு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 3
இயற்கை இடர்கள் ஏற்படும் என அரசு, கடந்த 20 வருடங்களாக, குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு எச்சரிக்கை விடுத்து வந்தது என்று கல்விஅமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கூட்டு அரசு ஆட்சியைக் கைப்பற்றிய காலத்திலிருந்தே பல்வேறு இடர்களுக்குநாடுமுகம்கொடுத்து வருகின்றது. மாவனெல்ல, அரநாயக்க மண்சரிவு, கொலன்னாவை மீதொட்டமுல்லகுப்பைமலைசரிவு உள்ளிட்ட இடர்கள்மற்றும் தற்போது இடம்பெற்றுள்ள இயற்கை இடர் என அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து, நாடு இப்படியான அவலங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றது.

இவ்வாறு பாதிப்புகள் இடம்பெற இருக்கும் பகுதிகளை அடையாளப்படுத்தி, மக்களை இடம்பெயர்ந்து செல்லுமாறு 10, 20 வருடங்களாக அரசுகள் எச்சரிக்கை விடுத்துக்கொண்டு தான்உள்ளன. இருப்பினும் அந்த இடங்களிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து செல்லாமல் இருக்கின்றனர். அதனால்தான் அதிகளவானோர் உயிர் இழக்கின்றனர்" -என்றார். (ஐ-10)

பிலியந்தலைத் துப்பாக்கிச்சூடு

## சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டனர்



கொழும்பு, ஜூன் 3
பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மீது, பிலியந்தலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடையவர்கள் பற்றிய முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

"பொரலஸ்கமுவ நகரத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமரா பதிவுகளில் இருந்து இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பயன்படுத்தப்பட்ட புத்தம் புது மோட்டார் சைக்கிளை வாங்கியவரும், அவருடன் பயணித்த மற்றொருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட முன்னாள் இராணுவச் சிப்பாயும், மற்றொருவரும் இந்தியாவுக்கு கடல் மார்க்கமாகத் தப்பிச் சென்றுள்ளனர். அவர்களைக் கைது செய்ய இந்தியப் பொலிஸாரின் உதவி கோரப்பட்டுள்ளது" என்று பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்ததுடன், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் படுகாயங்களுக்குள்ளானார். அத்துடன், சிறுவர்கள் காயமடைந்ததுடன் அவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

(ஐ - 4)

## இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சகல மருந்துகளும் கையிருப்பில்

சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 3
இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான சகல மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் கொழும்பிலும், பிரதேச களஞ்சியசாலைகளிலும் போதியளவு கையிருப்பில் உள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

"இடர்களால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தொற்றுநோய்கள் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகளை, அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான ஆராய்ச்சிப் பிரிவு முன்னெடுத்து வருகிறது. இதன் ஓர் அங்கமாகப் பாதிக்கப்பட்டுள்ள கிணறுகளைச் சுத்திகரிப்பதற்காக ஐந்து லட்சம் குளோரின் வில்லைகளை யுனிசெவ் நிறுவனம் வழங்கியுள்ளது. அவை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 50 ஆயிரம் வீதம் விநியோகிக்கப்படும். எலிக்காய்ச்சலுக்கான மருந்து பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் 10 ஆயிரம் வில்லைகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. இடர் நிவாரணத்துக்காக சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன நியமித்த குழு, முழு வீச்சில் இயங்கிவருகிறது." என்று சுகாதார அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (ஐ - 10)

## அமைச்சின் அலுவலகப் பகிர்வில் அமைச்சர்களிடையே முரண்பாடு





கொழும்பு,ஜூன் 3
அமைச்சு அலுவலகத்தைப் பகிர்ந்து கொள்வதில் அமைச்சர்களான கபீர் ஹாசீம், லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோருக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
அரச முயற்சியாண்மை அமைச்சர் கபீர் ஹாசீம்தனதுஅமைச்சின்திட்டமொன்றுக்காக, ராஜாங்க அமைச்சின் அலுவலக அறைகளை ஒதுக்கீடு செய்தார். அதனால் அந்தஅமைச்சுக்குராஜாங்கஅமைச்சராக நியமிக்கப்பட்ட லக்ஸ்மன் யாப்பா அபேவர்தனவுக்கு அலுவலக வசதிகள் மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் அரச தலைவரால் அரச முயற்சியாண்மை ராஜாங்க அமைச்சராக லக்ஸ்மன் யாப்பா நியமிக்கப்பட்டிருந்தார். அவர் அமைச்சின் பொறுப்புக்களை நேற்று ஏற்றுக்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். எனினும் அலுவலகம் தொடர்பில் எழுந்த சர்ச்சையை அடுத்து, ராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொள்ளும் நிகழ்வுகளை ஒத்திவைத்தார். அமைச்சர் தனது ஆவணங்களைப் புதிய அலுவலகத்துக்கு எடுத்துச் சென்ற போதிலும், அவற்றை வைப்பதற்குப் போதியளவு இடவசதி கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. அதற்கு முன்னதாக இந்த அமைச்சின் ராஜாங்க அமைச்சர் பொறுப்புக்களை எரான் விக்ரமரண வகித்து வந்தார். அதன் போது 9 அறைகள் ராஜாங்க அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன.

தற்போது அதில் ஆறு அறைகளை அமைச்சரவை அமைச்சர் காபீர் ஹாசீம் மீளப் பெற்றுக் கொண்டுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த விடயம் பெரிய பிரச்சினை அல்ல. எதிர்வரும் திங்கட்கிழமை அளவில் இப்பிரச்சினை தொடர்பில் தீர்வு வழங்கப்படும் என்று அரச முயற்சியாண்மை அமைச்சின் செயலாளர் ரவீந்திர ஹேவா விதாரன அறிவித்துள்ளார். (ஐ)

## இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகள் அதிகரிப்பு

முஸ்லிம் பிரதிநிதிகள் அரச தலைவருடன் அவசர சந்திப்பு

கொழும்பு, ஜூன் 3
நாட்டில் இனங்கள் மற்றும் மதங்களிடையேமுரண்பாடுகளைத்தோற்றுவிக்கும் வகையிலான் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இது குறித்து அரச தலைவர் செயலகத்தில் அவசர கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அரச தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், முஸ்லிம் அமைச்சர்களும், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாசபைப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். நாட்டில் சமகாலத்தில் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை விளக்கி, அவற்றுக்கு உடன் நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர்கள் அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்தனர்.

"முஸ்லிம்களுக்கு எதிராக ஞானசார தேரரே மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறார். அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அரசு மௌனம் காக்கிறது. கடந்தகாலஅரசில்உலமா சபை ஞானசார தேரருடன் பேச்சு நடத்தியது பலன் ஏற்படவில்லை. அவர் வீதியில் இறங்கி முஸ்லிமகளுக்கு எதிராகவும், இஸ்லாத்துக்கு எதிராகவும் விமர்சனங்களை வெளியிடுவதற்குஒருமுற்றுப்புள்ளி வையுங்கள். நாம் இவ்விடத்துக்கு தீர்வொன்றை நாடியே வந்துள்ளோம். தீர்வே எமக்கு முக்கியம். பேச்சுக்கள் நடத்திக் கொண்டிருப்பதில்பயனில்லை. முஸ்லிம்களாகிய நாம் பிக்குமார்களை கண்ணியப் படுத்துகிறோம். அவர்கள் நம்பகத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். ஞானசார தேரர் ஏன் முஸ்லிம்களுக்கு எதிராக இவ்வாறு செயற்படுகிறார். அவரை அழைத்து அவரிடம் இது பற்றிக் கேளுங்கள். முஸ்லிம்களின் பிரச்சினைக்குத் தீர்வொன்றைப் பெற்றுத்தாருங்கள்" என்று அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் அரச தலைவரிடம் கேட்டுக் கொண்டார். (ஐ - 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிலிப்பைன்ஸில் தாக்குதல் 34 பேர் பரிதாப உயிரிழப்பு

மணிலா, ஜூன் 3
பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள விடுதி ஒன்றில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரி நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 34 பேர் உயிரிழந்தனர்.
பிலிப்பைன்ஸ் பொலிஸாரின் தகவலின்படி விடுதிக்குள் நுழைந்த ஆயுததாரி மக்களை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினார். 34 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். தாக்குதல் நடத்திய ஆயுததாரி தன்னைத் தானே சுட்டுத் தற்கொலையும் செய்துகொண்டார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.
தலைநகர் மணிலாவில் இருந்து 800 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மாராவி தீவில் ஐ.எஸ். ஐ.எஸ். ஆதரவு ஆயுததாரிகள் ஊடுருவியுள்ளனர். தீவை மீட்கும் போரில் பிலிப்பைன்ஸ் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில் மாராவித் தாக்குதலை மந்த கதிக்குத் தள்ளவே இந்தத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதுஎன்றும் கருதப்படுகிறது. (ம)

# 'கவிக்கோ' அப்துல் ரகுமான்

சென்னை, ஜுன் 3
கவிஞரும், தமிழ்ப்பேராசிரியருமான அப்துல் ரகுமான், தனது 70ஆவது வயதில் உடல்நலக்குறைவால் சென்னையில் நேற்று அதிகாலை காலமானார்.
கவிக்கோ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் அப்துல் ரகுமான் சென்னை பனையூரில் உள்ள அவரது வீட்டில் நேற்று அதிகாலை மூச்சுத்திணறலால் உயிரிழந்தார்.
1937ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி மதுரை மாவட்டத்தில் பிறந்த அப்துல் ரகுமான் தனது தொடக்கக் கல்வியையும் மது உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் மதுரையில் உள்ள பள்ளிகளில் பயின்றார்.
பின்னர் மதுரை தியாகராஜர் கல்லூரியில் சேர்ந்து இடைநிலை வகுப்பில் தேறினார். தொடர்ந்து அந்தக் கல்லூரியிலேயே பயின்று இளங்கலை, முதுகலை பட்டங்களைப் பெற்றார்.
சென்னை தரமணியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில்





# கிழக்கில் ஜாம்பவான் நாங்களே வடகொரியா மீண்டும் இறுமாப்பு


பியாங்யாங், ஜூன் 3
கிழக்குப் பகுதியில் ஏவுகணைச் சோதனையில் நாங்களே ஜாம்பவான்கள் எங்களது அணுஆயுதசோதனைகளை எவராலும்தடுக்க முடியாது என்று வடகொரிய அரசின் ஊடகமொன்று செய்தி வெளியிட்டது.
தொடர் அணுஆயுத ஏவுகணைச் சோதனைகளை நடத்தும் வடகொரியாவுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து, எதிரிகளின் ஏவுகணைகளை இடைமறித்து தாக்கி அழிக்கும் அதிநவீன ஏவுகணை சோதனையை அமெரிக்கா கடந்த செவ்வாய்க் கிழமை வெற்றிகரமாகச் சோதித்தது.
இந்த நிலையில் அமெரிக்காவின் ஏவுகணைச் சோதனை குறித்து வடகொரியாவின் ரோடங் சின்மன் செய்தித்தாளில் வந்துள்ள கட்டுரையில், "கிழக்கு பகுதியில் ஏவுகணைச் சோதனைகளில் நாங்களே ஜாம்பவான்கள். எங்களது அணு ஆயுதச் சோதனைகளை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையை நடத்த வடகொரியா தயாராக இருக்கிறது. அதிபர் கிம் ஜோங் உன்னின் ஒப்புதலுக்காகவே காத்திருக்கிறோம். அமெரிக்காவைத் தாக்கும் பலம் படைத்தது வடகொரியாஎன்று அந்நாடு உணர வேண்டும்" என்று பதிவிடப்பட்டுள்ளது. (ம)






வொஷிங்டன், ஜூன் 3
உலக வெப்பநிலையை 2 செல்சியஸ் குறைவடையச் செய்தல், ஆயுத மற்றும் அணுவாயுத பயன்பாடுகளைத் தவிர்த்தல், தேவையற்ற போர்ப் பயிற்சிகளைக் குறைத்தல், அமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் எடுக்கப்பட்ட பரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறியது.
உலகின் வெப்பநிலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. புவி உருண்டையின் வெப்பநிலை வருடாவருடம் 0.75 வீதம் அதிகரிக்கிறது. குறிப்பாக 2015 ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரலாற்றில் என் இல்லாத அளவுக்குப் புவி வெப்பமடைந்தது கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கத்தில் எச்சரித்தது உலக வானிலை மையம். உலகெங்கும் உள்ள 6 ஆயிரத்து மையங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்க பொதுமைப்படுத்தியே இந்த அறிவிப்பு அக் தில் விடுக்கப்பட்டது.
புவி வெப்பமடைந்தால் துருவப்பகுதிகள் உ துருவப்பகுதிகள் உருகினால் கடல்மட்டம் ரிக்கும். கடல்மட்டம் அதிகரித்தால் கடலோ களின் நீர்மட்டம் உயர்ந்து அவை தண்

# 4ஆம் ஆண்டு நினைவுநாள்



தோற்றம் 23 . 08 . 1944

மறைவு 03 . 06 . 2013

## அமரர் அகஸ்ரின் வேதானந்தம் (A.V.ஆனந்தன்)

(ஈழத்தின் புகழ்பூத்த சிற்பக்கலைஞரும், பிரபல தொழிலதிபரும், தெல்லிப்பழை ஆனந்தி & கோ நிறுவனத்தின் உரிமையாளரும், தெல்லிப்பழை சிற்பாலயத்தின் நிறுவுநரும், யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் மூத்த உறுப்பினரும், மல்லாகம்/தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும்,சமூக சேவகரும்]

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டுகள் நான்கு மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

" சிற்பாலயம்"
துர்க்காபுரம்
தெல்லிப்பழை. (சி.எஸ்.4812) (13)

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


# ஆப்கான் குற்றச்சாட்டை

காபூல், ஜூன் 3
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் 90 பேர் உயிரிழந்தனர். இதற்குப் பாகிஸ்தானே காரணம் என்று ஆப்கானிஸ்தான் குற்றம் சாட்டியிருந்த நிலையில் இந்தக் குற்றச்சாட்டை பாகிஸ்தான் மறுத்தது.
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் வெளிநாட்டுத் தூதரகங்கள் உள்ள கட்டடத்துக்கு அருகே நடத்தப்பட்ட இந்தத் தற்கொலைத் தாக்குதல் உலகெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. ஹக்கானி ஆயுதக் குழு பாகிஸ்தானைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படுவதால் இந்த விடயத்தில் பாகிஸ்தான் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு [illegible] என்று ஆப்கானிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது. இதற்குப் பாகிஸ்தான் எந்தத்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ன் நேற்று அதிகாலை மறைந்தார்




அதன் இயக்குநராகப் பணியாற்றிய ச.வே.சுப்பிரமணியத்தை வழிகாட்டியாகக் கொண்டு புதுக்கவிதையில் 'குறியீடு' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். 20 ஆண்டுகள் தமிழ்த்துறையின் தலைவராகப் பணியாற்றினார்.

பால்வீதி, நேயர் விருப்பம் உள்ளிட்ட கவிதைகளையும், அக்கடமி விருது, தமிழன்னை விருது, பாரதிதாசன் விருது, கலைமாமணி விருது உள்ளிட்ட 14 விருதுகளை பல்வேறு அமைப்புகளால் வென்றிருக்கிறார்.

மறைந்த ரகுமானின் உடலுக்கு தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் தமது அஞ்சலிகளை நேற்றுச் செலுத்தினர். 'கவிக்கோவின் தமிழ் என்றென்றும் நிலைக்கும்' என்று ஸ்டாரின் தெரிவித்தார். (ம)

# ஒப்பந்தத்தில் இருந்து
# யேறியது அமெரிக்கா

## டும் அதிர்ச்சியில் ஐ.நா. சபை
## லகத் தலைவர்கள் அதிருப்தி



போர்ப் பயிற்சிகளைக் குறைத்தல், அமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற வரலாற்று முக்கியத்துவம் மிகுந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த ஒப்பந்தம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த வேளையில் அதிலிருந்து வெளியேறியது அமெரிக்கா.

அமெரிக்க அதிபர் தேர்தல் பரப்புரையில் பரிஸ் ஒப்பந்தத்தைக் கடுமையாக விமர்சித்தார் ட்ரம்ப். "இதனால் கிடைக்கும் நன்மைக்கு அமெரிக்கா அதிக அளவில் விலை கொடுக்கிறது. இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகள் ஒருதலைப் பட்சமாக இதை அனுபவிக்கின்றன" என்றும் அவர் சாடியிருந்தார். இந்த நிலையில் அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர் எடுத்த அதிரடி நகர்வுகளில் ஓர் கட்டமாக பரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியுள்ளது.

அமெரிக்காவின் இந்த முடிவால் ஐக்கிய நாடுகள் சபை கடும் அதிர்ச்சியடைந்துள்ளது. ஒப்பந்தத்துடன் தொடர்புடைய ஏனைய தலைவர்கள் அமெரிக்காவின் முடிவைக் கடுமையாக விமர்சித்துள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

ாக 2015 ஆம்
றில் என்றுமே
டந்தது என்று
மாதம் தொடக்
ிலை ஆய்வு
ஆயிரத்து 300
தகவல்களைப்
ிப்பு அக்காலத்

ிகள் உருகும்.
மட்டம் அதிக
கடலோர நாடு
தண்ணீருக்

குள் செல்லும். எனவே உலக வெப்பநிலை அதிகரிப்பு என்பது மனித குலத்தின் பொது எதிரியென்று அக்காலத்தில் எச்சரிக்கப்பட்டது.

உலக வெப்பமயமாதலுக்கான பரப்புரையை பெரும் எடுப்பில் ஆரம்பித்தது பிரான்ஸ். அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ஒபாமாவும் கடும் முனைப்புடன் செயற்பட்டார். இதன்விளைவாக ஐக்கிய நாடுகள் சபையின் ஒழுங்கமைப்பில் உலகத் தலைவர்களை ஒன்றிணைத்து பிரான்ஸின் தலைநகர் பரிஸில் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி பெரும்கூட்டம் நடத்தப்பட்டது. உலக வெப்பநிலையை 2 செல்சியஸ் குறைவடையச் செய்தல், ஆயுத மற்றும் அணுவாயுத பயன்பாடுகளைத் தவிர்த்தல், தேவையற்ற



# இந்தியா - ஸ்பெய்ன் இடையே ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

மட்ரிட், ஜூன் 3

இந்தியா - ஸ்பெய்ன் இடையே 7 முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன.ய

இந்தியத் தலைமை அமைச்சர் மோடி ஜேர்மனி, ஸ்பெய்ன், ரஷ்யா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்கு தற்போது சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அவர் ஸ்பெய்னுக்குச் சென்றார். அங்கு மோடி ஸ்பெய்ன் அதிபர் மரியானோ முன்னிலையில் 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின.

சைபர் பாதுகாப்பு, உள்நாட்டு விமான போக்குவரத்து, மருத்துவம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளி 7 முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்த கின.

இந்த ஒப்பந்தத்தை அடுத்து நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில், "இந்தியாவில் ஸ்பெய்ன் நிறுவனங்கள் முதலீடு செய்வதற்குச் சிறந்த நேரம் இதுவே" என்று மோடி தெரிவித்தார்.

மோடி தற்பொழுது ரஷ்யா சென்றுள்ளார். அங்கும் அவருக்கு சிறந்த வரவேற்பு வழங்கப்பட்டது. ரஷ்யாவுடனும் முக்கிய துறைகளில் சில ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 05 . 10 . 1940 |  | 30 . 05 . 2017 |

### திருமதி தங்கரத்தினம் தியாகராஜா (மணி)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் தற்போது கந்தர்மடத்தினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் தியாகராஜா (மணி) கடந்த (30.05.2017) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் துரைச்சாமி தியாகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - கண்ணம்மா தம்பதியரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்ற துரைச்சாமி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஸ்ரீதரன்(சுவிஸ்), புவிதரன்(சுவிஸ்), கிரிதரன்(சுவிஸ்), சசிதரன்(லண்டன்), ஸ்ரீநந்தினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மனூறி (சுவிஸ்), மொனிக்கா (சுவிஸ்), ஜெனிற்றா (சுவிஸ்), சுசியந்தினி(லண்டன்), இராகுலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுனந்தா, கிசோர், அப்சரா, சயந், அபர்ணா, தமன்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், அழகம்மா, புனிதவதி மற்றும் திரவியம், தவமணி, செல்வரத்தினம், பூபதி, அனுசியாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகம்மா, சின்னப்பிள்ளை, பஞ்சாட்சரம், சரஸ்வதி, சிவமணி, மயில்வாகனம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (இல.18, கந்தபுராணவீதி, கந்தர்மடம்) நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.18, கந்தபுராணவீதி,
கந்தர்மடம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# ட மறுக்கிறது பாகிஸ்தான்



துலங்கல்களையும் நேற்றுமுன்தினம் மதியம் வரை வெளிப்படுத்தவில்லை. எனினும் நேற்றுமுன்தினம் இரவு குற்றச்சாட்டை மறுத்தது பாகிஸ்தான்.

இது தொடர்பில் பாகிஸ்தான் அயலுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் நபீஸ் ஜகாரியா, "ஆப்கானிஸ்தானின் இத்தகைய குற்றச்சாட்டு அணுகுமுறையானது, ஆதாரமற்றது. இது அமைதி முயற்சிக்கு உதவாது. தீவிரவாதத்தால் பாகிஸ்தான் பாதிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் அமைதி மற்றும் நிலைத்தன்மை ஏற்படுவதற்கு மற்ற நாடுகளை விட பாகிஸ்தான் அதிக அளவிலான பங்களிப்பைச் செய்துள்ளது. ஆப்கானிஸ்தானில் உள்ள சில குறிப்பி[illegible] களை சீர்குலைத்து [illegible] மிகவும் வருத்தம் அளிக்கிறது" என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# காலநிலை மாற்றத்துடன் விளையாடும் ட்ரம்ப்

காலநிலைமாற்றம்குறித்தபரிஸ்உடன்பாட்டிலிருந்து அமெரிக்கா விலகிக்கொள்கின்றது என்ற அந்த நாட்டுஅதிபர்டிரம்பின்அறிவிப்பு மனிதகுலத்தின் எதிர்காலம் குறித்த அக்கறையுள்ள அனைவருக்கும் அதிர்ச்சியளித்துள்ளது.

டிரம்பின் சிந்தனை குறுகிய வரையறைக்குள்ளேயே சுழல்வதால் அவர் உலகின் தலைமை நாடாக விளங்குவதற்கான ஆசையை என்றென்றும் கொண்டிருக்கும் தேசத்துக்குத் தலைமை தாங்குவதற்குப் பொருத்தமற்றவர் எனக் காணப்பட்ட சந்தேகங்கள் சரியானவை என்பதை அவர் நிரூபித்துள்ளார்.

பரிஸ்உடன்படிக்கை என்பது மனிதகுலத்தை மிக மோசமாகப்பாதிக்கத்தொடங்கியிருக்கும்காலநிலைமாற்றம்தொடர்பானது. காலநிலை மாற்றம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் பாதிப்பின் வேகம் தலைவர்களும் மக்களும் இந்த விடயம் குறித்துதீவிரஅக்கறையுடன்சிந்திக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

உலகம் எதிர்கொள்ளும் காலநிலை மாற்றத்துக்குபுவிவெப்பமடைதல் என்பது முக்கிய காரணி. புவிவெப்பமடைவதற்கு ஒவ்வொரு நாடும் குற்றவாளி என்பது வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம்.

2015 டிசம்பர் 12ஆம் திகதி உலக நாடுகளின் இணக்கப்பாட்டுடன்நடைமுறைக்குவந்தபரிஸ்உடன்படிக்கையின் கீழ் ஒவ்வொரு தேசமும் புவிவெப்பமடைதலைக் குறைப்பதற்காகத் தான் வழங்கக்கூடிய பங்களிப்பை தீர்மானிக்க முடியும். 2020இல் இது நடைமுறைக்கு வரும்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இந்த உடன்படிக்கையிலிருந்தேவிலகப்போவதாகஅறிவித்துள்ளார். தேர்தல் பரப்புரைக் காலத்திலிருந்து அவர் பரிஸ் உடன்படிக்கையிலிருந்து விலகுவது குறித்து தெரிவித்து வந்திருந்தார்.

அதிபரானதன் பின்னர் அவரது சிந்தனையில் முதிர்ச்சி ஏற்படும் என எதிர்பார்த்தவர்கள் ஏமாந்துபோயுள்ளனர்.

அமெரிக்கா குறிப்பிட்ட உடன்படிக்கையிலிருந்து விலகப்போவதனால் அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை எட்டுவது இனி மிகவும் கடினமாகிவிடும். ஏனெனில், புவிவெப்பமடைவதற்கான வாயுக்களை அதிகளவு வெளியேற்றும்நாடுகளில்ஒன்றுஅமெரிக்கா(15 வீதம்).

மேலும்புவிவெப்பமடைவதற்குஎதிரானபோராட்டத்தை மேற்கொண்டுள்ள மூன்றாம் உலக நாடுகளுக்கு அவசியமான நிதியுதவியை இதுவரை அமெரிக்காவே வழங்கிவந்தது. இனி அதற்கான நிதியும் குறைவடையலாம்.

மேலும் இந்த விலகல் அமெரிக்காவின் தார்மீக ரீதியிலான தலைமைதொடர்பானதாகவும்காணப்படுகின்றது. எதிர்காலத்தில் அமெரிக்கா முன்னெடுக்கும் இராஜதந்திர முயற்சிகளை இது கடுமையாகப் பாதிக்கும்.

மனிதகுலத்தின் நீடிப்புடன் தொடர்புபட்ட மிகவும் முக்கியமானஒருவிடயத்தில்அமெரிக்காஇவ்வாறுபிற்போக்கான முடிவைஎடுத்ததன் காரணமாக சர்வதேசவிவகாரங்களுக்குத் தீர்வைக் காண்பதற்கான தார்மீக உரிமையை அமெரிக்கா இழந்துவிட்டது என்ற வாதம் இனி முன்னிலை பெறலாம். உலக நாடுகள் அவ்வாறு சிந்திக்கலாம்.

டிரம்பின் தீர்மானம் குறித்து அமெரிக்காவின் சுற்றுச்சூழல் ஆர்வலர் மைக்கல் புருனே தெரிவித்துள்ள கருத்துகள் மிக முக்கியமானவை.

''பரிஸ் உடன்படிக்கையிலிருந்து விலகியமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தவறாகும். எங்கள் பேரப்பிள்ளைகள் இதனைக் கடும் அதிர்ச்சியுடன் பார்ப்பார்கள். உலகத் தலைவர் ஒருவர் எவ்வாறு யதார்த்தம் மற்றும் தார்மீகக் கடமையிலிருந்து விலகியிருக்க முடியும் என அவர்கள் கேள்வி எழுப்புவார்கள்'' என அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்கால அமெரிக்காமாத்திரமல்ல, உலகமும் டிரம்ப் குறித்து இந்தக் கேள்வியையே கேட்கப்போகின்றது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை மூன்றாம் உலக நாடுகளிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகள் மீது இதுபோன்ற கட்டுப்பாட்டை விதிப்பது முறையல்ல என்று அவை ஏற்கனவே சீறி வருகின்றன.

# புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் இனியும் தாமதம் தேவைதானா?

■ சேரலாதன்

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் நாட்டில் அதிகரித்து வருகின்றன. அதிலும் போரால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் புதிய அரசமைப்பின் மூலமாகத் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காதாவென்ற அங்கலாய்ப்புடன் காத்திருக்கின்றனர். தற்போதுநடைமுறையில்உள்ள அரசமைப்பு 1978ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டதொன்று.

இந்த அரசமைப்பு மூலம்நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறை ஏற்படுத்தப்பட்டது. ஒற்றையாட்சி முறைமையை உள்ளடக்கி உருவாக்கப்பட்டதே இந்த அரசமைப்பு.



### ஒற்றை ஆட்சிக்குப் பதிலாக கூட்டாட்சி யோசனை

ஒற்றையாட்சிக்குப் பதிலாக கூட்டாட்சி முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் நாட்டின் அனைத்து இன மக்களும்ஒற்றுமையுடனும் மகிழ்ச்சியாகவும் வாழமுடியுமெனத் தந்தை செல்வா தமது இறுதிக்காலம் வரை கூறிவந்தார். ஆனால் இனவாதிகள் அதை ஏற்றுக்கொள்ளாது நிராகரித்து விட்டனர். ஒற்றையாட்சியின் கீழ் தமிழர்களது நலன்கள் யாவும் பறிக்கப்பட்டதால், தனி நாட்டுக் கோரிக்கை உருவானது. இதை வலியுறுத்தி ஆரம்பத்தில் அகிம்சை வழியிலான போராட்டங்கள் இடம்பெற்றன. அவை இனவாதிகளால் ஒடுக்கப்பட்டன. பின்னர் இனியும் பொறுக்க முடியாது எனச் சீறியெழுந்த இளைஞர்கள் ஆயுதங்களைக் கையில் எடுத்தனர். இதன் பலனாக நீண்டதும் கொடியதுமான போர் ஒன்று இடம்பெற்றது. போரால் ஏற்பட்ட அழிவுகள் ஏராளம். இந்த நாட்டின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. வெளிநாடுகளிடம் கையேந்தும் நிலைஉருவானது. நாட்டு மக்கள் கடனாளிகளாக மாற்றப்பட்டனர். போர் ஓய்ந்த பின்னரும் தமிழர்கள் மீதான வன்மம் இனவாதிகளிடம் குறைய வில்லை. தமிழர்களுக்கு எதையும் விட்டுக் கொடுத்துவிடக்கூடாது என்பதில் அவர்கள் குறியாக்வே உள்ளனர்.

### கிழித்தெறிப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம்

மறைந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க நாட்டின் பிரதமராக இருந்தபோது தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார். அதில் கூட்டாட்சி முறை தொடர்பாகக் கூறப்பட்டிருந்தது.

இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்திருக்குமேயானால் தமிழர்களின் பிரச்சினை களுக்கு எப்போதோ தீர்வு கிடைத்திருக்கும். ஆனால் ஜே. ஆர்.ஜெயவர்த்தன போன்ற இனவாதிகளின் எதிர்ப்பினால் பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இன்று கூட புதிய அரசமைப்பு உருவாக்கத்தை சிங்கள இனவாதிகள் தவறான கண்கொண்டு பார்க்கின்றனர். அரசமைப்பின் மூலமாக நாட்டைத் தமிழர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப் போகிறார்களெனத் தவறான பரப்புரைகளில் ஈடுபடுகிறார்கள். ஒரு சிலர் ஒற்றையாட்சியை நீக்கக் கூடாதென வலியுறுத்துகின்றனர். வேறு சிலர் ஒற்றையாட்சிக்குப் பதிலாக கூட்டாட்சி வேண்டும் என்கிறார்கள். இன்னொரு சாரார் இரண்டுமே வேண்டும் என்கிறார்கள்.

தனிநாடு கேட்டுப் போராடிய தமிழர்கள் இன்று கூட்டாட்சியை ஏற்படுத்தினாலே போதுமென்ற நிலைக்கு இறங்கி வந்துள்ளார்கள். ஒற்றையாட்சியின் கீழ் தாம் அனுபவித்த துன்பங்களை அவர்கள் ஒருபோதுமே மறந்து விடமாட்டார்கள்.

பெரும்பான்மையின அரசியல்வாதிகளுக்கு கூட்டாட்சி என்ற சொல்லைக் கேட்டாலே வெறுப்பு வந்துவிடும். கூட்டாட்சியையும் தனி நாட்டையும் இவர்கள் ஒன்றாகவே கருதுகின்றனர். இந்தத் தவறான கண்ணோட்டத்தை சிங்கள மக்களது சிந்தனையிலிருந்து அகற்ற வேண்டியது அரசின் தலையாய கடமையாகும். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட, தற்போது நடைமுறையில் உள்ள அரமைப்பில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து புதிய அரசமைப்பில் அவை இடம்பெறாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். சகல இனத்தவர்களுக்கும் மட்டுமன்றி, சகல மதத்தினருக்கும் உரிய இடம் வழங்கப்பட வேண்டும். அப்போது தான் இந்த நாடு எங்கள் அனைவருக்கும் பொதுவானது என்ற எண்ணம் நாட்டு மக்கள் அனைவர் மத்தியிலும் உருவாகும். நாட்டின் மீது பற்றும் ஏற்படும். இதை விடுத்து இந்த நாடு ஒரு சாராருக்கு மாத்திரமே உரித்தானது என்ற வகையில் நடந்து கொண்டால் இனங்களுக்கிடையில் எவ்வாறு ஐக்கியத்தை உருவாக்க முடியும்?


அரச தலைவரும் தலைமை அமைச்சரும் புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் முனைப்புடன் செயலாற்றி வருவதை அவதானிக்க முடிகின்றது. அவர்கள் இதய சுத்தியுடன் உள்ளார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. தமிழ், முஸ்லீம் இனத்தவர்களும் புதிய அரசமைப்பு உருவாகுவதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அரசைக் கவிழ்த்து விடுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மகிந்த தலைமையிலான கூட்டுஎதிரணியினர், புதிய அரசமைப்புத் தொடர்பாக மக்களைத் திசை திருப்புகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் உண்மை நிலையை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியது அரசின் கடமையாகும். ஊடகங்கள் வாயிலாக அரசால் இதைச் செய்ய முடியும். அப்போதுதான் பெரும்பான்மையின மக்கள் தெளிவு பெறுவார்கள்.

இந்த நாடு இழந்தவற்றைத் திரும்பப் பெற வேண்டுமானால், புதிய அரசமைப்பினாலே அதைச் செய்ய முடியும். வெறும் வாய் வார்த்தைகளும், காலத்தைக் கடத்திச் செல்கின்ற தந்திரமும் இனிமேலும் பயன்தரப்போவதில்லை. ஆகவே ஆட்சியாளர்கள் கிடைத்திருக்கின்ற இந்த இறுதிச் சந்தர்ப்பத்தைத் தக்க வகையில்பயன்படுத்திஅனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் புதிய அரசமைப்பை உருவாக்கிச்செயற்படுத்தவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா.தனம்



# பாதீனியத்தை ஒழித்து விவசாயத்தைப் பாதுகாப்போம்

நடந்து முடிந்த போர் ஆரம்பித்தவேளை, எமது விளைநிலங்களையெல்லாம் பயன்படுத்த இயலாது விட்டுச் சென்றோம். எமது வாழ்விடங்களையும், வளம் கொழிக்கும் வயல் நிலங்களையும் இராணுவத்தினரிடம் விட்டுவிட்டு எமது வாழ்வாதாரத்துக்காக என்னவெல்லாமோ பாடாய்ப் பட்டோம். முகாம்களில் அடைக்கப்பட்டபோதும், வறுமையால் வாடியபோதும், இழப்புக்களையெல்லாம் ஈடு செய்வதற்கு எமக்கு என்றோ ஒருநாள் எமது விளைநிலங்கள் கைகொடுக்கும் என்ற இறுமாப்பில் இருந்தோம்.

இராணுவத்தால் ஏற்படுத்தப்பட்ட பல இடப்பெயர்வுகளுக்கு முகம் கொடுத்தும், நாம் எமது விவசாயச் செய்கையை விட்டுவிடவில்லை. முடிந்துபோன போரால் இழப்புகள் துயரங்களை எல்லாம் சந்தித்தபோதும், போர்ச் சூழ்நிலை தணிந்து தற்போது எமது விளைநிலங்களை பண்படுத்தி பயிர் செய்ய வாய்ப்பு வந்தவேளை, பாதீனியத்தின் பரம்பல் எமது விவசாயத்தைப் பாழாக்கும் நோக்கில் கட்டுப்பாடின்றிப் பல்கிப் பெருகியுள்ளது.

இந்தக் கொடிய பாதீனியச் செடியின் பரம்பலால் எமது விவசாயம் பாழாகிவிடும். அது விவசாயத்தை முடக்கி எமது பயிர்களை அழித்தொழித்துவிடும்.

எனவே பாதீனியச் செடியை இல்லாதொழிக்க ஒவ்வொரு விவசாயியும், பொதுமக்களும் ஒன்றிணைய வேண்டும். வெறுமனே, "எனக்கெதுக்குச் சோலி, இதை விவசாய இலாகா பார்த்துக்கொள்ளட்டும், நான் என்னுடைய வேலையைப் பார்ப்போம்" என அசண்டையாக இருந்தால், அதனால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளுக்கு நாம்தான் முகம் கொடுக்கவேண்டி ஏற்படும்.

பாதீனியமானது, உலகிலேயே உள்ள களை வகைகளில் மிகவும் ஆபத்தானதும், விரைவாகப் பரவும் தன்மை கொண்டதாகும். விவசாயத்தில் பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு செடி வகை இது.

**பற்றிப் பெருகிப் பாதிப்பை ஏற்படுத்த வல்லது பாதீனியம்**

பாதீனியச் செடிகள் பற்றி முல்லைத்தீவு விவசாயப்பணிப்பாளரிடம் கேட்டபோது, "இந்தக்களை, 15 வருடங்கள் உறங்கு நிலையில் இருந்து முளைக்கும் திறன் கொண்டது. இந்தச் செடியொன்று 10,000 தொடக்கம் 15000 விதைகளைக் கொண்டது. இந்த விதைகள் முளைத்து சில மாதங்களிலே எமது விளைநிலங்களையெல்லாம் பற்றிப் படர்ந்து ஆக்கிரமிக்கும் வல்லமை கொண்டவை. எனவே இந்தக்களையை ஆரம்பக் கட்டத்திலேயே அழித்தொழிக்க வேண்டியது விவசாயிகளின் கடமையாகும்" எனத் தெரிவித்தார்.

இந்தக்களை, எமது வடபகுதியில் உருவான ஒன்றல்ல. இது இந்திய அமைதிப்படையின் வருகைக்குப் பின்பே இங்கு பரவியது.

இந்தச்செடி, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி உழைக்கும் ஒவ்வொரு விவசாயியின் கனவுகளையெல்லாம் பகற்கனவாக்கிவிடும் அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தவல்லது.

இதன் பரம்பல் காற்றுடன் கலந்து காற்றை மாசடையச் செய்து எமது சுவாசத்தின் மூலம் உடலில் புகுந்து பலவித நோய் காவியாகவும் விளங்குகிறது. சரும நோய்களான ஒவ்வாமை, சொறி, கரப்பன் போன்ற நோய்கள் இதன்மூலம் ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

விவசாயத்துக்கும் மனிதனுக்கும் தீங்கு விளைவிக்கும் இந்தச்செடியை முற்றாக அழிப்பதற்கு வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சும், உள்ளூராட்சிச் சபைகளும் முன்வரவேண்டும் என்பதோடு, விவசாயிகள் ஒவ்வொருவரும் இதன் பரம்பலை எப்படியாவது அழித்தொழிக்கதிடசங்கர்ப்பம்பூணவேண்டும்.

கடந்த காலங்களிலே இதனை அழிக்கும் முயற்சியாக பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக ஒட்டுசுட்டானிலே விவசாய இலாகாவும் பொதுமக்களும் விவசாயிகளும் சேர்ந்து பாதீனிய ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆனால் அவை எதிர்பார்த்த அளவுக்குப் பலன் அளிக்கவில்லை.

பாதீனிய ஒழிப்புத் தொடர்பாக வடக்கு விவசாய அமைச்சு, விவசாய போதனாசிரியர்கள் மூலம் கருத்தமர்வுகளை நடத்தி, கமக்கார அமைப்பு மற்றும் கிராம அபிவிருத்தி சங்கம் என்பவற்றின் ஊடாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

இடையிடையே பாதீனிய ஒழிப்பு என பதாகைகளைக்கட்டி, சில மணி நேரம் மக்களைக் கூட்டி குறிப்பிட்ட ஒரு இடத்தில் மட்டும் பாதீனியச் செடிகளைப் பிடுங்கி எரியூட்டி அதனைப் பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகள்மூலமும் விளம்பரப்படுத்துவதால் எந்தவிதப் பயனும் ஏற்படப்போவதில்லை.

**அனைத்துத் தரப்பினருமே அக்கறை செலுத்தவேண்டிய விடயம் இது**

பாதீனியக் களையை ஒழிப்பதற்கு கடந்த பல வருடங்களாக விவசாய அமைப்புக்களும், விவசாயத்திணைக்களமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும் தோல்வியே கிட்டியமைக்குக் காரணம், அழிப்பு நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் ஒழுங்காகத் தொடராமையே.

பாதீனியத்தின் பரம்பல் அரச அதிகாரிகளுக்கோ அன்றித்திணைக்களங்களுக்கோ பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை. பாதிக்கப்படுவது ஏழை விவசாயிகளும், பொதுமக்களும் தான் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். இந்த நிலையில் வடக்கின் பெரும்பாலான பகுதிகளில் விவசாய நிலங்களை ஆக்கிரமித்து பற்றிப்பெருகியிருக்கும் பாதீனியச் செடிகளை அழிக்கும் விடயத்தில் தேவைப்படின் சட்ட நடவடிக்கைகள்கூட எடுக்கப்பட வேண்டும். விவசாயிகள் இதனை ஒழிக்க முன்வராவிட்டால் எமது வாழ்வாதாரமான விவசாயம் பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரத்துக்காக கையேந்த வேண்டியநிலை ஏற்படும் என்பதில் ஐயமில்லை. எனவே, இன்றே அதனை அழிக்க விழித்தெழுங்கள். அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள். அதேபோன்று விவசாயிகள் ஒவ்வொருவரும் விழிப்புடன் செயற்பட்டால் பாதீனியப் பரம்பலை முற்றாக அழிக்க முடியும். மன உறுதியுடன் செயற்பட்டால் மலையையும் தகர்த்துவிடலாம்.



## ஆசிரியருக்கான கடிதம்

### இப்படிச் செய்தாலென்ன?

வலி. வடக்கு பிரதேச சபையின் கீழுள்ள பல வீதிகள் இன்றுவரை புனரமைக்கப்படாதுள்ளன. புனரமைக்கப்பட்ட வீதிகளின் இரு மருங்குகளிலும் பாதீனியம், பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன. அவை வீதிக் கரைகளை ஆக்கிரமித்துள்ளதால் அருகருகாக இரு துவிச்சக்கர வண்டிகள்,பாதசாரிகளை விலத்திச் செல்ல முடியாதுள்ளது. வீதி ஓரங்களிலும், அரச அலுவலகங்கள், பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், தபாற்கந்தோர், ஆதார வைத்திய சாலை என்பவற்றின் சுற்றாடலிலும் பாதீனியம் பல்கிப் பெருகி உள்ளது.

நீதிமன்றங்களில் சிறு குற்றங்களுக்குத் தண்டனையாக குற்றவாளியாகக் காணப்பட்டவரை சமூக சேவையில் ஈடுபடுத்துமாறு தீர்ப்பு வழங்கப்படுவதாகத் தெரியவந்துள்ளது. இத்தகைய தண்டனை பெறுபவர்களை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி, பிரிவுக் கிராமசேவையாளரின் கண்காணிப்பில் முக்கிய இடங்களில் பற்றிப் பெருகியுள்ள பாதீனியச் செடிகள், பற்றைகளை துப்புரவு செய்யப் பயன்படுத்தினால் அது மக்களுக்குப் பேருதவியாக அமையும்.

எனது இந்த யோசனை குறித்து ஆராய்ந்து பார்க்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்கள உயரதிகாரிகளை வேண்டிக் கொள்கிறேன்.

இளமதி நடராசா
தெல்லிப்பளை

### உரியவர்கள் இதைக் கவனிப்பார்களா?

சுன்னாகம் வாழைக்குலைச் சந்தைக்கு மேற்குப் புறமாகச் செல்கின்ற வீதியில் பெரியதொரு பள்ளம் காணப்படுவதால் வாகனங்களில் செல்பவர்கள் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகம் நோக்கிப் பயணிக்கின்ற மினிபஸ்கள் நேராகச் சந்திக்குச் செல்லாமல் இந்த வீதியூடாகச் சென்று சுன்னாகம் பஸ் நிலையத்தை அடைகின்றன. மினிபஸ்கள் இந்தப் பள்ளத்தில் விழுந்து எழும்பும்போது பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

உரியவர்கள் இதைக் கவனிப்பார்களா?

பா.சுதர்சினி
கந்தரோடை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# அதீத ஆளுமைப் பண்பைத் தன்னகத்தே கொண்டிருந்தவர் கென் பாலேந்திரா

ஏ.ஜெ.ஞானேந்திரன்

படைப்பார்ந்து அறிவு இயலின் அடிப்படைத் தனித்துவங்களை கல்வி நிலை சார்ந்தும், அனுபவம் சார்ந்தும் திறம்பட இயங்கு நிலை பெறச் செய்யும் இயல்புறுதியாக மனிதன் எனும் சமூக ஊடாட்டத் தனிமம் முக்கியத்துவம்பெறுகின்றான். அந்தவகையிலே நிறுவன ரீதியாக ஒருவரை ஒரு சிறந்த ஆளுநர் அல்லது இயக்குநர் என்று குறிப்பிட்டுச் சொல்வதற்கு அவரிடம் சிறந்த தகுதிகள்இருக்கவேண்டும். எல்லோராலும் தலைமைப் பதவியில் இருந்துவிட முடிவதில்லை. அதற்குத் தனித்துவமான தகுதி நிலைகள் ஒருவரிடம் இருக்க வேண்டும். அப்போதுதான்அவரால்ஒருசிறந்தநிர்வாகியாகச்செயற்பட முடியும்.

### நிர்வாக ஆளுமை

அந்தவகையிலே இலங்கை வங்கி , இலங்கைக்காப்புறுதிச்சபை, இலங்கைஇயக்குநர் சம்மேளனம், இலங்கை வர்த்தக சம்மேளனம் போன்றவற்றின் தலைவராக செயற்பட்ட கென் பாலேந்திரா அதீத ஆளுமைப் பாங்கைத்தன்னகத்தே கொண்டிருந்தார். செயற்பாட்டுரீதியிலேஅடுத்துஎன்னசெய்ய வேண்டும் என்ற திட்டமிடலையும் அது சார்ந்து தந்திரோபாயக் காய் நகர்தல்களையும் மேற்கொள்வதில் வல்லுநராக இருந்தார். நிர்வாகச் செயற்பாடுகளின் வழியே தனக்குக் கீழ் பணியாற்றுபவர்களிடம் பொறுப்புணர்வை மேன்நிலைப்படுத்திக் கொள்வதுடன் அவர்களைக்கொண்டு வேலைகளைச் செய்விப்பதிலும் சாமர்த்தியமாகச் செயற்படக் கூடியவர்.



உடல்நலஆரோக்கியத்தில் சமனிலைத் தன்மைகள் இல்லாதிருந்த போதும் இவர் நேரந்தவறாமைக்கு (Time Management) முன்மாதிரியாகத் திகழ்ந்தார். இவரது பணிநிலை சார்ந்த உற்சாகம்என்பதுஏனைய ஊழியர்களையும்அதன்வழியேபயணிக்கப்பணித்ததுடன்தனக்குரித்தானகால வரையறைகளினுள் அல்லது அதற்கு முன்பாக பணிகளை நிறைவேற்றிடும் இவரது பண்பு சிறப்புக்குரியது. இவருடைய இயல்பு பற்றிக் குறிப்படும் போது சமூக வெளியில் தனித்துவமாக மிளிர்ந்தார். தவிர, பல்மொழி ஆளுமையையும் கொண்டிருக்கிறார்.

நிறுவனரீதியாகத்திறம்படச் செயலாற்றும் இவர் ஒரு அணியாகச்செயற்படுவதையே பெரிதும் ஏற்புடையதாக்கிக் கொள்வார். அடுத்த நடவடிக்கைக்குமுன்னிலைப்படுத்தவேண்டியகோப்புகளைதேக்கி வைக்காது உடனடித் தன்மையோடு அவற்றை உரிய நடவடிக்கைகளுக்காக அனுமதித்து அது சார்ந்த செயற்பாடுகளை துரிதப்படுத்திவிடுவார். நிறுவனமுகாமைத்துவம்சார்ந்துபணிநிலையில்கீழ்உள்ளவர்கள், மேல் நிலையில் உள்ளவர்கள் என்ற பாகுபாடுகள் இன்றி அவரவர்க்குரித்தான கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கு மதிப்புக் கொடுத்துச் செயற்படுபவதுடன் தன்னிலை சார்ந்த பிழைகளை திருத்திக் கொள்ளவும் இவர் பின்வாங்குவதில்லை. வர்த்தகச்செயற்பாடுகள் மிக எளிமையாக இருக்க வேண்டும் என்பது குறித்தும், பணிகள் வினைத்திற னோடு நேர்த்தியாக இயங்கு நிலை பெற வேண்டும் என்பதிலும் அதிக கரிசனையோடு இருப்பார்.

### பணி ஆளுமை

நகைச்சுவை உணர்வு மிக்கவராகவும், சமூகத்தோடு ஒன்றித்துப் போகும் ஆர்வம் உள்ளவராகவும்விளங்குகிறார். உலக நடப்புகளை அறிந்துகொண்டு கருத்துரைக்கும் இவர் பிறரால் கனவானாகவே நோக்கப்பட்டார். பொதுவாகவே மென்மையான இயல்பு கொண்ட இவர் சூழ் நிலைகளுக்கேற்ப அவ்வப்போது கண்டிப்பாகவும் இருந்து தனது இயல்பாழுமைப் பண்பின் மறு பக்கத்தையும் காட்டத்தவறுவதில்லை. இவைதவிர பேரார்வமும் மன உறுதியும் கொண்டு நிறுவனத்தின் வளர்ச்சிக்காகத் தன்னைதியாகம்செய்துபணியாற்றும் இயல்பு கொண்டவர். ஒரு குழு சார்ந்து தானும் இணைவு கொண்டுள்ளதை பெருமிதத்தோடு வெளிப்படுத்தவும், அந்தக் குழுவின் வளர்ச்சி நிலைப்போக்கில் உறுதி கொண்டு செயற்படவும் கூடியவர். ஒரு குழுமம் என்றிருந்தால்அதற்குச் சமூகப் பொறுப்புணர்வும் இருக்க வேண்டும்என்பதை நன்குணர்ந்து கொண்டு பொருத்தமானவெளிநடவடிக்கைகளிலும் உறுதிப்பாட்டுடன்கலந்துகொள்ளத்தவறுவதில்லை. இதன் காரணமாகபங்குதாரர்கள், தொழிலாளிகள் , சமூகத்தினரிடையேமிகப்பிரபல்யமான வராக விளங்குகிறார். இலங்கைத்தேயிலைவர்த்தக அமைப்பு, இலங்கை இந்தியசமூகஅமைப்புஉள்ளடங்கலான பல்வேறு அமைப்புகளின்ஆயுட்கால அங்கத்தவராகவும் உள்ளார்.

### அங்கீகாரம்

2003ஆம்ஆண்டுஒக்ரோபர் மாதம் வெளியாகிய "லங்கா டைஜெஸ்ட்" என்ற சஞ்சிகையின் கருத்துக் கணிப்பின் அடிப்படையிலேஅதிகவாக்குகளைப்பெற்றுஇலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னான சிறந்த இலங்கை வர்த்தகத் தலைவர் என்றகௌரவத்தைப்பெற்றுக்கொண்டார். அதேவேளை 1998ஆம்ஆண்டிலும்மேற்படிசஞ்சிகையானது அந்த வருடத்திற்குரித்தான சிறந்த இலங்கையராகவும் இவரைத் தெரிவு செய்திருந்தது.

> "2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வெளியாகிய "லங்கா டைஜெஸ்ட்" என்ற சஞ்சிகையின் கருத்துக் கணிப்பின் அடிப்படையிலே அதிக வாக்குகளைப் பெற்று இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னான சிறந்த இலங்கை வர்த்தகத் தலைவர் என்ற கௌரவத்தைப் பெற்றுக்கொண்டார். அதே வேளை 1998 ஆம் ஆண்டிலும் மேற்படி சஞ்சிகையானது அந்த வருடத்திற்குரித்தான சிறந்த இலங்கையராக பாலேந்திராவை தெரிவு செய்திருந்தது.

இந்தவிடயங்கள்எல்லாவற்றுக்கும்மேலாக 2004 ஆம் ஆண்டு இலங்கைத் தீவினையும் தாக்கிய சுனாமி அனர்த்தத்தின் அழிவு நிலைகளை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் சேவை மனப்பான்மையோடு கடமையாற்றியிருந்தார். நாட்டின் அரச தலைவர் நாட்டைக் கட்டி எழுப்பும் குழுவில் இவரையும் பணிக்கமர்த்தியிருந்தமை இங்கு குறித்துநோக்கத்தக்கது. சேதமடைந்தபோக்குவரத்துச் சாலைகள், பாலங்கள் போன்றனவற்றை மீள் நிர்மானம் செய்யும் பொறுப்புக்கள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இப்படியாகச் செயலுறுதியோடும், நிர்வாகத் திறன் வாய்ந்த பணி ஆளுமையோடும் பல வழிகளில் தன் பணியைத் திறம்பட மேற்கொண்டிருந்த பெருமகனாக கென் பாலேந்திரா விளங்குகிறார். அது மட்டுமன்றி நாட்டுக்குப் பெருமை சேர்த்த சேவை மேன்மையுடைய நாயகனாகவும் நோக்கப்படுகின்றார். ஆக, இவரை நினைவு கூரும் இந்தச் சந்தர்ப்பங்களை எண்ணிச் சேவை மனப்பாங்குடைய தொழிற்பணி ஆளுமைகள் பெருமை கொள்கின்றது.


## பெறுகைக்கான அழைப்பு
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
## சபைநிதி வேலைத்திட்டம்
### கணினி வலையமைப்பிற்கான இணைப்புக்கள் உபகரணங்கள் வழங்கல்

1. தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, தகுதியான தகைமை வாய்ந்த விநியோகஸ்தர்களிடம் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இணைப்புக்கள் உபகரணங்களிற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட பெறுகை விண்ணப்பங்களை கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு. கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான வியாபாரப் பதிவை உடையவராக இருத்தல் வேண்டும்.
4. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைகேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலை கேள்வியாளருக்கான பொறுப்புகளில் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துசெய்வதற்கு பெறுகை குழுவின் தலைவருக்கு அதிகாரமுண்டு.
5. ஆர்வமுள்ள விலைக்கேள்விதாரர்கள் பெறுகைபத்திரங்களை வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய். என்ற எமது அலுவலகத்தில் அலுவலக நாள்களில் 12.06.2017 தொடக்கம் 19.06.2017 வரை மு.ப - 9.00 தொடக்கம் பி.ப - 4.15 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவல்களைப் பெற தொலைபேசி மூலம் (021-2255381). அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.
6. வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 20.06.2017 ஆம் திகதி பி.ப 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. கேள்வியானது. கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்/அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில் இருந்து 77 (எழுபத்தி ஏழு ) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. சித்தியடைந்த கேள்விதாரர் கொள்வனவு கட்டளை திகதியில் இருந்து 7 நாள்களுக்குள் பொருள்களை வழங்க வேண்டும்.
10. கேள்விதாரர் கேள்விப் பத்திரக் கட்டணமாக 1000.00 உம் அதற்குரிய NBT யும் செலுத்த வேண்டும்.

**கணினி வலையமைப்பிற்கான இணைப்புக்கள் உபகரணங்கள் விபரம்.**

| Tenter No | Itam | Specification | Qty |
|---|---|---|---|
| NP/14/41(16)/3/10/GA/Pu | Server | Dell POwer Edge T130, Windows available | 01 |
| | i3 Computer Branded | HP/Dell | 04 |
| | Billing Printer | LQ 500 Epson | 05 |
| | Access Point with router | 300Mbs | 05 |
| | Net Work & Installation ( Service ) | - | - |
| | Software installation (Service) | - | - |

03.06.2017

தலைவர்
பிரதேசசபை, மானிப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ.நதிபரன்

# மாணவர்களது கற்றல் திறனை மேம்படுத்த உதவும் உளநலக் கவனிப்புடனான ஆற்றுப்படுத்தல்

யாழ்.குடா நாட்டின் கல்வித்தரம் தொடர்ச்சியான வீழ்ச்சிப் போக்கையே வெளிப்படுத்தி வருகின்றமை தொடர்பான கருத்தாடல்கள், வாதங்கள், ஆதங்கங்கள் அண்மைக்காலமாக கல்விப்புலத்தின் மத்தியிலிருந்து மேற்கிளம்பி வருவதனைக் காண முடிகின்றது. இத்தகைய வெறும் கூச்சல் கூப்பாடுகளால் மட்டும் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்திட முடியாது . அதையும் தாண்டி ஆக்கபூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் சிந்தித்துச் செயற்படவும் வேண்டும் என்பதே முக்கியமானது. மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அவர்களது "உளப்பாங்கினை விருத்தி செய்தல்" என்ற எண்ணக்கருவானது முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த வகையில் மாணவர்களது உளத் திறனை மேம்படுத்தி அதனூடாக கற்றல்த்திறனை அதிகரிக்கச் செய்வதற்கு உளநலத்துறை சார்ந்தவர்களது பங்களிப்புடன் கூடிய நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்துப் பாடசாலை மட்டங்களில் செயற்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் கல்வித்துறை சார்ந்தவர்களுக்கிருக்கிறது. தற்போதைய நவீன தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் விளைவால் கல்வித்துறை பெரிதும் மாற்றமடைந்து வருகிறது. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் குறிப்பிடத்தக்கவாறான மாற்றங்கள் அடிக்கடி நிகழ்ந்தவண்ணமே உள்ளன. இவ்வாறான மாற்றங்கள் ஒரு புறம் கல்வியின் அடைவில் தாக்கம் செலுத்தி வர மறுபுறம் மாணவர்களின் மன நிலைகளிலும் எதிர்மறையான தாக்கங்களும் மாற்றங்களும் முனைப்புக் கொண்டு கற்றல் செயற்பாடுகளுக்குக் குந்தகம் விளைவித்து வருகின்றன. இவற்றைச் சரியாக இனங்கண்டு நிவர்த்திக்கக் கூடியதான பொறிமுறையானது இங்குள்ள பாடசாலைகளில் சரிவர இயங்க முடியாத நிலைமையே காணப்படுகின்றது. இதனாலும் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது என்கின்ற வாதத்தையும் மறுதலித்துவிட முடியாது. எனவேதான் பாடசாலைகளில் உள சமூகப் பாதுகாப்புச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தினால் மாணவர்களது உளநலம் மேம்பாடடையும் என்பதே பொதுவான அபிப்பிராயம்.

### 2012 இல் இருந்து கடைநிலை

இலங்கையின் கல்வித்துறை வரலாற்றை எடுத்து நோக்கின் 9 மாகாணங்களிலும் ஆகக் கடைநிலையையே 2012 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகத் தக்கவைத்துள்ள அவலம் வடமாகாணத்துக்குரியதாகிறது. அதிலும் குறிப்பாக கல்வியின் மணற்கேணியாக, ஊற்றுக் கண்ணாகத் திகழ்ந்த யாழ்ப்பாணம், இன்று பரிதாபத்துக்குரிய மாவட்டமாக விளங்குகின்றது. இதற்கான காரணங்கள் எவை? என்பது பற்றியதான வாதப் பிரதிவாதங்கள் வலுத்துவரும் நிலையில், காலத்தின் அசைவியக்கத்தால் இன்று யாழ்.குடா நாட்டின் கல்விப்புலம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. கல்வி வளர்ச்சியில் பல அகப்புறக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்தி வந்தாலும் இதற்குச் சாதகமான களச் சூழலானது மிகவும் இன்றியமையாதது. அதாவது மாணவர்களின் உளநலன்களில் அக்கறைகாட்டாத எந்தக் கல்விமுறையும் விழலுக்கிறைத்த நீர் போல் பயனற்றதாகவே காணப்படும் என்பது உளவியலாளர்கள் கண்டறிந்த உண்மை. போருக்குப் பின்னரான தற்காலத்தில் உளரீதியான பல்வேறு பிரச்சினைகள் மாணவர்களின் மனங்களில் மறைந்திருந்து தாக்கம் புரிகின்றன என்ற யதார்த்தத்தையும் ஏற்றுத்தானாக வேண்டும். போர் இடம்பெற்ற காலகட்டங்களில் மாணவர்களின் மனநிலை ஒருமுகப்பட்டவையாகவும் கல்வியொன்றைத் தவிர வேறு தெரிவுகள், வழிகள், சிந்தனைப் போக்குகள் இல்லா களச் சூழல் அன்று நிலவியது. ஆனால் தற்போதைய நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. இங்குதான் கட்டுடைப்பு வாதம் என்ற சித்தாந்தம் மேலெழுகிறது.

### கட்டுடைப்பு வாதம்

கட்டுடைத்தல் என்பது திடீரென ஒரு சூழலிலிருந்து இன்னொரு சூழலுக்குள் பிரவேசித்தலை, மாறுதலைக் குறிக்கும். இத்தகைய நிலைமையானது ஒரு சமூகத்தை நெருக்கடியான சூழலுக்குள்ளும் தள்ளிவிடக்கூடியது. மாணவர்களுக்கு மன அழுத்தம், உள நெருக்கீடு, பதகளிப்பு, கழிவிரக்கம், மனச்சோர்வு, அதீத பயம், பீதி, நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடுநோய் மற்றும் உளமாய நோய்கள் போன்ற பல்வேறு விதமான உளப் பாதிப்புக்கள் சாதாரணமாக ஏற்படலாம். இருந்தும் இவற்றை உளநலத்துறை சார்ந்த வல்லுநர்களாலேயே சரியான வகையில் இனங்கண்டு சீர்செய்ய முடியும் என்பதனால் அந்தத் துறை சார்ந்தவர்களின் பங்களிப்பு மிகவும் வேண்டற்பாலது. இல்லாதுவிடின் அன்றாடவாழ்வியல்செயற்பாடுகளில்பாதிப்பை ஏற்படுத்துவதுடன் நிரந்தரமான உளப்பாதிப்பையும் ஏற்படுத்திவிடும் அபாயமும் உண்டு. இந்தப் பிரச்சினைகளால் வெளிப்படும் அறிகுறிகளை நோக்கும் போது கவனக்குறைவு, கவலையுணர்வு, நம்பிக்கையின்மை, கோப உணர்வு, பின்வாங்கும் மனநிலை, தனிமையை நாடல், வன்முறையுணர்வு மேலிடல், சோம்பல், பசியின்மை அல்லது அதீத பசி, கல்வியில் நாட்டமின்மை, பாடசாலை வரவில் ஒழுங்கீனம், ஒழுக்கப் பிறழ்வு, நித்திரைக் குழப்பம், அமைதியின்மை மற்றும் வேலைகளைச் சரிவரச் செய்து முடிக்க முடியாமை போன்ற பல்வேறு உள ரீதியான அறிகுறிகள் பொதுவாகக் காணப்படும்.

உளரீதியான பிரச்சினைகள் தான் இவற்றுக்கான காரணமாக அமைகின்றனவே தவிர உடல் ரீதியாக எந்தப் பாதிப்பும் இவர்களிடம் காணப்படமாட்டாது. மேலும் தற்கால தமிழ் கல்விச் சமூகத்தின் பெரும் குறைபாடாக அமைவது தனிநபர் ஆளுமையை, இன்னொருவருடன் ஒப்பிட்டு நோக்குவதாகும். இது மாணவர்களது மனநிலையைக் காயப்படுத்தும் ஒரு செயற்பாடாகும். அதாவது பெற்றோர்களும், ஆசிரியர்களும் சக மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றுடன் ஒப்பிட்டு நோக்கி குறித்த மாணவனின் பெறுபேறானது உயர்வாகவும் மற்றைய மாணவனின் பெறுபேறு குறைவாகவும் இருக்கையில் குறைந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவனைப் பலருக்கு மத்தியில் உயர் பெறுபேறு பெற்ற மாணவனுடன் ஒப்பிட்டு ஏசுதல் மிகப் பெரும் தவறாகும்.

ஒவ்வொருவரிடமும் வெவ்வேறான தனித்துவமான திறமைகள் காணப்படும். அவற்றைச் சரியாக இனங்கண்டு வெளிக்கொணர்வதே ஆசிரியர்கள் முன்னுள்ள பெரும்பணியாக அமைகிறது.

தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை அதன் மரபார்ந்த செழுமை நிறைந்த கல்வி முறையை இழந்து வருகின்றமை கண்கூடு. இன்றைய பாடசாலைக் கல்வித்திட்டமானது பரீட்சைப் பெறுபேற்றை மட்டும் மையப்படுத்தியதாகவே காணப்படுகின்றனவே தவிர உலக ஒழுங்குக் கேற்ப மனித விழுமியப் பண்புகளைப் பேணி வளர்ப்பதிலும் தனிநபர், குடும்ப, சமூக இடைத் தொடர்புகளை வலுப்படுத்துவதிலும் தொழிற்றிறனை அதிகரிப்பதிலும் ஆளுமையை விருத்தி செய்வதிலும் அக்கறைப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

### பாடவிதானங்களுக்கு முன்னுரிமை

குறிப்பாக தமிழ், சமய இலக்கியங்களில் வருகின்ற அறநெறி, நீதி, ஒழுக்க விழுமியங்களைப் பிரதிபலிக்கின்ற பாடவிதானங்களுக்கு முன்னுரிமையளித்தல் வேண்டும். எடுத்துக் காட்டாக திருக்குறள் , ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், நாலடியார் மற்றும் தேவாரங்கள் முதலியவற்றிலுள்ள பல அறவியல் சார் கருத்துக்கள் மற்றும் பண்டைய சான்றோர்களது, அறிஞர்களது வாழ்க்கை வரலாறுகள் என்பவை மாணவர்களதுமனநிலையைவளம்படுத்தவல்லவை. பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்குகையில் மாணவரின் மனநிலை மகிழ்ச்சிகரமாகும்.

அத்துடன் அழகியல்சார் விடயங்கள் அதாவது இயல், இசை, நடனம், நாடகங்கள், ஓவியம், நாட்டுக் கூத்துக்கள் முதலிய பாரம்பரிய கலை மரபுகளைப் பேணுவதில் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதும் அவசியமாகும். கடந்த காலங்களில் இந்தச் செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதுடன் பாரம்பரிய கலை மரபுகளைப் பேணுவதில் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதும் அவசியம் ஆகும். கடந்த காலங்களில் இந்தச் செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

### தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி

சமகாலத்தில் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் கட்டற்ற கைத்தொலைபேசி மற்றும் இணையப்பாவனைகள், வேகமெடுத்துவரும் சூழமைவில் மாணவர்களின் மேற் கூறப்பட்டவாறான இணைப்பாடவிதான செயற்பாடுகள் அருகி வருகின்றமையைக் காணமுடிகிறது. எனவே மாணவர்களது மனநிலை மேம்பாடடைய மகிழ்வான கற்றல் சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்த புத்திஜீவிகளிடமே இருக்கிறது. இதைவிடுத்து, வெற்றுக் கூச்சல்களினால் எதுவும் ஆகப் போவது இல்லை.

> தற்கால தமிழ் கல்விச் சமூகத்தின் பெரும் குறைபாடாக அமைவது தனிநபர் ஆளுமையை, இன்னொருவருடன் ஒப்பிட்டு நோக்குவதாகும். இது மாணவர்களது மனநிலையைக் காயப்படுத்தும் ஒரு செயற்பாடாகும். அதாவது பெற்றோர்களும், ஆசிரியர்களும் சக மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றுடன் ஒப்பிட்டு நோக்கி குறித்த மாணவனின் பெறுபேறானது உயர்வாகவும் மற்றைய மாணவனின் பெறுபேறு குறைவாகவும் இருக்கையில் குறைந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவனைப் பலருக்கு மத்தியில் உயர் பெறுபேறு பெற்ற மாணவனுடன் ஒப்பிட்டு ஏசுதல் மிகப் பெரும் தவறாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உங்கள் பிறந்த திகதிக்கு பொருத்தமான தொழில்

எம்மில் பலருக்கும் எமக்கு எந்தத் தொழில் சிறப்பாக இருக்குமென்ற கேள்வி மனதில் எழும். இருப்பினும், பலமுறை நாம் எமது விருப்பத்துக்கு ஏற்ப எமக்கான தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம். ஆனால், இது அனைவருக்குமே பொருந்தும் என்று கூற முடியாது.
நீங்கள் பிறந்த திகதிக்கு எந்த மாதிரியான தொழிலைத் தேர்ந்தெடுத்து ஈடுபடுவது சிறப்பாக இருக்கும் என இங்கு காட்டப்பட்டுள்ளது.

**3, 12, 21, 30** இந்தத் திகதிகளில் பிறந்தவர்கள் இயற்கையாக மனவலிமைப் படைத்தவர்களாக மற்றும் நிதித் துறையில் சிறந்தவர்களாக இருப்பர். இவர்களுக்கு வங்கி, நிதி சம்பந்தமான துறைகள் பொருத்தமாக இருக்கும்.

**3**

**4, 13, 22, 31** இந்தத் திகதிகளில் பிறந்தவர்கள் மிகவும் வழக்கத்துக்கு மாறாக தனித்துவம் வாய்ந்தவர்களாகக் கருதப்படுவர். இவர்கள் அபாயம் நிறைந்த வேலைகளில் ஈடுபட விரும்புவர், ஆனால் இவர்களது தவறான முடிவால் அடிக்கடி பல தொல்லைகளைச் சந்திப்பர். இவர்களுக்கு கலை மற்றும் நடிப்பு துறை தான் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

**4**

# வரலாற்றில் இன்றைய தினம்

713 -பைஷான்ரைன் பேரரசர் பிலிப்பிக்ஸ் குருடாக்கப்பட்டு பதவி பறிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.

1889-கண்டங்களுக்கிடையேயான கனடியன் பசுபிக் புகையிரதப்பாதை பூர்த்தி செய்யப்பட்டது.

1889-முதலாவது நீர் மின்சக்தி கடத்தல் தடம் அமெரிக்காவில் பூர்த்தியானது. இது வில்லி மேற் சீர்வீழ்ச்சி மின் பிறப்பாக்கி நிலையத்திலிருந்து ஓரிரிகான் போட்லாந்துவரை 14 மைல்கள் நீளமாகும்.

1916-அமெரிக்க தேசிய பாதுகாப்பு படைப்பிரிவில் பாதுகாப்புச் சட்டம் கையொப்பமிடப்பட்டது.

1940-யூதர்களின் நாடாக மடகஸ்காரை ஆக்குவதற்கு பிறான்ஷ் றாடெமச்சர் தீர்மானம் முன்மொழிந்தார். இந்தச் சிந்தனை 19ஆம் நூற்றாண்டில் ஊடகவியலாளர் தியோடர் ஹேரார்ஷியும் கொண்டிருந்தார்.

1959-சிங்கப்பூரில் உள்ளக சுயாட்சி அறிவிக்கப்பட்டது.

1963 -வியட்னாம் குடியரசு இராணுவப் படை வீரர்களால் தென் வியட்னாம் ஹியூவில பௌத்த ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்குவதற்கு கண்ணீர்ப்புகைக்குண்டில் திரவ இரசாயணப் பதார்த்தம் சேர்க்கப்பட்டமையால் 67 பேர் தோல் கொப்புளங்கள் மற்றும் சுவாச நோய்கள் காரணமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

1965-ஜெமினி 4 எனும் பல நாள் விண்வெளி செயற்பாட்டின் போது நாஸா விண்வெளி வீரர் எட்வைற் முதன் முதலாக விண்வெளியில் மிதந்து நடந்தார்.

1979-தெற்கு மெக்சிகோ வளைகுடாவில் ஐக்ஸ்ரொக் 1 எண்ணைக் கிணற்றில் ஏற்பட்ட எண்ணைக் கசிவால் 3000 000 பரல் எண்ணெய் நீரில் கலந்தது. இது உலகில் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவு விபத்தில் இரண்டாவது பெரிய கசிவாகப் பதிவாகியது.

1982-ஐக்கிய இராச்சியத்துக்கான இஸ்ரேலிய தூதுவர் ஷ்லோமோ ஆர்கோவ் லண்டன் வீதியொன்றில் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலுக்கு இலக்கானார். அவர் உயிர்தப்பிய போதும் உடல் செயற்பாடுகள் முடங்கின.

1984-பொற்கோவில் என அழைக்கப்படும் ஹர் மந்திர் சாஹிப் மீது இந்திய அரசால் புளூஸ்ரார் எனும் பெயரிலான இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஜூன் 6ஆம் திகதி வரை நீடித்த இந்த நடவடிக்கையின் போது 5000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தும் காயமடைந்தும் போயினர்.

1989-தினமன் சதுக்கத்தில் 7வாரமாக நிலை கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்களைப் பலவந்தமாக வெளியேற்ற சீன அரசு படைகளை அனுப்பியது.

1992 -ராஜீவ் கொலை வழக்கு விசாரணை ஆரம்பம்.

1992 -60 கோடி மக்கள் பட்டினி நிலையில் 2030 இல் உலக சனத்தொகை 2மடங்கு அதிகரிக்கும் ஐ.நா.அறிவிப்பு.

2004 -ஊடகவியலாளர் நடேசனின் பூதவுடல் வதிரியில் தீயுடன் சங்கமம். இறுதி ஊர்வலத்தில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்பு.

2006-மொன்ரி நீக்ரோ சுதந்திரப் பிரகடனத்தையடுத்து சேர்பியா மற்றும் மொன்ரி நீக்ரோ யூனியன் முடிவுக்கு வந்தது.

2012-நைஜீரியா லாகோசுவுக்கு அண்மையில் 153-பேரைச் சுமந்து சென்ற விமானம் விபத்துக்குள்ளாகியதில் அதிலிருந்த அனைவரும் தரையிலும் பத்துப்பேர் சாவடைந்தனர்.

**நாளை**

**வைகாசி-21**
ஞாயிற்றுக்கிழமை -04.06.2017
திதி: தசமி மு.ப.11.38
நட்சத்திரம்: அத்தம் மா.06.38
சுபநேரம்:08.52-10.22 வரை
ராகுகாலம்:04.22-05.52 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போசாக்கு மட்டத்தை அடையாமைக்கான காரணத்தைக் கண்டறிய வேண்டும்

வடக்கிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் 90 வீதமானவர்கள் போசாக்கு சராசரி மட்டத்தை இன்னமும் எட்டாத நிலையே காணப்படுகிறது. அதனால் அவர்களுக்கான உணவு வழங்கலை மேலும் 5 வருடங்களுக்கு அதிகரிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
போசாக்குப் பிரச்சினை வடக்கில் இன்றுவரை நீடித்துக்கொண்டிருக்கும் பிரச்சினையாக உள்ளது. 2006 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து பாடசாலைகளில் மாணவர்களுக்கு மதியநேர சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வழங்கப்படுவதால் அதிக பயன் கிடைக்கிறது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எனினும் எதிர்பார்க்கப்படுகின்ற போசாக்குச் சராசரி மட்டம் இன்னமும் எட்டப்படவில்லை.
போசாக்கு மட்டம் தனியே பாடசாலைகளில் மட்டும் வழங்கப்படும் சத்துணவைக் கொண்டு எட்டிவிடப்போவில்லை. அதனையும்தாண்டி வீட்டில் கவனம் செலுத்தப்படவேண்டும். போசாக்கு சராசரியை எட்டுவதில் அதிகம் பங்களிப்பது வீடு களில் வழங்கப்படும் உணவுகள் தான். அதனால் வீட்டில் வழங்கப்படும் உணவுகளில் பெற்றோரும் மாணவர்களும் அக்கறை கொள்ள வேண்டும்.
வறுமை நிலை ஏராளமான குடும்பங்களில் இன்னமும் தலைவரித்தாடிக்கொண்டுதானிருக்கின்றது. அதன் பாதிப்பு நேரடியாகவும் மறைமுகமாகவும் மாணவர்களையும் பற்றிக் கொள்கின்றது. இளமையில் கல் என்பதும் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்பதும் முதுமொழிகளாக இருந்து வருகின்றன. கல்வியை வடக்கிலுள்ளவர்கள் எந்தளவுக்கு முக்கியத்துவப்படுத்துகிறார்கள் என்பது இங்குள்ள அனைவருக்கும் புரிந்த விடயம். கற்றலுக்கு மாணவர்கள் தகுந்த உடல் ஆரோக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும். விளையாட்டுக்களில் சிறப்பான இடத்தைப் பிடிக்கவும் ஆரோக்கியம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. மாணவர் திறனை தீர்மானிப்பதில் போசாக்கும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இது மட்டுமன்றி, மாணவர்களது எதிர்கால வாழ்வியல், உயர் கல்வி, தொழில் நிலை,




தொழில்நிலையில் நீடித்திருப்பது உள்ளிட்ட எதிர்கால வாழ்க்கைப் போராட்டத்தைத் தீர்மானிக்கும் விடயங்களாக மாணவ வயது கல்வியும் ஆரோக்கியமும் விளங்குகின்றன. எல்லாமும் அந்தந்தக் காலங்களில் கிடைக்கப்பெறும்போதுதான் எதிர்காலம் செம்மையாக அமைந்துவிடுகிறது.
கற்றலில் சிறந்த மட்டத்தைப் பெறவும், மற்றொரு வகையில் உணவுக்காக மாணவர்கள் பாடசாலைகளைப் புறக்கணிப்பதனைத் தவிர்க்கவும், உணவுடன் கல்வியைப் பெறவும் மாணவர்கள் பாடசாலைக்கு வருவதனைத் தூண்டவும் இதனால் வழியேற்படுத்திவிடுகிறது.
தகவல்களின்படி வடக்கில் 10 வீதமான மாணவர்கள்தான் சராசரி போசாக்கு மட்டத்தை எட்டியுள்ளனர் என்றால் ஏனைய 90 வீதமான மாணவர்கள் அந்தச் சராசரியை இன்னும் ஏன் எட்டவில்லை என்பதில் பெற்றோர் மட்டுமல்ல ஆசிரியர்களும் குறிப்பாக பாடசாலை நிர்வாகங்களும் கவனம் செலுத்த வேண்டும்.
தற்போதைய உலக உணவுத் திட்டத்தின் மூலமான இலவச உணவு வழங்கல் எமக்கான ஒரு வரப்பிரசாதம். இது தொடர்ந்து கிடைக்கும் என்று கூறமுடியாது. 5 வருடங்களுக்கு உணவு வழங்கல் நீடிக்கப்பட்டுள்ளது என்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகவுள்ள போதிலும் காலம் பூராவும் அது கிடைக்கும் என்ற உத்தரவாதம் இல்லை. மாச்சத்து உணவுகள் மட்டுமன்றி கடலுணவு உள்ளிட்ட தானிய உணவு வகைகளும் அதிகளவில் உட்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளதால் பெற்றோரும் இந்த போசாக்கில் விடயங்களில் அதிக கவனம் கொள்ள வேண்டும். சராசரி மட்டம் இன்னமும் எட்டப்படாமைக்கு எங்கோ குறைபாடு இருக்கின்றது என்பதே உண்மை. அதனைக் கண்டறிந்து நீக்க வேண்டும்.

அருண்
வைத்தியநாதன் இயக்கத்தில்
அர்ஜுன் நடித்திருக்கும் 'நிபுணன்' திரைப்படம்
ஜூலை மாதம் 7 ஆம் திகதி வெளியாகும் எனப் படக்குழு அறிவித்துள்ளது. 'அச்சமுண்டு அச்சமுண்டு' மற்றும் 'கல்யாண சமையல் சாதம்' ஆகிய தமிழ் படங்களையும், 'பெருச்சாளி' என்ற மலையாள படத்தையும் இயக்கியவர் அருண் வைத்தியநாதன். 'கல்யாண சமையல் சாதம்' படத்தைத் தொடர்ந்து தமிழில் அர்ஜுன், பிரசன்னா, வரலட்சுமி, சரத்குமார் உள்ளிட்ட பலர் நடிக்கும் 'நிபுணன்' படத்தை இயக்கி வருகிறார் அருண் வைத்தியநாதன். இந்தப் படத்தின் மொத்த படப்பிடிப்பும் முடிந்து, இறுதிக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திரைப்படம் எப்போது திரைக்கு வரும் என்று தெரியாத நிலையில், தற்போது ஜூலை மாதம் 7 ஆம் திகதி வெளியாகும் எனப் படக்குழு அறிவித்துள்ளது. அர்ஜுன் நடிப்பில் வெளியாகவுள்ள 150 ஆவது படம் 'நிபுணன்' என்பது குறிப்பிடத்தக்கது.

## அர்ஜுனின் 150 ஆவது படம்




## பருத்தித்துறையில் பஸ்ஸில் ஏறினாள் ஒரு பருவக்கிளி....



ஓரக்கண்ணால் பார்க்கிறாள் ஓராம்கட்டையில் இறங்கிடுவாளோ?
மனதை மயக்குறாளே மந்திகையில் மறைந்திடுவாளோ?
நெஞ்சை பஞ்சாக்கிறாள் நெல்லியடியில் நழுவிடுவாளோ?!
வெளியே எட்டிப் பார்க்கிறாள் வெள்ளைறோட்டில் வெளியேறிடுவாளோ?!
வார்த்தைகளால் வருடுகிறாள் வல்லைவெளியில் வந்திறங்குவாளோ?
அம்சமாய் இருக்கிறாள் அச்சுவேலிக்காரியோ?!
ஆடம்பரம் ஆகலும் இல்லை ஆவரங்கால் அவள் ஆறுமிடமோ?!

புத்தாடையில் புறம் பார்க்க வைக்கிறாள் புத்தூர் அவள் புகலிடமோ?
சின்ன சிரிப்பால் சிதறடிக்கிறாள் சிறுப்பிட்டியில் எனைச் சிறைப்பிடிப்பாளோ?
நினைவில் நிஜத்தைக் கலக்கிறாள் நீர்வேலியில் நிறுத்திடுவாளோ?
புன்னகையால் பூரிக்க வைக்கிறாள் பூதர்மடத்தில் பூரத்தியாகிடுமோ?

கோட்டைகளை மனதில் கட்ட வைக்கிறாள் கோப்பாயில் இடிந்திடுமோ?
இமைக்காமல் ரசித்து இதயத்தில் இடம் பிடித்த அவள் இடம் இருபாலையோ?
கண்களால் கதைபேசி கடைசியில் கட்டைபிராயில் கால்பதிப்பாளோ?!
கன்னியவள் கல்வி என்று கல்வியங்காட்டில் கரையிறங்குவாளோ?

முன்னுக்கு முன்னேறுகிறாள் முத்திரைசந்தியில் முன்னிறங்குவாளோ?
நல்முகத்துடன் நகர்கிறாள் நல்லூரில் நழுவிடவோ?!
ஆ என்ற வாய்கள் மூடமுதல் ஆனைப்பந்தியில் ஆறிடுவாளோ?
ஆசைகள் அனைத்தையும் ஆரியகுளத்தில் மூழ்கடிப்பாளோ?

ஆனந்த மழை ஆஸ்பத்திரியடியில் முடிவு ஆகிடுமோ?
யாழ்ப்பாண நகரின் யாழ்தேவி அவளோ?!
மறுபடி பார்க்க வாய்ப்புகள் கூடுமோ?!



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** அன்றாடப் பணிகளை உற்சாகமுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**இடபம்:** பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், லாபமும் உயரும். உறவினர் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் கடைபிடிப்பது நல்லது.

**மிதுனம்:** நீண்டநாள் திட்டத்தை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் கூடும். வரவேண்டிய பாக்கி எளிதில் வசூலாகும். பணியாளர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

**கடகம்:** சமூகத்தில் சுய கௌரவம் உயரும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**சிங்கம்:** மனதில் புத்துணர்வும், செயல்களில் திறமையும் வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி உருவாகும். பணியாளர்களுக்கு அதிக சலுகை கிடைக்கும்.

**கன்னி:** குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உயரும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும்.

**துலாம்:** நண்பர்களுடன் பொழுதுபோக்கில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரைக் குறை கூறும் சூழ்நிலை ஏற்படலாம். பொறுமை தேவை. தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் காண்பீர்கள். உடல்நலனுக்காக சிகிச்சை மேற்கொள்வீர்கள்.

**தனுசு:** நண்பர்களிடம் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். வருமானம் கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**மகரம்:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபார மிதமான லாபம் கிடைக்கும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். பெண்களால் நன்மை உண்டாகும்.

**கும்பம்:** உடல்நலனில் அக்கறை செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தியால் லாபம் கூடும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். பெண்கள், உறவினர்களால் பாராட்டப்படுவர்.

**மீனம்:** வெளியூர் பயணம் செல்ல நேரிடும். தொழில், வியாபார வளர்ச்சிக்காகப் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வீட்டுச் செலவுக்கு தாராள அளவில் பணம் செலவழிப்பீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும்.



பேங்க்ல வேகமா வேலை செய்யுறது... பணம் எண்ணுற மெஷின் மட்டும் தான்



நேற்று:தி சென்னை சில்க்ஸ்
இன்று:தீ சென்னை சில்க்ஸ்
எத்தினை புருசன்மாரின் சாபமோ தெரியல்லையே....

இரண்டு நாளா இத எப்படி யூஸ் பண்றதுன்னு யோசிச்சு யோசிச்சு மூளை சூடாயிருச்சு! இதை வடிவமைத்த திருப்பூர் டெக்னாலஜிஸ்ட் தான் கொஞ்சம் இத தெளிவு படுத்தனும்!



## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | 9 | 5 | |
| | 3 | | | 8 | | | | |
| | | 5 | | | | | 2 | |
| 8 | 5 | | | 6 | | | 1 | |
| 7 | | 9 | | | | | | |
| | 1 | | | | | | | |
| | | | 9 | | | 8 | | 6 |
| | | | 8 | 5 | | 3 | 9 | |
| | | | | | 3 | | | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 4 | 5 | 7 | 8 | 2 | 9 | 3 |
| 5 | 2 | 9 | 4 | 3 | 6 | 7 | 1 | 8 |
| 7 | 3 | 8 | 9 | 1 | 2 | 6 | 4 | 5 |
| 1 | 4 | 6 | 3 | 2 | 5 | 9 | 8 | 7 |
| 2 | 9 | 5 | 8 | 6 | 7 | 1 | 3 | 4 |
| 3 | 8 | 7 | 1 | 9 | 4 | 5 | 6 | 2 |
| 4 | 6 | 3 | 7 | 5 | 1 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 1 | 2 | 8 | 3 | 4 | 7 | 6 |
| 8 | 7 | 2 | 6 | 4 | 9 | 3 | 5 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியவிவி சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபலமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கறுப்பா? சிவப்பா?

ஒரு ஊரில் காகமொன்று இருந்தது. தான் கறுப்பு நிறத்தில் இருப்பதை அது வெறுத்தது. அது ஒரு நாள் ஒரு குளக்கரையில் இருந்த மரத்தின் மீது அமர்ந்திருந்தது. அப்போது அந்தக் குளத்து நீரில் இரு அன்னப் பறவைகள் நீந்திக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்த்த காகம் அந்த அன்னப் பறவைகளைப் போல நான் வெள்ளையாக இல்லையே என வருந்தியது. தானும் தினமும் தண்ணீரில் நீந்தினால் தன் சிறகுகளில் இருக்கும் கரிய நிறம் போய் வெண்மை நிறம் வந்து விடும் என எண்ணியது. அதன்படி நாள் முழுவதும் அந்தக் குளத்து நீரில் நீந்தியது. நிறம் மாறுவதாக இல்லை. பின்னர் ஒவ்வொரு நாளும் தொடர்ச்சியாக குளத்தில் நீந்தியது. இடையிடையே தன் இறகுகளையும் கோதுவது போல தேய்த்து தேய்த்துப் பார்த்தது. அதனால் அது தனது இறகுகள் சிலவற்றை இழந்ததேயன்றி கறுப்பு நிறம் மாறவேயில்லை. காகம் குளத்துக்கு வெளியே வந்து குளக்கட்டில் இருந்து அது குறித்துச் சிந்தனை செய்து கொண்டிருந்தது. காகத்தின் செயல்களைத் தினமும் கவனித்த அன்னப் பறவை ஒன்று காகத்திடம் வந்து "காக்கையாரே, இறைவன் படைப்பில் ஒவ்வொரு உயிரினமும் ஒவ்வொரு இயல்பு, உருவம், நிறம் பெற்றவை. அவற்றை நாம் மாற்ற நினைப்பது முடியாத காரியம். ஏன் மனிதர்களையும் பார். வெவ்வேறு விதமான இயல்புகள், நிறங்கள், உருவங்களை உடையவர்களாகத்தானே இருக்கிறார்கள். உலகில் ஒவ்வொரு ஜீவராசிக்கும் தனித்துவமான குணங்கள் உள்ளன. எம்மை இறைவன் எவ்வித உடற் குறையும் இல்லாமல் படைத்ததற்கு நன்றி சொல்ல வேண்டுமேயன்றி கவலைப்படக் கூடாது. ஒருவன் கறுப்பா சிவப்பு என்பதில் உயர்வு தாழ்வு இல்லை. அவர்கள் செய்யும் செயல்களில்தான் வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்" என்றது. காகமும் அன்னத்தின் கருத்தை ஏற்றுக் கொண்டது. அன்னப்பறவைகள் வெள்ளையாக அழகாக இருக்கின்றன. ஆனால் உலகத்தவருக்கு அவற்றால் பயன் மிகக் குறைவு. ஆனால் காகங்களாகிய நாம் கறுப்பாக இருந்தாலும் நாம் இந்த உலகிற்குச் செய்யும் சேவை மகத்தானது என தனக்குள் பெருமைப் பட்டுக்கொண்டு அவ்விடம் விட்டு பறந்து சென்றது காகம்.



# தொலைக்காட்சி பற்றிய உரையாடல்



**ஆசிரியர்** :- பிள்ளைகளே! நேற்று நாம் தகவல்கள் பெறும் ஊடகங்களுள் வானொலி பற்றிப் பார்த்தோம். இன்று தொலைக்காட்சி பற்றிப் பேசுவோம். இன்று தொலைக் காட்சிப் பெட்டி இல்லாத வீடுகளே இல்லை எனலாம்.

**குமார்** :- தொலைக்காட்சியைக் கண்டு பிடித்தவர் யார் சேர்?

**ஆசிரியர்** :- ஜோன் பெயர்டும் சி.எம் ஜாங்கினும் இணைந்தே இதனைக் கண்டு பிடித்தார்கள். தொலைக்காட்சியின் முக்கிய சிறப்பு எது தெரியுமா?

**ரமணன்** :- தெரியும் சேர். உலகத்தில் எங்கோ ஒரு மூலையில் நடைபெறும் புதினங்களை நாம் எமது வீடுகளில் இருந்தபடியே பார்க்கிறோமே அதுதான் தொலைக்காட்சிப் பெட்டியின் சிறப்பு.

**ஆசிரியர்** :- நீங்கள் எல்லோரும் தொலைக்காட்சி பார்க்கிறீர்கள்தானே? தொலைக்காட்சி மாணவர்களின் அறிவைத் தூண்டும் வகையில் செய்திகள் மூலம் பொது அறிவையும் விஞ்ஞானத் தகவல்களையும் நாட்டு நடப்புகளையும் உலக நிலைமைகளையும் அறியச் செய்வதுடன் பல போட்டி நிகழ்ச்சிகளாலும் சிறுவர் நிகழ்ச்சிகளாலும் விளையாட்டுக்கள் மூலமும் மாணவர் தமது அறிவையும் ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்ள உதவுகின்றது.

**கஸ்தூரன்** :- சேர், நீங்கள் இப்படி தொலைக்காட்சி பார்ப்பதில் உள்ள பயன்களை நல்ல முறையில் எடுத்துக் கூறுகின்றீர்கள். ஆனால் எங்கள் வீடுகளில் நாங்கள் ரிவி பார்ப்பதை எமது பெற்றோர் விரும்புவதில்லையே .ஏன்?

**ஆசிரியர்** :- பிள்ளைகளே! எந்த ஒரு விடயத்திலும் நன்மையுமுண்டு. தீமையும் உண்டு எதுவும் அளவுக்கு மீறினால் நஞ்சாகி விடும். நீங்கள். ரிவி பார்ப்பதை நாள் முழுவதுமான பொழுது போக்காக எடுத்துக் கொள்ளக் கூடாது. முதலில் அதிக நேரம் ரிவி பார்த்தால் அது நாளடைவில் உங்கள் கண்களைப் பாதிக்கும். ரி.வி.யை குறைந்தது 10 அடி தூரத்தில் இருந்து பார்ப்பதே நல்லது.

**கஸ்தூரன்** :- ரிவியைத் தொடர்ந்து பார்த்தால் படிப்பில் கவனம் குறையும். பாடப் புத்தங்களை வாசிப்பதில் அக்கறைப்பட மாட்டோம் என்கிறார்களே.

**ஆசிரியர்** :- ஆமாம்! தொலைக்காட்சியில் அதிக நாட்டம் வருமாயின் படிப்பில் ஈடுபாடே வராது. புத்தங்களைத் தேடி வாசித்து பயன்பெற வேண்டும் என்ற சிந்தனை அற்றுப் போகும். தொடர்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையே பார்க்கத் தூண்டும்.

**குமார்** :- சேர் மாணவராகிய நாங்கள் ரிவியில் எந்த எந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம் என்று கூறுவீர்களா?

**ஆசிரியர்** :- அப்படிக் கேளுங்கள். தொலைக்காட்சியில் உலகில் வாழும் எல்லாத் தரப்பினருக்குமென்று நிகழ்ச்சிகளை நடாத்துகிறார்கள். சிறுவர்களாகிய நீங்கள் உங்கள் கல்விக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்றதான நிகழ்ச்சிகளை ஒரு அளவோடு பார்த்தல் நன்று. உலக உள்ளூர் செய்திகள், விளையாட்டுக்கள் அறிவியல் சார் நிகழ்ச்சிகள், பேச்சுப் போட்டிகள், வினாவிடைப் போட்டிகள், அறிவியல் சார்ந்தவை சிறுவர்களுக்கான கலைநிகழ்ச்சிகள், பட்டி மன்றம், விவாதம் என்பவற்றைப் பார்க்கலாம்.

**ரமணன்** :- சேர் சினிமாப் படங்கள், தொடர் நாடகங்கள் பார்க்கலாமா?

**ஆசிரியர்** :- சினிமாப் படம் சமூகத்துக்கு, குறிப்பாக சிறுவரை நல் வழிப்படுத்துவதான கதை அம்சம் கொண்டிருந்தால்ஒரு தடவை பார்க்கலாம். ஆனால் தொடர் நாடகங்களை நீங்கள் பார்க்கவே கூடாது. அவை தினம் தினம் தொடர்ந்து ஒளிபரப்பப்படுவதால் தொடர்ந்து பார்க்க வேண்டிய தேவையும் ஏற்படும். உங்கள் படிப்பு நிச்சயம் இவற்றால் பாழாய்ப் போகும். தொடர் நாடகங்கள் பார்ப்பதால் உங்கள் பெற்றோருக்கிடையிலேயே முரண்பாடுகள் ஏறுபடுவதை நீங்கள் கண்டிருப்பீர்கள்.

**குமார்** :- பார்த்தீர்களா சேர்! நாம் தொலைக்காட்சி பார்ப்பதைத் தடுத்து விட்டு எமது பெற்றோர் மட்டும் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்களே! அவர்களை என்ன செய்வது?


**ஆசிரியர்** :- நீங்கள் இளமையில் கல்வி கற்று எதிர்காலத்தில் பெருந் தலைவர்களாகவோ, வேறு வேறு நல்ல துறைகளிலோ மிளிர வேண்டியவர்கள். நீங்கள் சரியானபடி உங்கள் கல்வியைத் தொடர்ந்தால் பெற்றோரும் நாளா வட்டத்தில் உங்கள் படிப்புக்கு இடைஞ்சல் கொடுக்கும், ரிவியைக் கொஞ்சம் தள்ளி வைப்பார்கள். பெற்றோரும் தமது பிள்ளைகளின் நலன் கருதி ரிவி பார்ப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும். பிள்ளைகளாகிய நீங்கள் உங்கள் நன்நடத்தைகளால் உங்கள் பெற்றோர்களுக்கு பாடம் கற்பித்துக் கொடுங்கள் பார்ப்போம்.

# எழுத்து வழு நீக்கி எழுதுதல்

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| 1.இளனி | இளநீர் |
| 2. இங்கனம் | இங்ஙனம் |
| 3. எண்ணை | எண்ணெய் |
| 4. காச்சல் | காய்ச்சல் |
| 5. கத்திரிக்கோல் | கத்தரிக்கோல் |
| 6. கோடாலி | கோடரி |
| 7. தீவாளி | தீபாவளி |
| 8. தேத்தண்ணி | தேநீர் |
| 9. பாவக்காய் | பாகற்காய் |
| 10. வெக்கம் | வெட்கம் |
| 11. வாறன் | வருகிறேன் |
| 12. வெய்யில் | வெயில் |
| 13. முயச்சி | முயற்சி |
| 14. வைக்கல் | வைக்கோல் |
| 15. வேர்வை | வியர்வை |
| 16. கிணத்தடி | கிணற்றடி |
| 17. புடவை | புடைவை |
| 18. கடக்கரை | கடற்கரை |
| 19. பிரச்சனை | பிரச்சினை |
| 20. பயச்சி | பயிற்சி |

# காலநிலை எதிர்வு கூறல்

- புவியிலும் வானிலும் ஏற்படக்கூடிய மாற்றங்களை முன் கூட்டியே தெரிவிப்பதைக் காலநிலை எதிர்வு கூறல்கள் என்பர்.
- புவியிலும் வானிலும் தினம் தினம் பல மாற்றங்கள்நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.
- சில வேளைகளில் கடும் வெப்பம் நிலவுகிறது. சில நேரங்களில் பெருமழை பொழிகிறது.
- திடீரெனப் புயற்காற்று வீசுகிறது. இவை எல்லாம் காலநிலை மாற்றங்கள்.
- இவற்றை விட கடற்பெருக்கு, பூகம்பம், சுனாமி போன்றவைவும் ஏற்படுகின்றன.
- வரப்போவதை முன்னதாகவே தெரிந்து கொள்ள தற்போது பல கருவிகள் உள்ளன.
- செய்மதிகள் இராடர்கள், றேடியோ சவுண்ட் போன்றவற்றின் மூலம் காலநிலை மாற்றங்களை முன்னதாகவே தெரிந்து கொள்ளலாம்.
- செய்மதிகள், வானிலை மாற்றங்களைப் படம் பிடித்துப் பூமிக்கு அனுப்புகின்றன.
- அவற்றை அடிப்படையாகக் கொண்டே தொலைக்காட்சி வானொலி என்பவை காலநிலை எதிர்வு கூறல்களைத் தெரிவிக்கின்றன.
- இவற்றை விட ஒவ்வொரு பெரிய நகரங்களிலும் காலநிலை அவதான நிலையங்கள் உள்ளன. அவையும் வெப்ப தட்ப மழை நிலைகளைக் கணித்துக் கூறுகின்றன.
- காலநிலை எதிர்வு கூறல்கள் மக்களின் நலன் கருதியே தெரிவிக்கப்படுகின்றன.
- அவற்றைக் கவனத்தில் கொண்டு செயற்படுதல் மக்கள் தம் கடனாகும்.



# கலாநிதி ஆனந்தக் குமாரசுவாமி



கலாநிதி ஆனந்தக் குமாரசுவாமி 1877 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டியில் பிறந்தார். இவர் தரம் மிக்க நூல்களையும் ஆக்கங்களையும் எழுதியுள்ளார். அவை 500 இற்கும் மேற்பட்டவை. ஆங்கிலம், தமிழ், பிரான்சு, ஜேர்மன், லத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். சட்ட அறிஞராகவும் மொழி பெயர்ப்பாளராகவும் திறமை காட்டினர். பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்துக்கும் இந்து சமய நூல்களை தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கும் மொழி பெயர்த்தார். இவர் லண்டன் வைக் லிஃப் கல்லூரியில் தனது மேற்படிப்பைப் பயின்றார். 'இலங்கையின் மலைகளும் காரீயமும்' என்னும் பருவ இதழ் அவரது எழுத்தாக்கமாகும்.

இலங்கைத் திருநாடு எங்களுக்கு அளித்த ஒரு பிரதான தத்துவஞானி இவராவார். கீழைத் தேச இலக்கியப் படைப்புகளைக் காக்கும் பொறுப்பை ஏற்றிருந்த இவரது ஆக்கங்களின் கையெழுத்துப் பிரதிகள் இன்றும்கூட அமெரிக்காவில் பொஸ்டன் லலிதக்கலைகள், அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மத்திய கால சிங்களக் கலை, இந்திய இந்தோனிசிய கலை வரலாறு, தேசிய எதிர்பார்ப்புகள் போன்றவை இவரால் எழுதப்பட்ட சில அரிய நூல்களாகும். இவர் 1947 செப்ரெம்பர் 9ஆம் திகதி அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கம்

## விழிப்பு நிலையில் மூளையின் நடைமுறையான அறிவுப்பகுதி விதந்துரைக்கும் இருளின் ஆழ்நிலை நர்த்தனம்

விழிப்பு நிலையில் இருக்கும்போது உண்டாகும் பொறுப்புகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் எம் உடலையும் உள்ளத்தையும் சோர்வு நிலையிலிருந்து தளர்த்திக் கொள்ளவும், இயல்பான உள் உந்துணர்ச்சியான (Instinct) உறக்கம் உடம்பிற்கும் உள்ளத்திற்கும் அடிப்படைத் தேவையாகிறது. இதனையே அறிவியலார்களும் வெளிப்படுத்தி நிற்கின்றனர். எடுத்துக் கூறுகின்றனர். நாம் தூங்காது போனால் எமது உடலும் உள்ளமும் களைப்பும் சோர்வும் அடை கின்றன.

குறிப்பாக மூளையின் மின்னாற்றல் செய்கை என்பது நாம் உறங்கும்போது தன் வேகத்தைக் குறைத்து மெல்லச்செயல்படுவதாகவும் நாம் கனவினைக் காணும்போது இந்தச் செய்கையானது அதிகப்படுவதாகவும் அறிவியலாளர்கள் நிறுவியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

எம்மை விழிப்புநிலையில் இருக்கவைப்பதற்குத் தேவையான ஒரு பொருள் செலவாகிவிடுகிறது என்றும், நாம் உறங்கும்போது அப்பொருளானது மீண்டும் நிரம்பல் நிலையினை அடைகிறது என்றும் கூறப்படுவதான ஒரு வேதியியல் கொள்கை உள்ளது. தவிர அந்தக் கோட்பாட்டிற்கு எதிர்மறையாக நாம் உறங்கும்போது நினைவு நிலையில் தோன்றிய நச்சுப் பொருள்கள் அழிக்கப்படுகின்றன என்ற கருத்தும் உள்ளது.

**மூளையின் நடைமுறை விரிவு**

மூளையில் நடைமுறையான அறிவுப்பகுதி விரிந்து வளரும்போது விழிப்பு நிலைக் கால அளவு அதிகமாகத் தேவையாகின்றது என்பது பிறிதான இன்னொரு கோட்பாடு. பகுத்தறிவாற்றல் வளராநிலையில் உள்ள புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் நீண்ட நேரம் (பெரும்பான்மையான அல்லது அதிக நேரம்) உறங்கியே கழிப்பதற்கான காரணத்தை இந்தக் கோட்பாடு விளக்கக் கூடும்.

மூளையில் ஒரு குறிப்பிட்ட வலைப்பின்னல் போன்றுள்ள பகுதியைத் துண்டித்து எடுத்து விட்டால் இடைவிடாமல் தொடர்ந்து உறங்கிக் கொண்டே இருக்கும் நிலை ஏற்படும் என்பதைச் செயல்நிலை சார் செயன்முறை விளக்கத்தின் மூலம் அறிவியலாளர்கள் வெளிக்காட்டியுள்ளதாக கூறப்படுகிறது.

நாங்கள் ஏன் தூங்குகிறோம் என்பதற்குத் திட்டவட்டமான, திடமான காரணங்கள் தொடர்பில் உறுதியாகக் கூறமுடிய வில்லையானாலும் நாம் உறக்கம் கொள்ள வேண்டிய இன்றியமையாத தன்மைகள் உண்டு என்பதில் இருந்து சிறிதும் ஐயப்பட வேண்டியதில்லை. எம்மைப் போலவே பிற விலங்குகளும் பெரும்பாலும் உறங்கி விழிக்கின்றன என்பதில் இரு வேறுபட்ட கருத்தில்லை.

**தூக்கப்பாங்கு**

தூக்கப்பாங்கும் விழிப்பு நிலைப்பாங்கும் எங்களுடைய பழக்க வழக்கங்களோடும், புலனுணர்வுகளோடும் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. உணவு, உடை, உறையுள், தற்காப்பு ஆகியவற்றுக்குத் தம் காட்சி அறிவைப் பொறுத்தே வாழும்விலங்குகள்எப்போதும் மனிதனைப் போலவே பகலில் இயங்குவனவாக காணப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அவை பெரும்பாலும் பகலில் செயலாற்றி இரவில் தூங்குபவை என்பது புலனாகிறது.



பொதுவாக குழந்தைகளுக்கு பத்து முதல் பன்னிரண்டு மணிநேர உறக்கம் தேவை என்கின்றனர் விஞ்ஞானிகள். பாடசாலை செல்லும் குழந்தைகள் ஓர் நாளில் ஒன்பது முதல் பதினோரு மணிநேரமும், இளைஞர்கள் ஏழு முதல் ஒன்பது மணி நேரமும் தூங்க வேண்டும்.

இதற்கு விதி விலக்காகச் சில மூத்தோர் இரவில் இரண்டு அல்லது மூன்று மணிநேரமே தூங்கினாலும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதைக் காண்கிறோம். தவிர ஜப்பானியக் குழந்தைகளும், இளைஞர்களும் மூத்தோர்களும் ஐரோப்பியர்களைவிடவும் குறைந்த கால அளவே உறங்குவதாகச் சொல்லப்படுகிறது. இந்த வேறுபாட்டிற்கான காரணம் என்பது அவர்கள் வேறுபட்ட இனத்தவர்கள் என்பதைவிடவும் அவரவர்களுக்குரித்தான தான பழக்க முறைமையே பிரதான காரணம் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**தூக்க நடை**

இந்த நிலையிலே தூக்கத்தில் நடக்கும் பழக்கம் ஒருவித மனநோயின் வெளிப்பாடாகவே கருதப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இவை தூக்கத்தில் தோன்றும் கனவு நிலையில் சாத்தியப்படுகிறது. எப்படி கனவு என்பது எமது ஆழ்மனதில் அடக்கிவைக்கப்பட்டிருக்கும் நிறைவேறாத ஆசைகளின் வடிகாலாக, வெளிப்பாடாக அமைகின்றதோ அதே போலவே ஆழ்மனதில் நீண்ட காலமாக பதிந்திருக்கும் கசப்பான அனுபவங்கள், எண்ணங்கள், ஆசைகள், ஆவேச உணர்ச்சிகள் போன்றவற்றை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியாகத்தான் இந்த 'துயில் நடை' அமைந்துள்ளது. தூக்கத்தில் கனவுக்கு அடுத்த கட்டமே துயில் நடை எனப்படுகிறது.

தூக்கத்தில் நடப்பதற்கும் அந்தக் கணத்தில் அவர் காணும் கனவுக்கும் தொடர்பிருப்பதாக கூறப்படுகிறது. இதன்பிரகாரம் கனவில் தோன்றும் உணர்வுகளுக்கு ஏற்ப துயில் நடை புரிபவர் அசைவு கொடுக்கிறார். புரிந்துக்கொள்ள முடியாத சில வார்த்தைகளையோ அல்லது வாக்கியங்களையோ சொல்லுகிறார். குறிப்பாக எழுந்து நடத்தல், தண்ணீர் குடித்தல், கதவைத்தட்டுதல் போன்ற செயல் நிலைகள் இந்த நடையினுள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவை அனைத்தும் ஓரிரு நிமிடங்கள் தான் இடம்பெறுவதாகவும் சொல்கின்றனர். அதன் பின்பாக சுய உணர்வுகளை துயில்நடை புரிவோர் பெற்றுவிடுகின்ற போதும் குறித்த காலத்தில் இடம்பெற்றதான அனைத்துச் செயல்நிலைகளும் மறந்துபோய்விடுகிறது. ஆக, நிறைவான முழு உடல் நலத்துடன் ஒருவன் வாழ்வதற்குத் தேவையான தூக்கத்தின் கால அளவானது வயதுக்கேற்பவும், ஆளுக்குரித்தான வேறுபாட்டிற்கேற்பவும், இவை தாண்டி சில சந்தர்ப்பங்களில் இனங்களுக்கேற்பவும் மாறுபட்டு அமையும் எனச் சொல்லப்படுகிறது.




பெண்களுக்கான றொப் வகைகளில் தற்போது நவீன வடிவிலான றொப்கள் சந்தைக்கு வந்துள்ளன. இவை ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

### நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 350 | 400 | 300 |
| கணவாய் | 700 | 800 | 800 | 1000 |
| பாரை | 600 | – | 700 | 700 |
| சுறா | 800 | – | 800 | – |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 600 | 400 | 500 | 600 |
| முரல் | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | – | 450 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 400 | 400 | 400 | 500 |
| திரளி | 250 | 300 | 200 | 200 |
| நகரை | 300 | 300 | 400 | 300 |
| சூடை | 200 | 400 | 200 | 150 |
| ஒட்டி | 250 | – | 300 | – |
| திருக்கை | 300 | 300 | 400 | 300 |
| மதனம் | 200 | – | 300 | – |
| கொய் | 150 | 100 | 80 | 80 |
| பாலை | 250 | 300 | 600 | 500 |
| வாழை | 100 | – | 500 | – |

### மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 60 |
| கத்தரி | 180 | 160 | 140 | 180 |
| கரட் | 240 | 240 | 180-280 | 320 |
| மரவள்ளி | 70 | 80 | 50 | 60 |
| பயிற்றை | 140 | 100 | 80 | 140 |
| பாகல் | 180 | 200 | 160 | 200 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 70 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 300 | 300 | 200-250 | 260 |
| பூசணி | 70 | 60 | 45 | 60 |
| தக்காளி | 140 | 120 | 100 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 25–35 | 40 |
| கீரை | 25 | 30 | 25-35 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 20 |
| பச்சை மிளகாய் | 400 | 450 | 350 | 400 |
| புடோல் | 120 | 80 | 60 | 100 |
| கோவா | 140 | 160 | 150 | 180 |
| வெண்டி | 120 | 120 | 70 | 80 |
| போஞ்சி | 200 | 240 | 180 | 200 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 120 |
| தேங்காய் | 70 | 65 | 40-60 | 60-70 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 200 | 100 | 180 | 280 |
| இராசவள்ளி | 200 | 220 | | 240 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 60 | 120 |

**வீடு விற்பனைக்கு**

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வீடுவளவு விற்பனைக்குண்டு. பரப்பு 1.9.47 குளி. நான்கு பக்க மதிலுடன் கூடியது. 45/14, பூநாறி லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தொடர்பு - 077 939 5578
077 918 5723

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
03.06.2017
உதயன் சுதா தம்பதியரின்
செல்வப் புதல்வன்
**யாதவ்**
தனது முதலாவது பிறந்த தினத்தை
இன்று (03.06.2017) சனிக்கிழமை
இங்கிலாந்தில் உள்ள அவருடைய
இல்லத்தில் அப்பா, அம்மா, அக்கா - இராகவி மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள் புடை சூழ
வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். யாதவ் சகல
நலன்களும்பெற்று நோய், நொடியின்றி சீரும்
சிறப்புடனும் பல்லாண்டு வாழ வேண்டி வண்ணார்
பண்ணை வட - கிழக்கு அருள்மிகு வீரகத்தி
விநாயகரைப் பிரார்த்தித்து வாழ்த்துவோர்.



ஹற்றனில் உள்ள
மகாதேவன் - தாத்தா, கமலா - பாட்டி, மாலினி - பெரியம்மா
திருகோணமலையில் உள்ள
நிரஞ்சன் - பெரியமாமா, கமலாசனி - பெரியமாமி, சஞ்சயன் - மச்சான், ரவி - சின்னமாமா, இந்து - சின்னமாமி
கஜானி - மச்சாள்,
நாயன்மார்கட்டில் உள்ள முரளி - பெரியப்பா மற்றும்
சாவகச்சேரியில் உள்ள அப்பப்பா - விக்கிரராஜா தம்பதியினரும்,
குடும்பத்தினரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1962.06.14, செவ். இல்லை, சுவாதி நட்சத்திரம் 43 பாவம், 5' 6" உயரம் உடைய ஆஸ்திரேலியா P.R உடைய வேளாளர் மணமகனுக்கு 1970 இற்கு மேல் நல்ல குடும்ப பாங்கான மணமகள் தேவை. (மணமகன் தீய பழக்கங்கள் அற்ற இளமைத் தோற்றமுடையவர்)

தொடர்பு-
சந்திரன் திருமண சேவை
077 466 8148

## கல் விற்பனைக்குண்டு


யா / திருநெல்வேலியில் 4 இஞ்சி கொங்கிறிட் கற்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 5782 684

## வீடு, காணி விற்பனைக்கு

மல்லாகம் நீதிமன்ற வீதியில் அமைந்துள்ள 10 பரப்புக்காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.
*பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
077 494 1750, 021 224 1604

## மரண அறிவித்தல்

### சிதம்பரபிள்ளை நடராசா



தோற்றம் 20.03.1938 மறைவு 01.06.2017

ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரபிள்ளை நடராசா (01.06.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரபிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - இலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் குணரத்தினம், மகேஸ்வரி காலஞ்சென்ற மகாதேவா, சண்முகநாதன், நித்தியலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுந்தரலிங்கம், வில்வமங்களம், இராமநாதன், யோகராஜா, தங்கராஜா ஆகி யோரின் அன்பு மைத்துனரும் வனஜா (கனடா), சிவகுமார், வசந்தி (பேபி), மனோஜ்குமார் (ஜேர்மனி), வாசுகி, ஞானகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவராஜா, றஞ்சனா, சூரியகுமார் (சபா), சிவஞானவதி, ஜெயக்குமார், யாழினி (ஆசிரியர் யா/புங்குடுதீவு றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனும் சாருஜா, சதுர்த்தியன், பிரியங்கா, துஷாந்த், பிருத்திகா, கார்த்திகா - பிரகாசன், கார்த்திக், நிரோஷன், கௌசியா, கஜாகரன் காலஞ்சென்ற யதுஷியா, ஹர்ஷினி, மிஷானன், ரகீர்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும் தனிஷின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சங்கரப்பிள்ளை



தோற்றம் 12.03.1927 மறைவு 31.05.2017

இல. 160, பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சங்கரப்பிள்ளை கடந்த (31.05.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் செல்லாச்சி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம் மனோன்மணி, பத்மநாதன், வாமதேவன் மற்றும் நவரட்ணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற டாக்டர் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் சிவராணி, சிவலோஜினி, சிவராஜினி, சிவராஜபிள்ளை (முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்), சிவராஜதிருபுவனன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேஷராஜா (ஓய்வுபெற்றதொலைத்தொடர்புபொறியியலாளர்), சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர்), மாசிலாமணி (ஓய்வுபெற்ற வீடமைப்பு அதிகாரசபை முகாமையாளர் வடமாகாணம்), ஜெயவனா (முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்), ஷாமினி ஆகியோரின் அன்பு மாமியும் கணேஷ்குமார் - ஜெயந்தினி, காலஞ்சென்ற நந்தகுமார், சிவாஜினி-சஞ்சீபன், சிவசொரூபி-பார்த்தீபன், தாரணி -ஞானேஸ்வரன், சிராணி, சிந்திக்கா, சுஜித், சாருங்கா, சுமன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சக்தியாழ், கஜனன், அஞ்சலி, வருணன், மகிழினி, சேந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0716215902,
0212213641

தகவல்:
குடும்பத்தினர்.

### கிளிநொச்சி...

மக்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அரச தலைவர் திடீரெனக் காலிக்குச் சென்று நிவாரணப் பொருள்களைப் பொறுப்பேற்று அங்கு பகிர்ந்தளித்தார்.

தெற்கில் ஏற்பட்ட இடரால் 6 லட்சம் மக்கள் பாதிப்படைந்தனர். இவர்களுக்கு உதவி வழங்குமாறு சகல தரப்பிடமும் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையப் பலரும் உதவி புரிந்து வருகின்றனர். இலங்கையில் இடம்பெற்ற போரினால் அழிவடைந்த வடக்கில் இருந்தும் உதவிகள் அனுப்பப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.அருமைநாயகத்தின் ஏற்பாட்டில் பொதுமக்கள், வர்த்தகர்கள் எனப் பலரிடமும் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருள்கள் 7 பார ஊர்திகளில் நேற்று முன்தினம் காலி மாவட்டச் செயலகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டன. அரசதலைவர் அங்கு சென்று பொருள்களைப் பொறுப்பேற்றார்.

போர் காரணமாக அனைத்தையும் இழந்த ஒரு மாவட்டத்தில் இருந்து இந்த உதவி கிடைப்பதையிட்டு மனநிறைவடைகின்றேன் என்று அரச தலைவர் கூறினார் என்று மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இதேவேளை, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் இருந்து தலா 100 அரச ஊழியர்கள் பாதித்த மாவட்டங்களுக்கு நேரில் சென்று தங்கி நின்று உதவி புரிகின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்தும் மாவட்டச் செயலரின் ஏற்பாட்டில் இன்று 4 பார ஊர்திகளில் உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4-101)

### 'பிசி' படிவங்களை...

2017ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. கிராம அலுவலர்கள் வீடு வீடாகப் பிசி படிவங்களை விநியோகித்து அவற்றை மீளப் பெற வேண்டும். கிராம அலுவலர்கள் வீடு வீடாக பிசி படிவங்களை வழங்கத் தவறினால், பொதுமக்கள் உடனடியாக மாவட்டச் செயலக முறைப்பாட்டு இலக்கத்துக்குத் தெரிவிக்க முடியும் என்று மாவட்டச் செயலர் கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

இதற்கு அமைவாகப் பொதுமக்களால் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவு, கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு, நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு, காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவு, சங்கானை பிரதேச செயலாளர் பிரிவு, பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவற்றுக்கு உட்பட்ட கிராம அலுவலர்கள் தொடர்பில் மாவட்டச் செயலகத்துக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கிராம அலுவலர்களுக்கு எதிராகப் பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்கு மாவட்டச் செயலகம் உடனடி நடவடிக்கை எடுத்துள்ளது. கிராம அலுவலர்கள் வீடு வீடாக பிசி படிவம் விநியோகிக்காமை தொடர்பில், சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்களிடம் விளக்கம் கோரி அதற்குரிய பதிலை மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)











## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
16.07.1952

மறைவு
04.05.2017



அமரர் **தம்பிமுத்து இராஜலிங்கம்**

நாள்கள் முப்பத்தொன்று சென்றிடினும்
மறந்திடுமா உம் நினைவு
பரிதவிக்குது எம் நெஞ்சம்
உன் புன்சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன்

தமிழ் பாடசாலை அருகில்,
கந்தரோடை, சுன்னாகம்.

குடும்பத்தினர்.
077 523 5410

## மரண அறிவித்தல்



### வேதநாயகம் கோபாலசுந்தரம்

(முன்னாள் வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்.
அரியாலை விவசாய சம்மேளனத் தலைவர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமார் என அன்பாக அழைக்கப்படும் வேதநாயகம் கோபாலசுந்தரம் 02.06.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் முத்துக்குமாரு வேதநாயகம் - கனகம்மா தம்பதியரின் இளையபுதல்வரும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (மாம்பழம்) - கமலாம்பிகை தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்ற குகதாம்பாளின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான திலகவதி, நீலாம்பிகை மற்றும் பாரதி, தயாநிதி, எந்திரி இரகுநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கணேசா மற்றும் சுபாசினி, கந்தா, உருத்திரா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஸ்ரீதர், சியாந்தி, டயானா ஆகியோரின் மாமனாரும் கணேசா, அர்ஜன், சங்கரி, அரன், அஜன், அர்ஷன், சஞ்யுதன் ஆகியோரின் பேரனும் உமாபதி, பவானி, தேவராசா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று காலை 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

12/4, கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 221 1067

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலைகள்...

தடுத்து வைக்கப்பட்டிருக்கமாட்டார்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்துத் தொடர்பில், கிளிநொச்சியில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும், காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் அவர்களது உறவினர்கள் கருத்துத் தெரிவிக்கையில், சந்திரிகா தான் தெரிவித்த கருத்துத் தொடர்பில் ஆதாரத்தைக் கொண்டிருக்கவேண்டும். அந்த ஆதாரத்தை வெளியிடவேண்டும். உண்மையில் அவரிடம் ஆதாரம் இருந்திருந்தால், அதனை ஏன் இவ்வளவு நாளும் வெளிப்படுத்தவில்லை.

நாம் இராணுவத்திடம் ஒப்படைத்த உறவுகளை அவர்கள் கொன்று விட்டார்கள் என்றால், குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுக்க வேண்டியதுதானே. பின்னர் ஏன் வெளிநாடுகளுக்குச் சென்று, காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கின்றோம், விசாரணை நடத்துகின்றோம் என்று கூறவேண்டும்.

சந்திரிகா அம்மையார் தெரிவித்த இந்தக் கருத்துக்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றார்கள். (கு-56)

## சந்திரிகாவிடம்...

நேரடியாகக் கேட்கப்படும். இவ்வாறு இலங்கை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன தெரிவித்தார்.

முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில், ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டிருப்பார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் இராணுவப் பேச்சாளரிடம் கேட்டபோது, நாம் அந்த நேர்காணலைப் பார்க்கவில்லை. அதனைப் பார்க்கவேண்டும். அதன் பின்னர் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா அவ்வாறு கூறியுள்ளாரா என்று கேட்ட பின்னர்தான் பதில் வழங்க முடியும் - என்றார். (கு-5)

## புலிகளை...

பயத்தை மகிந்த தெற்கில் உருவாக்கிக் கொண்டு இருக்கின்றார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டை மாறிமாறி ஆட்சி செய்த இரண்டு கட்சிகளும் தங்களது இயலாமையை நிரூபித்துள்ளன. அமைச்சர்களே மரத்தை வெட்டுகின்றார்கள்; மண்ணை அள்ளுகின்றார்கள்; வாகன வரி அனுமதியை விற்கின்றார்கள்; கோடி கோடியாகக் கொள்ளையடிக்கின்றனர். இவர்களால் எப்படி நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்.

எதையாவது செய்து அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர். எதையாவது செய்து ஆட்சியைப் பிடிக்கவேண்டும் என்று எதிர்க்கட்சியினர் முயற்சி செய்கின்றனர். ஆட்சியைப் பிடிப்பது, ஆட்சியைத் தக்கவைப்பது மாத்திரமே இவர்களின் நோக்கம். நாட்டின் எதிர்காலம் பற்றி இவர்களுக்கு சிறிதளவேனும் அக்கறையில்லை.

மகிந்த புலி பயத்தைக் காட்டிக் காட்டியே ஆட்சியைப் பிடிக்க முயற்சி செய்கிறார். வடக்கில் சிறு சத்தம் கேட்டாலும் இதோ புலிகள் வந்து விட்டனர் என்று கூறுகின்றனர். வடக்கில் புலிகள் உருவாவார்கள் என்ற பயத்தை தெற்கில் ஊட்டி ஊட்டியே மகிந்த ஆட்சியைப் பிடிக்கப் பார்க்கின்றார்.

மகிந்த இருந்தால் புலிகள் வரமாட்டார்கள் என்றொரு கருத்தை தெற்கில் விதைப்பதன் மூலம் மக்கள் மகிந்தவை மீண்டும் ஆதரிப்பர் என்று அவர் நினைக்கின்றார். வடக்குத் தமிழரை விடவும் மகிந்தவே புலிகள் மீண்டும் வருவதை விரும்புகின்றார். புலிகளைத் தவிர வேறு எதுவும் மகிந்தவுக்குத் தெரியாது. வேறு எந்தத் தலைப்பையும் வைத்து அவருக்கு அரசியல் செய்யத் தெரியாது.

இவ்வாறான அரசியல்வாதிகளிடம் மீண்டும் நாட்டைக் கொடுக்கவும் முடியாது. இப்போது ஆட்சி செய்கிறவர்களை நீக்க விடவும் முடியாது. அடிமட்ட மக்களிடம் அதிகாரம் செல்கின்றபோதே இந்த நாடு அபிவிருத்தி அடையும். அதுவரை நாம் இவ்வாறு போராட வேண்டியதுதான் - என்றார். (கு-3)

## இலங்கையிலிருந்து...

இதனையடுத்து மன்னார் வளைகுடாக் கடல் பகுதியில் கடந்த இரண்டு நாள்களாகச் சுங்கத்துறை, மத்திய உளவுத் துறையினர், கியூ பிரிவு கடலோரக் காவல்படை உள்ளிட்ட பாதுகாப்பு வட்டாரங்கள் தீவிர சோதனையில் ஈடுபட்டுவந்தன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு பாம்பன் தெற்குவாடி பகுதியில் நாட்டுப் படகில் கொண்டு செல்லப்பட்ட 7.5 கிலோ தங்கம் சென்னையைச் சேர்ந்த அலி என்பவரிடம் பறிமுதல் செய்யப்பட்டது, அவர் கைது செய்யப்பட்டு வழக்குப்பதிவு செய்யப்பட்டது என மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் கூறினர்.

அவரிடம் இரவு முழுவதும் நடத்திய விசாரணையையடுத்து நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் பாம்பன் குந்துகால் துறைமுகத்தில் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த இரத்தினம் மற்றும் ராமநாதன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொண்ட சோதனையை அடுத்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் மறைத்து வைத்திருந்த மேலும் 7 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டது. மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டது. இருவரும் கைது செய்யப்பட்டனர். பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் மற்றும் கைது செய்யப்பட்ட மூவரையும் ராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகம் கொன்டு சென்று வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பின்னர் அவர்கள் மதுரைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

மன்னார் வளைகுடா மற்றும் பாக்ஜலசந்தி கடல் பகுதிகளில் 24 மணி நேரமும் உள்ள பலத்த பாதுகாப்பையும் மீறி இலங்கையிலிருந்து படகு மூலம் ஒரே நாளில் சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான தங்கம் கடத்திவரப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டமை உள்ளூர் பாதுகாப்பு வட்டாரங்கள் மற்றும் ராமநாதபுரம் கடலோரப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (கு-21)

## அநுரவுக்கு...

கப்பட்டுள்ளார். கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று இந்த அனுமதியை வழங்கினார்.

அனுர சேனநாயக்க வசீம் தாஜுதீனின் கொலைக்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. தம்முடைய சேவை பெறுநர், 2016 ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஒரு வருடத்தைக் கடந்திருப்பதால், அவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கும் அதிகாரம் நீதிவானுக்கு இல்லை என்றும் 2ஆவது சந்தேகநபரான முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவின் சார்பில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி அனில் சில்வா, மன்றில் அறிவித்தார்.

அதுமட்டுமின்றி, அவர், மேல் நீதிமன்றத்தில் பிணை மனுத் தாக்கல் செய்துள்ளதால், பிணை வழங்கும் அதிகாரமும் நீதிவானுக்கு இல்லை என்றும், சந்தேகநபர், சாட்சியாளர்களை அச்சுறுத்தியிருந்தாலோ அல்லது விளக்கமறியலில் இருந்தபோது தப்பிக்க முயன்றிருந்தாலோ விளக்கமறியலில் வைக்கமுடியும் எனவும் கூறினார்.

பிணைச் சட்டத்தின் 17ஆம் பிரிவுக்கு அமைய, சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றத்தில் கோரப்பட்டு, அந்த உத்தரவு நீதிவானுக்கு அனுப்பப்பட்டாலேயே விளக்கமறியலில் வைக்கமுடியும் எனச் சுட்டிக்காட்டிய அவர், அநுர சேனநாயக்கவை விடுதலை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

விளக்கமறியலில் வைக்கும் அதிகாரம் இல்லை என்பதை தான் ஒத்துக்கொள்வதாகத் தெரிவித்த பிரதி சொலிசிற்றர் ஜெனரல் டிலான் ரத்னாயக்க, மேல் நீதிமன்றத்தில் பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிணைச் சட்டத்தின் 13ஆம் பிரிவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கமுடியும் எனக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் இரண்டு மணி நேரத்தில் தனது உத்தரவை வழங்குவதாக அறிவித்த நீதிவான் வழக்கை ஒத்திவைத்தார். வழக்கு பின்னர் எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிணை வழங்கமுடியாது என்று உத்தரவிட்டார்.

ஆயினும் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட பிணை மனுத் தாக்கல் வழக்கில் அனுர சேனநாயக்கவுக்குப் பிணை வழங்கப்பட்டது.

றக்பி விளையாட்டு வீரர் வசிம் தாஜுதீன் நாரஹேன்பிட்டி ஷாலிகா விளையாட்டரங்குக்கு அருகில் உள்ள வீதியில் கார் ஒன்றுக்குள் இருந்து 2012ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார்.

வாகன விபத்தில் அவர் உயிரிழந்தார் என முதலில் தெரிவிக்கப்பட்டபோதும், அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

இவரின் கொலை வழக்கில் அனுர சேனநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டி குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோர் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், முதலாம் சந்தேக நபரான சுமித் பெரேரா கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (கு-10)

## சபைக்கு...

மாதத்துக்குரிய முதல் வார நாடாளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளன. இதில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இறுதி முடிவெடுக்கப்படும்.

இதன்போது பேரிடர் தொடர்பில் விவாதிப்பதற்குரிய நாள் தீர்மானிக்கப்படும். இதற்கான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை எதிர்க்கட்சி கொண்டுவரவுள்ளது.

நாட்டில் தென்மேற்குப் பிராந்தியங்களில் பெய்துவரும் கனமழையால் வெள்ளிக்கிழமை மாலை வரை 208 பேர் உயிரிழந்துள்ளனர். 92 பேர் காணாமற்போயுள்ளதுடன் 72 பேர் காயமடைந்துள்ளனர்.

9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவிலும், ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட வீடுகள் முழு அளவிலும் சேதமடைந்துள்ளன. (கு-4)

## ஆட்சிக்...

வீட்டுக்கு அனுப்புவோம் என அண்மைக் காலமாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உட்பட அவரது அணியைச் சேர்ந்த பலரும் கூறிவந்த நிலையில்,அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஆட்சியை 2020 வரை ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்புகள் எமக்கு அறவே இல்லை. அதனால் அந்த வருடம் நெருங்கும் வரை நாம் எதிர்க்கட்சியாகவே இருப்போம். ஆனால்,ரவி கருணாநாயக்க நிதி அமைச்சராக இருந்திருந்தால் இந்த வருடமே நாம் ஆட்சியைப் பிடித்திருப்போம்.

நாம் இந்த ஆட்சியைக் கவிழ்பதற்குச் சதி செய்யவில்லை. இந்த அரசுதான் 2020 வரை ஆட்சியில் இருக்கவேண்டும். அப்போதுதான் 2020 இதற்குப் பின் இலகுவாக எம்மால் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முடியும். ஜனவரி 8ஆம் திகதி இந்த நாட்டு மக்கள் இந்த அரசுக்கு வழங்கிய ஆணையை அரசு நிறைவேற்றினால் இந்த அரசுடன் நாம் சண்டை பிடிக்கமாட்டோம்.

இந்த அரசுக்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்புகள் இருப்பதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். இந்த அரசைக் கொண்டு நடத்தும் இரு முதன்மைக் கட்சிகளிடையேயும் ஒற்றுமை இல்லை. ஒன்றை ஒன்று விமர்சித்துக்கொண்டே இருக்கின்றன.

இதனால் இந்த அரசு உறுதியற்ற அரசாக மாறிவிட்டது. இதனால்தான் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வந்து முதலீடு செய்வதற்குத் தயங்குகிறார்கள். இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்குச் சென்று முதலீடு செய்கின்றனர்-என்றார். (கு-43)

## இரத்தினபுரிக்கு...

கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் செல்கின்றனர்.

பாரவூர்தியில் உதவிப் பொருள்களை எடுத்துச் செல்லும் அவர்கள், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்குவார்கள் என்று கூறப்பட்டது.

இதேவேளை, தென்பகுதியில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் புறக்கணித்து விட்டார் என்று மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்றுமுன்தினம் குற்றஞ்சாட்டியிருந்தார். (வ-5,101)

## திருமலையில்...

பாடசாலைகளிலும் மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அத்துடன் ஆசிரியர்களும் பாடசாலைகளுக்கு வருகை தராததால் இன்று பாடசாலைகள் இயங்காது வெறிச்சோடிக் காணப்பட்டன.

கிழக்கு மாகாணம் தழுவிய பாடசாலைகளில் வகுப்புப் புறக்கணிப்புக்குத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது.

இதனடிப்படையில் திருகோணமலை கல்வி வலயம், மூதூர் வலயம், குச்சவெளி கோட்டம், தம்பலகாமம் கோட்டம், ஈச்சிலம்பற்று கோட்டம் உட்பட மாவட்டத்தில் உள்ள அனைத்து வலயங்களிலும் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் இயங்கவில்லை.

அத்துடன் நகரத்தில் உள்ள தேசியப் பாடசாலைகளான சிறிகோணேஸ்வரா இந்துக் கல்லூரி, சிறிசண்முகா இந்து மகளிர் கல்லூரி, புனித சூசையப்பர் கல்லூரி, புனித மரியாள் கல்லூரி உட்பட பல கல்லூரிகளும் இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (கு-ய-40)

## தரம் 1...

தரம் ஒன்று அனுமதியின்போது விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு 50 வீதமும், அந்தப் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சார்பில் 25 வீதமும், சகோதர அடிப்படையில் 15 வீதமும், கல்வி அதிகாரிகளுக்காக 5 வீதமும், இடமாற்றம் பெறும் அரச ஊழியர்களுக்காக 4 வீதமும், வெளிநாட்டிலிருந்து இலங்கை திரும்புகிறவர்களுக்கு ஒரு வீதமும் அனுமதிக்கப்படும் என அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல விண்ணப்பங்களும் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குக் கிடைக்கவேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. (கு-4)

## வெட்டுக்...

நகர்ப் பகுதிக்குச் சென்று வருவதாகக் கூறிப் பேருந்தில் சென்றிருந்தார்.

இரவு 9 மணியளவில் தனது மனைவியைத் தொலைபேசியில் அழைத்து தனது கடையின் முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியை எடுத்து வீட்டு வளவினுள் விடும்படியும் தான் வீட்டுக்கு வந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் நீண்டநேரமாகியும் அவர் வீட்டுக்கு வராத காரணத்தால் இரவு 10 மணியிலிருந்து பல தடவைகள் அவரது அலைபேசிக்கு அழைப்பை மேற்கொண்டபோதும் அது இயங்கவில்லை என்று அவரது குடும்பத்தவர்கள் விசாரணையில் கூறியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். பல இடங்களிலும் தேடியும் அவரைக் காணமுடியவில்லை.

நேற்றுக் காலை சண்முகபுரம் கிராமத்தில் வீதியால் சென்றவர்கள் வீதியோரத்தில் உடலம் ஒன்று கிடப்பதைக் கண்டு செட்டிகுளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற செட்டிகுளம் பொலிஸார் உடலத்தை மீட்டு வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (கு-4-101)

## ஞானசாரரின்...

முன்னாள் பிரதி முதல்வர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 7 நாடுகளின் தூதுவர்களும் இராஜதந்திரிகளும் கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலுக்கு பயணமொன்றைமேற்கொண்டிருந்தனர். இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அசாத் சாலி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அணியினரே ஞானசார தேரரின் பின்னால் ஒரு பலம் பொருந்திய சக்தியாக இருந்து அவர்களை இயக்குகின்றனர். ஆனால் இப்போது நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவே ஞானசார தேரரைக் கைது செய்யவிடாமல் பாதுகாத்து வருகின்றார்.

அரச தலைவருடனான சந்திப்புகளுக்கும் ஞானசார தேரரை அழைத்து செல்வது அமைச்சர் விஜயதாச ராஜபக்சவே. கடந்த ஆட்சியின் போது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவாத அடக்குமுறைகள் காரணமாகவே நாட்டின் அனைத்துத் தரப்பினரும் இணைந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தனர். தற்போதைய மைத்திரி-ரணில் அரசும் முஸ்லிம் மக்களை ஏமாற்றியுள்ளது. சிங்கள இனவாதிகளுக்கு மீண்டும் களமமைத்துக் கொடுத்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது-என்றார். (கு-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுசன சேவைகள் வி.கழகம் ஐக்கியத்தின் தொடரில் மகுடம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் முருங்கன் பொதுசன சேவைகள் விளையாட்டுக்கழக அணி சம்பியனானது. ஐக்கியத்தின் மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முருங் கன் பொது சன சேவைகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் எந்த அணியும் கோலெதையும் பதிவுசெய்யாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது பொதுசன சேவைகள் அணி. (ம-23)





# பிளைக்கப்ஸ் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூன் 3
மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் சுன்னாகம் பிளைக்கப்ஸ் அணி கிண்ணம் வென்றது.
அண்மையில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுன்னாகம் பிளைக்கப்ஸ் அணி மோதியது.
நாணயச்சுழற்றசில் வெற்றிபெற்ற மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பிளைக்கப்ஸ் விளையாட்டுக் கழக அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில 3 இலக்குகளை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. அதிபட்சமாக முரளி ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியின் டிலான், அகில், கஜீவன் ஆகியோர் தலை ஓர் இலக்கை வீழ்த்தினர்.
87 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியன்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக அகில் 39 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் பிளைக்கப்ஸ் அணியின் சார்பில் யனுசன் 3 இலக்குகளை வீழ்த்தினார். ஆட்டநாயனாக பிளைக்கப்ஸ் அணியின் முரளி, தொடராட்ட நாயகனாக ஸ்ரார் அணியின் டிலான் ஆகியோர் தெரிவானார். (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 3
**அலையோசையின் கால்பந்தாட்டம்**
உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முள்ளியவளை வித்தியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாயாறு சக்தி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் செம்மலை உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட்டுவாகல் உதயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுப்பர்றாங் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
**துடுப்பாட்டம்**
இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டமொன்று இன்று இடம் பெறவுள்ளது. புதுக்குடியிருப்பு வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில் வெலிஓயா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# நவஜீவன்ஸ் அணி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 3
வல்வையின் கால்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
வல்வை விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்று றெயின்போ மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 23ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணியின் இளம் வீரர் கௌரிகன் முதல் கோலைப் பதிவுசெய்தார். மாற்றங்கள் இல்லாத நிலையில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது நவஜீவன்ஸ் அணி. (ம-108)



# முழங்காவில் ம.வி. முன்னிலை

கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரி அணிக்கும் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய அணிக்கும் இடையிலான 'தரும முழக்கம்' கிரிக்கெட் ஆட்டத்தில் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய அணி 50 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.
கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரி அணி 26.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. லோஜேந்திரன் 35 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.
பந்துவீச்சில் பிரணவன் 7 இலக்குகளையும் டினோஜன், டிலக்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய அணி 148 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக டிலக்சன் 30 ஓட்டங்களையும், கிருஸ்ணகுமார் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் சயந்தன், நிலவன் இருவரும் தலா 4 இலக்குகளையும் ஜதுசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரி அணி நாள் முடிவில் 5 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (ம-422)

# மங்களேஸ்வரா, உதயம் கால்பந்தில் வென்றன

உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் மங்களேஸ்வரா, உதயம் அணிகள் வெற்றிபெற்றன.
அலையோசையின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மங்களேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜங்கர்ஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் மங்களேஸ்வரா அணி வென்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உதயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் உதயம் அணி வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்ளேயின் பயிற்சியை புறக்கணித்தார் கோக்லி

மினி உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்பதற்காக இங்கிலாந்தில் முகாமிட்டுள்ளது இந்திய அணி. நேற்றுமுன்தினம் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் கும்ளே பயிற்சி கொடுக்க வந்தபோது அணித்தலைவர் கோக்லி பயிற்சியைப் புறக்கணித்துச் சென்றார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்திய அணியைப் பொறுத்த மட்டில் தெரிவுக் குழு தெரிவு செய்து கொடுத்த வீரர்களில் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் எவரெவர் இடம்பெறுவது என்ற முடிவை அணியின் தலைவரே எடுப்பார். இந்த விடயத்தில் கும்ளே அடிக்கடி குறுக்கீடு செய்தார். இதன் அடிப்படையில் கோக்லிக்கும் கும்ளேக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது என்று முன்னதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் நேற்றுமுன்தின பயிற்சி முகாமை கோக்லி புறக்கணித்தார் என்று வெளிவந்துள்ள செய்தி அந்த அணியில் முறுகல்கள் ஏற்பட்டுள்ளன என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது.

மினி உலகக்கிண்ணத் தொடர் நடைபெற்றுவரும் இந்தக் காலத்தில், இந்திய அணியில் அவ்வாறு முறுகல் ஏற்பட்டுள்ளமை உண்மையானால், அது அணிக்குப் பெரும் பாதகத்தை ஏற்படுத்தும் என்பது மட்டும் நிச்சயம். (ம)





## சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டம்

# ரியல் மட்ரிட் - யுவன்டாஸ் இறுதியில் இன்று மோதல்

ஐரோப்பிய கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில், இன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் ரியல் மட்ரிட் மற்றும் யுவன்டாஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

ரியல் மட்ரிட் ஸ்பெயினைச் சேர்ந்த கழகம், யுவன்டாஸ் இத்தாலியைச் சேர்ந்த கழகம். இரண்டுமே பலமான அணிகள் என்பதால் இன்றைய ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக மாறியுள்ளது.

யுவன்டாஸைப் பொறுத்தவரை அந்த அணியின் பலமாக போல் டைபாலா உள்ளார். யுவன்டாஸ் அணி தனது காலிறுதியில் பலம்மிக்க பார்சிலோனாவைத் தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதிபெற டைபாலா முக்கிய காரணமாக இருந்தார். இவரது ஆட்டத்தை "கால்பந்தாட்ட உலகின் எதிர்கால ஜாம்பவான்" என்று ஐரோப்பிய ஊடகங்கள் பாராட்டியிருந்தன.

ரியல் மட்ரிட்டைப் பொறுத்தவரை உலகின் ஆகச் சிறந்த கால்பந்தாட்ட வீரராகத் தெரிவாகியுள்ள ரொனால்டோ உள்ளார். அவரே அந்த அணியின் அரண், தூண், பலம் எல்லாம். ரொனால்டோவுக்கு பக்கபலமாக ராமோஸ், பேல், மார்செல்லோ, இஸ்கோ ஆகியோர் உள்ளனர்.

இந்தக் கூட்டணியை யுவஸ்டாஸ் தோற்கடிக்குமா என்பது சந்தேகம். ஆனால் அந்த அணியால் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்த முடியும் என்பது மட்டும் உண்மை. இலங்கை நேரப்படி இன்று நள்ளிரவு 11.45 மணியளவில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம)



# பிரான்ஸ் தொடரில் கேலப் முன்னேற்றம்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் முன்னணி வீராங்கனையான கேலப்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் 3ஆம் இடத்தில் உள்ளவரான ருமேனிய வீராங்கனை கேலப்பை எதிர்த்து ஜேர்மனியின் வீராங்கனை மரியா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கேலப். அவர் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்து இரண்டாவது செற்றையும் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்று நேர் செற்றில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார். (ம)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 3

இலங்கை வங்கியின் வருடாந்த விளையாட்டு விழா யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் விருந்தினராக வடமாகாண தலைமைச் செயலாளர் அ.பத்திநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

# கிளி. சதுரங்கம் இன்று ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூன் 3

கிளிநொச்சி மாவட்ட சதுரங்கத் தொடர் இன்றும் நாளையும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

7, 9, 11, 13, 15, 17, 20 ஆகிய வயது எல்லையின் கீழ் இருபாலர் பிரிவிலும் இந்தத் தொடர் நடைபெறவுள்ளது. 15, 17 ,20 வயதுப் பிரிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களும், 7, 9, 11, 13 வயதுப்பிரிவுகளில் குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற முடியும்.

போட்டிகளில் பங்குபற்ற வருபவர்கள் தமது வயதை உறுதிப்படுத்தும் வகையில் அதற்குரிய ஆவணங்களைக் கொண்டு வருதல் அவசியம் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். தேசியமட்ட போட்டிகள் எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் நடத்தப்படும் என்றும் அறியவருகிறது. (ம)






# மத்தியூஸ் இன்று இல்லை

மினி உலகக்கிண்ணத் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இலங்கை - தென்னாபிரிக்க அணிகள் மோதவுள்ளன. இன்றைய ஆட்டத்தில் மத்தியூஸ் பங்குபற்றுவாரா இல்லையா என்பது தொங்கு நிலையில் உள்ளது.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக மத்தியூஸ் இன்றைய ஆட்டத்தில் களமிறங்கும் வாய்ப்புக் குறைந்துள்ளது. இலங்கை கிரிக்கெட் சபையும் மத்தியூஸ் களமிறங்குவது சந்தேகம் என்று தெரிவித்துள்ளதால் அவர் இன்று களமிறங்கமாட்டார் என்றே கருதப்படுகிறது. மத்தியூஸ் களமிறங்காத பட்சத்தில் தரங்க அணியை வழிநடத்திச் செல்வார். (ம)

# பாகிஸ்தானுடன் இருதரப்புத் தொடரை ஆப்கானும் கைவிட்டது

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் கட்டடத் தொகுதியில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலை அடுத்து பாகிஸ்தானுடன் விளையாடத் திட்டமிட்டிருந்த இருதரப்புத் தொடர்களை ஆப்கானிஸ்தான் கைவிட்டது. இந்தத் தாக்குதலில் 90பேர் உயிரிழந்தனர். கிட்டத்தட்ட 400 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஹக்கானி ஆயுதக் குழுவே தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று [illegible] கிக்கிறது. இந்தக் [illegible] மையகமாகக் கொண்டு செயற்படுவதால் இந்த விடயத்தில் பாகிஸ்தான் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு பட்டிருக்கலாம் என்றும் ஆப்கானிஸ்தான் குற்றம் சாட்டியது. இந்தப்பின்னணியிலேயே பாகிஸ்தானுடன் [illegible] இருதரப்புத் தொடர்கள் [illegible] ஆப்கானிஸ்தான் கைவிட்டுள்ளது. பாகிஸ்தானுடன் இருதரப்புத் தொடரில் இந்திய அணி விளையாடுவதில்லை. இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபையும் இந்த முடிவை எடுத்துள்ளமை பாகிஸ்தானுக்குப் பின்னடைவே. அதேநேரம் இந்த முடிவு வளர்ந்துவரும் கத்துக்குட்டி அணியான ஆப்கானிஸ்தானுக்கும் பின்னடைவு என்று கருதப்படுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிளிஸ்கோவா அபார ஆட்டம்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் பிளிஸ்கோவா வெற்றி பெற்றார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் நிலை வீராங்கனையான செக்குடியரசின் பிளிஸ்கோவாவை எதிர்த்து ரஷ்யாவின் அலெக்ஸ்ட் குரோவா மோதினார். முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பிளிஸ்கோவா. இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் குரோவா. மூன்றாவதும் இறுதியானதுமான செற்றை 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய பிளிஸ்கோவா 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார். (ம)

**வாகன விற்பனை**

TATA XENON (வெள்ளை) புதிய நிலையில் உள்ள
குறைந்தளவு தூரமே ஓடிய நிலையிலுள்ள SINGLE CAB
தொடர்பு - 077 7323 156

**பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு**

சர்வதேச ரீதியாக இயங்கிவரும் எமது Teleseen நிறுவனமானது இலங்கையில் (North side) இல் 12 புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளது.
அக் கிளைகளுக்குரிய
- ✓ அலுவலர்கள்
- ✓ மேற்பார்வையாளர்கள்
- ✓ உதவி முகாமையாளர்கள்
- ✓ முகாமையாளர்கள்

போன்ற 30 இற்கும் மேற்பட்ட பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.
குறிப்பு: O/L, A/L படித்தவர்களும் தகுதிகாண் நேர்முகத்தேர்வின் மூலம் உள்வாங்கப்படுவர்.
**இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.** **077 298 6763, 077 062 1631**

**அச்சகத்துக்கு கணினி இயக்குநர்கள் தேவை**

அச்சக கணினி வேலையில் முன் அனுபவம் உள்ளவர்களும், பயிலுநர்களும் (பெண்பிள்ளைகள்) தேவை.
04.06.2017 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 - 12.00 மணிக்குள்
சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.
**சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்**
**பலாலி வீதி, கோண்டாவில்.**
077 306 8982

**குவைட் நாட்டில் அதிஉயர் சம்பளத்துடன் உடனடி வேலை வாய்ப்பு**

குவைட் நாட்டில் உள்ள முன்னணி K.F.C நிறுவனத்தின் கீழ்காணும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.
- Teme Members (Male /Female)
  Waiter,Steward, Cashier, Counterboy, Office boy, Kitchen Helper
- Age Between 21 - 35
- அடிப்படைச் சம்பளம் 42800 + ot +Food
  தங்கும் இடம் மருத்துவம், உணவு என்பன முற்றிலும் இலவசம்.
- எதிர்வரும் 10 ஆம் திகதி வெளிநாட்டவர்களால் எமது தலைமை நிறுவனத்தில் நேர்முகத்தெரிவு நடைபெறும்.

Job Lanka International
T.P. 077 721 5291, 011 524 4146

**Spoken English - சுன்னாகத்தில்**

அடிப்படையிலிருந்து ஆங்கிலத்தைப் பேசிப் பழக
2 மாத பயிற்சிப் பட்டறை (Workshop)
மிகக் குறைந்த கட்டணம் 100% உத்தரவாதம்
ஆரம்பம் :- 12-06-2017 9.00 am (Week Days)
11-06-2017 9.00 am (Weekend Days)
10ஆம் திகதிக்கு முன்பு அனுமதிகளைப் பெற்றுக்கொள்க
ELAS
122/1, K.K.S.Rd, Chunnakam
(above DFCC Bank)
021 224 3660 / 076 697 3040 / 077 050 4446

மழை குறுக்கீடு செய்ததால்

# தோல்வியிலிருந்து தப்பித்தது ஆஸி.

மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் மழை குறுக்கீடு செய்ததால் நியூசிலாந்தின் திடீர் எழுச்சி வீணானது. இதனால் தோல்வியின் பிடியில் இருந்து ஆஸ்திரேலிய அணி தப்பித்துக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 40 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆரம்ப வீரரான கப்ரில் ஆட்டமிழந்தார். மழை குறுக்கீடு செய்ததால் ஆட்டம் 46 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டது.

ரோஞ்சி, வில்லியம்சன் இணைந்து ஆட்டத்தில் நியூசிலாந்தின் ஆதிக்கத்தை வலுவாக நிலைநாட்டினர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். ஆடுகளம் துடுப்பாட்டத்துக்குச் சாதகமானது என்பதால் அடித்தாடினார் ரோஞ்சி. அவர் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வில்லியம்சன் சதம் கடந்தார். அவர் 100 ஓட்டங்களுடன் ரண்அவுட் செய்யப்பட்டார். 45ஆவது பந்துப்பரிமாற்றத்தில் மூன்று இலக்குகளை அள்ளினார் ஹசில்வூட். முடிவில் 291 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது நியூசிலாந்து அணி.

பந்துவீச்சில் ஹசில்வூட் 6 இலக்குகளையும், ஹஸ்ரிங்ஸ் 2 இலக்குகளையும், கம்மின்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆஸ்திரேலியா துடுப்பெடுத்தாட முன்னர் இரண்டாவது தடவையாக மழை குறுக்கிட்டது. இதனால் அந்த அணிக்கு 33 பந்துப்பரிமாற்றங்களில் 235 ஓட்டங்கள் இலக்காகக் கொடுக்கப்பட்டது. அந்த அணி 3 இலக்குகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மூன்றாவது முறையாகவும் மழை குறுக்கிட ஆட்டம் கைவிடப்பட்டது. இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. (ம)






# மொனாக்கோ கார்ப் பந்தயம்; ஜேர்மனின் வெட்டல் மகுடம்

மொனாக்கோ கார்ப் பந்தயத் தொடரில் ஜேர்மனியின் வீரரான செபஸ்டியன் வெட்டல் வெற்றிபெற்றார். இந்த வெற்றியின் மூலம், நடப்பு வருட கார்பந்தயத் தொடரில் ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தனக்கும் ஹமில்டனுக்கும் இடையிலான புள்ளிகளின் வித்தியாசத்தை 25ஆக அதிகரித்தார்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பிரிட்டன் வீரர் லூயிஸ் ஹமில்டன் ஏழாம் இடத்தையே பெற்றிருந்தார். பந்தய நாளுக்கு முதல்நாள் நடைபெற்ற தகுதிச் சுற்றில் ஹமில்டன் 13ஆம் இடத்துக்கே வந்திருந்தார். இதனால் அவர் பந்தயத்தை 13ஆவது இடத்திலிருந்து ஆரம்பித்திருந்தார். இதனால் ஹமில்டனால் 7ஆவது இடத்தையே பிடிக்க இயன்றது. இதுவரை முடிவடைந்த 13 சுற்றுக்களின் நிறைவில் 129 புள்ளிகளுடன் வெட்டல் முதலிடத்தில் உள்ளார். 104 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஹமில்டன் உள்ளார். மூன்றாமிடத்தில் பின்லாந்தின் வல்ட்டேரி போத்தாஸ் உள்ளார். உலக கார்ப்பந்தயத் தொடர் முடிவடைய இன்னும் 7 சுற்றுக்கள் எஞ்சியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்தியா - பாகிஸ்தான் மோதல் தனித்துவம் வாய்ந்தது இல்லை

சொல்கிறார் அசார் அலி



மினி உலகக்கிண்ணத் தொடரில் நாளை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ள நிலையில், "இந்த ஆட்டம் வழக்கமான ஒன்றுமட்டுமே. இது தனித்துவம் வாய்ந்தது அல்ல" இவ்வாறு தெரிவித்தார் பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர் அசார் அலி.

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையில் நிலவும் அரசியல் குழப்பங்கள் காரணமாக இரு தரப்புத் தொடர் பாதிப்படைந்துள்ளது. பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் பொதுவான தொடர்களிலேயே இந்த இரு அணிகளும் மோதுகின்றன. நாளைய ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது. இந்த நிலையில் இது தனித்துவம் வாய்ந்த ஒன்றல்ல என்று தெரிவித்தார் அசார் அலி.

"இந்தியா - பாகிஸ்தான் இடையிலான ஆட்டம் ஏனைய ஆட்டங்களைப் போன்று சாதாரண ஆட்டமே. இந்தத் தொடரில் நீண்ட தூரம் செல்ல வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். இதற்கு முன் நாங்கள் சிறந்த கிரிக்கெட்டை ஆடியுள்ளோம். ஆகவே, எங்களுடைய சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவோம்" என அசார் அலி மேலும் தெரிவித்தார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org